விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# ஐ.நா தோல்வி

## இறுதி உள்ளக அறிக்கையை வெளியிட்டது இன்னர் சிற்றி

*(கொழும்பு)*, இலங்கை இறுதிப் போர் தொடர்பில் இராஜதந்திர சட்ட மற்றும் நடவடிக்கைகளை அமுலாக்கும் கொள்ளளவு போன்ற விடயங்களில் ஐ.நா சபை தோல்வி கண்டுள்ளது என இன்னர் சிற்றி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.நாவின் உள்ளக இறுதி அறிக்கையை இன்னர் சிற்றி பிரஸ் நேற்று வெளியிட்டுள்ளது. அதிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கையின் இறுதிப் போரின் ஐக்கிய நாடுகள் சபை தமது நடவடிக்கைகளில் தோல்வி கண்டமை காரணமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர்.


இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஜோன் பெற்றியின் தலைமையில் தனி ஆள் விசாரணைக் குழுவை அமைத்தார்.

பெற்றி தமது ஆராய்வின் முடிவில் இலங்கையின் இறுதிப் போரின் போது ஐக்கிய நாடுகள் சபை தமது கடமையில் இருந்து தவறிவிட்ட தாக ஒப்புக்கொண்ட அறிக்கையை பான் கீ மூனிடம் சமர்ப்பித்தார்.

இதனை பான் கீ 23-ம் பக்கம் பார்க்க

# 25 உறுப்பினர்களுக்கும் அமைச்சுகளின் பொறுப்பு

## முதலமைச்சர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் தவிர்ந்த 25 உறுப்பினர்களிற்கும் அமைச்சுக்களின் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மும்மத வழிபாடுகளில் ஈடுபடும் முகமாக யாழ்.பெரிய முஹதின் ஜும்மா பள்ளிவாசலுக்கு தமிழ்க கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர். இதன்போதே அவர் அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபையில் சட்டப்படி 5 அமைச்சர்களை நியமிக்க முடியும். இதில் ஒரு அமைச்சராக முதலமைச்சர் இருப்பார்.

அந்த வகையில் வடக்கில் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 உறுப்பினர்களில் 25 பேர் வேலையில்லாமல் இருப்பார்களா எனக் கேள்வி எழலாம்.

ஆகையினால்தான் 25 உறுப்பினர்களுக்கும் ஏதோவொரு அமைச்சு சார்ந்த அலகுகள், பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் அமைச்சுப் பதவி வழங்காமையானது 24-ம் பக்கம் பார்க்க

# 9 மாகாண சபை உறுப்பினரும் முள்ளிவாய்க்காலில் பதவியேற்பர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளாத 9 மாகாண சபை உறுப்பினர்களும் முள்ளிவாய்க்காலில் நாளை திங்கட்கிழமை பதவியேற்க உள்ளனர் என கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளாத உறுப்பினர்கள் அனைவரும் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசியல் காரணங்களைக் கருத்தில் கொண்டு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் ஆகியவற்றின் மாகாண சபை உறுப்பினர்கள் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்காமல் புறக்கணித்திருந்தனர்.

இப் புறக்கணிப்பையடுத்து இவர்கள் எங்கு யார் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்வது தொடர்பில் சம்பந்தப்பட்டோரால் கூறப்படவில்லை.

எனினும் இவர்களின் பதவியேற்பு முல்லைத்தீவில் நடைபெறவுள்ளதை 02-ம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறது தமிழரசுக் கட்சி

## மூன்று கட்சிகள் கூட்டாக குற்றச்சாட்டு



வட மாகாண சபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளாத மூன்று கட்சிகள கூட்டாகத் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணம் ரல்கோ விருந்தினா விடுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு

(யாழ்ப்பாணம்)

எம்மைப் புறந்தள்ளிவிட்டு வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் தன்னிச்சையாக தமிழரசுக் கட்சி இயங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் 23-ம் பக்கம் பார்க்க

# அரசியலமைப்பை மீறும் வடக்கு முதலமைச்சர்

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

வடக்கின் முதலமைச்சருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின் போது இலங்கையின் தேசியக் கொடி வைக்கப்படாமை குறித்து ஜாதிக ஹெல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த செயலின் மூலம், தாம் இலங்கையின் தேசியக் கொடியை புறக்கணிப்பதாக வடக்கு மாகாண சபை இந்தியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்தஸ்ரீ வர்ணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஜனாதிபதியின் முன்னால் சத்தியப் பிரமாணம் செய்த போது இலங்கையின் அரசியலமைப்புக்கு எதிராக செயற்பட மாட்டேன் என்று உறுதியளித்தார்.

எனினும் அடுத்த சில மணித்தியாலங்களிலேயே அவர் அதனை புறக்கணித்துள்ளதாக வர்ணஸ்ரீ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த செயலின் மூலம் இலங்கையில் தனிநாடு ஒன்றை இந்தியாவின் உதவியுடன் அமைப்பதற்கு விக்னேஸ்வரன் வழிகோலியுள்ளதாக வர்ணஸ்ரீ குறிப்பிட்டுள்ளார். (எ-2)

# மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் கொழும்புத்துறை மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஜோசப் பத்மநாதன் (வயது 59) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்துக்குள்ளானவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு 7.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# திடீர் கடல் கொந்தளிப்பு படகுகள் பெரும் சேதம்

## வடமராட்சியில் சம்பவம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கடல் திடீரென கொந்தளித்ததினால் அப்பகுதி கடற்றொழிலாளர்களின் படகுகளும் இயந்திரங்களும் கடல் அலையுடன் அள்ளுண்டு சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரைக்குமான கடற்பிரதேசத்தில் தொழில் நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு ஏதுவாக மீனவர்கள் தமது படகுகளையும் உபகரணங்களையும் கடலின் கரைப் பகுதியில் வைத்துவிட்டுச் செல்லுவது வழமை.

இவ்வாறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளில் சுமார் 30க்கும் மேற்பட்ட படகுகள் கடல் அலையினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சில படகுகளும் இயந்திரங்களும் துண்டு துண்டாக சேதமடைந்த நிலையில் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் சில படகுகளை மீனவாகள் பல மைல் தூரம் தேடிச் சென்ற பின்னர் எடுத்துள்ளனர்.

ஏனைய படகுகளை காணவில்லையெனவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ திணைகளம், ஏனைய உரிய அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். 24-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 மாகாண சபை...

சுரேஷ் பிரேமச்சந்திரனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் யார் முன்னிலையில் பதவியேற்பு என்பதைக் கூறுவதற்கு அவர் மறுத்துவிட்டார்.

போரில் மிகவும் பாதிப்படைந்த மற்றும் இறுதிப் போர் நடைபெற்ற இடமான முல்லைத்தீவு மாவட்டத்தில் எங்கு பதவியேற்பது என்பது ஆராயப்பட்டுள்ளது.

இதன்பின்னர் இறுதிப் போர் நடைபெற்ற இடம் என்பதாலும் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதன் சாட்சியாக உள்ளதும் அவலங்களைச் சுமந்த மண் என்பதாலும் முள்ளிவாய்க்கால் மண்ணில் பதவியேற்பு இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

(எ-4)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5110)

**வெறும் 7 இலட்சம் மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாட்டில் படிக்க, மாதம் 125000 உழைக்க அரியவாய்ப்பு**

உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்

சட்ட ஆலோசனைகளிற்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5170)

**காணி விற்பனைக்கு**

வதிரி, மாலி சந்தி வீதியில், வைரமுத்து கராச்சுக்கு எதிராகப் போகும் செட்டி குடியிருப்பு வைரவ கோவில் வீதியில் 3½ பரப்பு நிலம் படத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0718 163 018, 0114 578 366. தரகர்கள் வேண்டாம்.

(சி-5171)

**CERTIFICATE IN OFFICE MANAGEMENT**

நவீன அலுவலகங்களில் பணியாற்றுவதற்கான நுட்பங்கள் அடங்கிய அலுவலக முகாமைத்துவ கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தகைமை : க.பொ.த (உ/த) தோற்றியிருத்தல் வேண்டும்.**

பாடநெறி கட்டணம் : **இலவசம்**

அலுவலக உபகரணங்களின் பிரயோகம் மற்றும் களப்பயிற்சிகளும் வழங்கப்படும்

விபரங்களுக்கு :

**AGARAM MANAGEMENT SYSTEM**
No. 107A 2/1, Kandy Road, Jaffna.

(4163)

**இத்தாலி சட்ட ரீதியாக செல்ல அரிய வாய்ப்பு**

ஒரு வருட விசா நீடிக்கப்படக் கூடியது

சட்ட ஆலோசனைகளிற்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5170)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம்

புகையிரத நிலையம் அருகில் ஏழு அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.

(4157)

**தொடர்புகளுக்கு:**
**தொ.பே: 0775751730**

**சைப்பிரசில் - நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை**

நியூசிலாந்தில் 2 வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற வாய்ப்பு

PR பெற்றால் அவுஸ்திரேலியா குடிபெயரலாம்.

சைப்பிரஸ் பகுதிநேரமாக ஒரு இலட்சம் சம்பாதிக்கலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5170)

**காலத்தை வீணடிக்காதீர்கள்.** வாய்ப்புகள் எப்போதும் வருவதில்லை

**மலேஷியா மற்றும் சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்புகள்**
**நம்பிக்கையான நீண்டகாலத் தொடர்புள்ள நிறுவனங்கள்**

மலேஷியாவின் முன்னணி நிறுவனமான GENTING PLANTATION இல்
பொதி செய்தல், மேற்பார்வையாளர், சாரதி ஆகியோருக்கான வேலைவாய்ப்புகள்

1. அடிப்படைச் சம்பளம் ரூபா. 42,000 - 84,000 வரை (RM 1000-2000) (இரண்டு வாரகால தகுதிகாண் காலத்தின் பின்னர் தகுதிக்கேற்ப அடிப்படைச் சம்பள உயர்வு.
2. 8 மணி நேர வேலை (தினமும் குறைந்தது 4 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலைக்கு உத்தரவாதம். மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 210)
3. வாரம் ஒரு நாள் விடுமுறை.
4. ஒப்பந்த காலம் 3 வருடங்கள். (ஒரு வருடம் பூர்த்தியான பின்னர் நாட்டுக்கு வந்து செல்லலாம். விரும்பிய காலம் வரை ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்ளலாம்.)
5. தங்குமிடம், மருத்துவம். போக்குவரத்து இலவசம்.
6. கல்வித் தகைமை மற்றும் ஆங்கில அறிவு அவசியம் இல்லை.
7. வயது எல்லை 18-45.
8. வெளிநாட்டு அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**கட்டணம் ரூ. 280 000/- மட்டுமே**

மேலதிக தகவல்களுக்கு www.gentingplantations.com எனும் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

சவூதி அரேபியாவின் முன்னணி நிறுவனமான
HYPER PANDA SUPERMARKET இல் வேலைவாய்ப்புக்கள்

1. அடிப்படைச் சம்பளம் ரு. 49000- 65000 வரை (SR-1400-1900) நேர்காணலின் பின்னர் தகுதிக்கு ஏற்ப அடிப்படைச் சம்பள உயர்வு)
2. 8 மணி நேர வேலை (மேலதிக வேலைநேரம் உண்டு)
3. வாரம் ஒரு நாள் விடுமுறை.
4. ஒப்பந்த காலம் 2 வருடங்கள்
5. தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
6. ஆங்கில அறிவு அவசியம்.
7. வயது எல்லை 18-28
8. திறமைக்கேற்ப பணி உயர்வு, சம்பள உயர்வு வழங்கப்படும்.
9. மத்திய கிழக்கு நாடுகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**கட்டணம் ரூ. 70 000/- மட்டுமே**

மேலதிக தகவல்களுக்கு www.panda.com.sa எனும் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

★ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளன. தொலைபேசியினூடாக முன் அனுமதி பெற்று அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

GLOBAL COLLEGE OF HIGHER STUDIES
இல. 788C, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0777805286, 021 222 8981

(4159)

ASIAN LANKA RECUITMENT SERVICE (LIC 2140 (PVT) LTD
இல. 34, பிராங்க் போர்ட் பிளேஸ், கொழும்பு - 04


# ஆத்ம சாந்தி அழைப்பு

தோற்றம்
1952 - 08 - 10



மறைவு
2013 - 09 - 13

சித்தன்கேணியை சேர்ந்த
அமரர் Lady Lion

## தவக்குமாரன் பரமேஸ்வரி

13.09.2013 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.10.2013 இன்று மு.ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நாளில் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவோர்.

- இனிய வாழ்வகம் விழிப்புலன் அற்றோர் இல்லம் (புதுக்குடியிருப்பு)
- அன்பு சிறுவர் இல்லம் (முத்தையன்கட்டு)
- சிவபூமி முதியோர் இல்லம் (தொல்புரம்)
- பரமானந்தா முதியோர் இல்லம் (கரவெட்டி)

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
கணவர் Lion M. தவக்குமார்
நிசாந்தன் அஜந்தினி (பிரான்ஸ்)
சிவரூபன் சிவந்தினி
ரூபன் பல்பொருள் வாணிபம்
நிருமெடிக்கல் & கிளினிக்

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(C-5134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிஸ்டிக் பிலிம்ஸ் சார்பாக அவுஸ்திரேலியா வாழ் தமிழர் எம்.எஸ்.ஆனந்த் தயாரிக்கும் படம் யாழ்.

இந்த படத்தில் வினோத், டேனியல் பாலாஜி, சசி ஆகியோர் கதாநாயகர்களாகவும், கதாநாயகிகளாக வீமா, நீலிமா, மிஷா ஆகியோரும் நடிக்கிறார்கள். இவர்களுடன் குழந்தை நட்சத்திரமான ரக்ஷனா நடிக்கிறாள்.

இத்திரைப்படத்தின் கதை ஆரம்பம் முதல் இறுதிவரை இலங்கையிலேயே நடக்கிறது. இதில் இந்திய, தமிழ் கதாபாத்திரங்கள் எதுவும் கிடையாது. அனைத்து கதாபாத்திரங்களும் ஈழத்தமிழர்களே.

## பாகுபலி படத்தில் நீலாம்பரி


படையப்பா நீலாம்பரியாக மீண்டும் அவதாரம் எடுக்கவுள்ளாராம் ரம்யாகிருஷ்ணன். படையப்பாவில் நீலாம்பரியாக கலக்கிய ரம்யா கிருஷ்ணன் மீண்டும் அந்த வாய்ப்பு கிடைக்காதா என்று எதிர்பார்த் திருந்தார். இப்போது அவரது எதிர்பார்ப்பு நிறைவேறிவிட்டதாம்.

நான் ஈ இயக்குநர் ராஜமௌலி இயக்கத்தில் அனுஷ்கா நடிக்கும் பாகுபலி எனும் சரித்திரப்படத்தில் ராஜ மாதாவாக நடிக்கிறாராம்.

படத்தின் கதையை நகர்த்தும் வில்லித்தனமான இந்த கதாபாத்திரத் திற்கு பல நடிகைகளை தேர்வு செய்து பார்த்த ராஜமௌலிக்கு, யாரும் சரிப்படாததால் படையப்பா நீலாம்பரி கதாபாத்திரம் ஞாபகம் வர உடனே ரம்யாகிருஷ்ணனை தெரிவுசெய்து விட்டாராம்.

மொத்தத்தில் தன்னுடைய ஆசை நிறைவேறிவிட்டதால் குஷியில் இருக்கிறாராம் நீலாம்பரி.

## பாட்டுப் பாடும் சந்தானம்



சந்தானம், தற்போது ஸ்ரீகாந்த் நாயகனாக நடிக்கும், நம்பியார் படத்தில், அவருக்காக ஒரு பாடல் பாடியுள்ளார். ஒரு ஹீரோவுக்காக, நகைச்சுவை நடிகர் பின்னணி பாடியிருப்பது இதுவே முதன்முறை என்றும் சொல்கின்றனர். மேலும், தன் நகைச்சுவைத் தனத்தை ஓரங்கட்டிவிட்டு, ஸ்ரீகாந்த்துக்காக அவர் சாயலில் பாடியுள்ளாராம் சந்தானம். அதுமட்டுமின்றி, இந்த பாடலை, 15 நிமிடத்தில், பாடி முடித்தது அனைவருக்கும் இன்ப அதிர்ச்சி .

## மலையாளப் படத்தில் லட்சுமிமேனன்



மலையாள படம் ஒன்றில் ப்ருதிவிராஜுக்கு ஜோடியாக லட்சுமி மேனன் நடிக்கிறார். மொழி, அபியும் நானும், பயணம் போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர். தற்போது இவர் ஒரு மாறுதலுக்காக மலையாள படம் ஒன்றை இயக்கவிருக்கிறார். இந்தப் படத்தில் ப்ருதிவிராஜ் நாயகனாக நடிக்கிறார்.

இப்படத்தை தமிழிலும் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதால் இரண்டு மொழியிலும் நன்கு பரீட்சயமான நடிகை நடித்தால் நன்றாக இருக்கும் என எண்ணியிருக்கிறார்கள். இதற்காக சில நடிகைகளை பரிசீலனை செய்தபோதுதான் லட்சுமிமேனன் நினைவுக்கு வந்தாராம்.

உடனே ராதாமோகன் அவரிடம் பேச, ஓ.கே சொல்லி விட்டாராம் லட்சுமிமேனன். இந்தப் படத்துக்காக லட்சுமிமேனனுக்கு பெரிய சம்பளம் பேசப்பட்டுள்ளதாம்.



**படம் : பப்பாளி**

நடிகர் : செந்தில்(மெர்சி), நடிகை : இஷா, இயக்குநர் : கோவிந்த[illegible]

## கோவை விழாவுக்கு ரஜினி வரார்

மருத்துவ சிகிச்சைக்கு ரஜினி காந்த் செல்வதால் கோவா படவிழா வில், நடிகர் ரஜினிகாந்த் கலந்து கொள்ளமாட்டார் என்று படவிழா அமைப்பாளர் கூறினார்.

2013ஆம் ஆண்டுக்கான 44 ஆவது சர்வதேச படவிழா கோவா வில் நவம்பர் 20ஆம் திகதி தொடங்கி 30ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இது தொடர்பாக கோவா பொழுது போக்கு சங்க துணைத் தலைவர் விஷ்ணு வாக் கூறுகையில்,

இந்த படவிழாவை தொடங்கி வைக்க வரும்படி, நடிகர் ரஜினி காந்துக்கு அழைப்பிதழும், கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டது. அவருடைய உடல்நிலை காரணமாக இந்த படவிழாவில் அவர் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிகிறது.

நவம்பர் 20ஆம் திகதி நடைபெறும் விழாவை தொடங்கி வைக்க வரும்படி ரஜினிகாந்தை நாங்கள் அழைப்பு விடுத்தோம். அந்த அழைப்பை ஏற்று அவர் விழாவில் கலந்துகொள்வார் என்று நாங்கள் உறுதியாக சொல்ல முடியாது.

அதேநாளில், அவர் மருத்துவ சிகிச்சைக்காக செல்வதால், கோவா படவிழாவில் அவர் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், அவர் இந்த விழா வுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறோம். இதற்காக அவருக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டு இருக்கிறது என்றார்.

## பெயரை மாற்றினார் சுனைனா

காதலில் விழுந்தேன் படம் மூலம் 2008 இல் அறிமுகமானவர் நடிகை சுனைனா. மாசிலாமணி, யாதுமாகி, வம்சம்,திருத்தணி, நீர்ப்பறவை, உட்பட பல படங்களில் நடித்து உள்ளார். அஜ்மலுடன் கதிர்வேல என்ற படத்திலும், நடிகர் ஸ்ரீகாந்துடன் நம்பியார் என்ற படத்திலும் நடித்து வருகிறார்.

இவர் தனது பெயரை அனுஷா என்று மாற்றி உள்ளார் இது குறித்து அவர் கூறுகையில்,

எனது குழந்தை பருவம் முதல் எனக்கு நன்கு தெரிந்த பெயர் சுனைனா ஹரீஸ் யெல்லா.எனது பெற்றோர் மீது உள்ள பாசத்தால் எனது பெயருக்கு பின்னால் அவர்கள் பெயரை சேர்த்து உள்ளேன். தற் போது நான் எனது ஜோதிடருடன் ஆலோசித்தபோது அவர் எனது பெயரை மாற்றினால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என கூறினார்.

ஆங்கில எழுத்து எ வில் ஆரம்பிக்கும்படி பெயர்வைக்க கூறினார். எனது பெயரை எனது நன்மைக்காக எனது பெற்ரோர் மாற்ற சம்மதித் தனர்.என் அதிகார பூர்வ பெயர் அனுஷா., நான் இது ஆரம்பத்தில் கடின மாக இருக்கும் உணர்ந்தேன், ஆனால் இப்போது என் பெற்றோர் மற்றும் நண்பர்கள் என்னை அனுஷா என்று அழைக்கிறார்கள். எனக்கு புதிய பெயர் பழக்கமாகிவிட்டது. எனக்கு இது சரியாக உள்ளது என உணர் கிறேன்.

ஒரு பெயரில் என்ன இருக்கிறது? நிஜ வாழ்க்கையில் என் பாத்திரம் அப்படியேதான் இருக்கும் இவ்வாறு அனுஷா கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு விற்ற பெண்ணின்

# பிள்ளைகளை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க நீதவான் உத்தரவு

(கரணவாய்)


கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பப் பெண் ஒருவரை பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எச்சரித்து விடுதலை செய்ததுடன் அவரின் இரண்டு பிள்ளைகளையும் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலை சக்கு சம்பா பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது குறித்த குடும்பப் பெண் கடந்த 8 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது குறித்த பெண் குடும்பத்தை வழிநடத்தி செல்வதற்கு வாழ்வாதாரம் இல்லையெனவும் தனது இரண்டு பிள்ளைகளையும் வளர்ப்பதற்காகவுமே கசிப்பு உற்பத்தியில்ஈடுபடுவதாகவும் நீதவான் முன்னிலையில் தெரிவித்தார்.

இதனையடுத்துகுற்றஞ்சாட்டப்பட்டபெண்ணை எச்சரிக்கை செய்து விடுவித்ததோடு அவரின் இரண்டு பிள்ளைகளையும் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்குமாறும் நீதவான் தீர்ப்பளித்தார். (அ-9-60)



நன்றி: மிரர்

# ஆயுதம் ஏந்திப் போராடியமையாலேயே நாம் ஜனநாயக வழியில் போராட முடிகிறது

## ஆயுத போராட்டம் விமர்சனத்திற்குரியதல்ல என்கிறார் சுரேஷ் எம்.பி.

***(யாழ்ப்பாணம்)*** **மக்களின் இலட்சியங்களை தம் கனவாக கொண்டு போராடிய போராளிகளின் போராட்டத்தை கொச்சைப்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

தற்போது ஜனநாயக வழிமுறையிலான இராஜதந்திரப் போரை முன்னெடுக்கின்றோம் எனக் கூறுகின்றனர்.

இவ் இராஜதந்திரத்துக்கு எமது போராளிகளின் ஆயுதப்போராட்டம் தான் வழிவகுத்தது என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசியல்வாதிகளில் ஒரு சிலர் தாம் ஆயுதப் போராட்டத்தை நடத்தியவர்கள் என்றும் தற்போது அதனைக் கைவிட்டு ஜனநாயக நல்வழியில் செல்கின்றனர் எனவும் கூறிவருகின்றனர். இக்கருத்தையே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனும் பதவியேற்பு விழாவில் கூறியுள்ளார்.

இதன் அர்த்தம் என்ன? ஆயுதமேந்தியபோது நாம் தீயவர்களாகவா இருந்தோம்? போராளிகள் எதற்காக தமது உயிர்களை இழந்தார்கள்?

தமிழ் மக்களின் உரிமைகளை எந்தவழியில் வென்றெடுக்க முடியுமோ அந்த வழியையே அவர்கள் தெரிவு செய்தனரேயன்றி தமது விருப்பப்படி அவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் போராளிகளாகத்தான் இருந்துள்ளனர். அவர்களின் குடும்பங்களில் இழப்புக்கள் ஏற்பட்டும் உள்ளன.

அவர்களின் தியாகங்களும் போராட்டமுமே எம்மை இன்று சர்வதேசம்வரை கொண்டு சென்றுள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத்தான் நாம் இன்று ஜனநாயக முறையில் போராட முடிந்துள்ளது. தேர்தல் மேடைகளில் ஆயுத மேந்தியவர்களை மாவீரர் என்று கூறியவர்கள் அந்த மாவீரர்களை தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஏற்க மறுப்பது ஏன்?

ஆகவேதான் ஆயுதப் போர்ாட்டத்தை கொச்சைப்படுத்துவது தமிழ் மக்களைத் துன்புறுத்துவது போன்றது என ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஆயுதமேந்தி போராடிய குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரை அப்போதைய தலைமை ஏற்றுக் கொண்டதுதானே என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (அ-4)

## வாணி விழாவும் பரிசளிப்பும்


(மானிப்பாய்)

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் வாணி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் நா.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபர் த.சண்முக சுந்தரமூர்த்தி, கலாவித்தகர் குகநாதன், ஆசிரியர் நா.சத்தியவேந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் பட்டிமன்றம், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளதுடன், நவராத்திரியை முன்னிட்டு இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட நாவன்மை மற்றும் பண்ணிசைப் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ-9-23)



மருதனார்மடம் சந்தியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி விபத்தில் முச்சக்கரவண்டி தடம்புரண்டதுடன் இவ்விபத்தில் இரு வாகன சாரதிகளும் காயமடைந்தனர். காங்கேசன்துறை வீதியில் தொடர்ந்து சில தினங்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



சுன்னாகம் வடக்கைச் சேர்ந்த ஓய்வுநிலை உடற் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சின்னத்துரை மகாலிங்கம் கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (அ-5)

# ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்தமையை வாழ்த்துகின்றோம்

## யாழ்.முஸ்லிம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் வட மாகாண சபையின் முதலமைச்சராக இலங்கை ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளதை வாழ்த்துவதாக யாழ். மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வின் அமைப்பின் செயலாளர் எம்.எம்.சபூர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதியின் முன் சத்தியப் பிரமாணம் செய்துள்ளதை வரவேற்கிறேன். இது அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது. இலங்கை ஜனாதிபதியுடனும் அரசுடனும் இணைந்து செயற்படுவதன் மூலம் வட மாகாண சபையின் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் விரைவில் காணமுடியும் என்பதை எதிர்வு கூறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் ஆட்சியின்போது யாழ். முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதாரம் மற்றும் தமிழ், முஸ்லிம் ஒற் றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் உழைப்பார்கள் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தெல்லிப்பழை மகாஜனா ஐந்து பதக்கங்களை பெற்றது



(மானிப்பாய்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 5 பதக்கங்களையும் இரண்டு நிற விருதுகளையும் பெற்றுள்ளது.

கடந்த 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நடைபெற்ற இப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 2 தங்கங்கள், 2 வெள்ளிகள், ஒரு வெண்கலம் உட்பட ஐந்து பதக்கங்களையும் இரண்டு நிற விருதுகளையும் பெற்றுக் கொண்டது.

தேசியமட்ட ரீதியாக பதக்கங்கள், நிற விருதுகள் பெற்ற வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி பதில் அதிபர் எஸ்.சயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்து கொண்டு சிறப்பித்தார். (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
**T.P : 021 321 0815, 021 567 1532**

**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**

(சி-5002)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நீல நிற YAMAHA FAZER WR-XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மலிவான நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

**விலை : 260,000/-**

தொடர்புகளுக்கு : **0779107153**

**A.G. செல்வம்**
107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

(4143)

# இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 12, யாத்திரிகர்கள் 10 பேர்,
ஆரம்பம் 25.10.13 - 05.11.13

## தரிசிக்கும் ஆலயங்கள்

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார் பட்டி, குன்றக்குடி முருகன், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன், வரதராஜப் பெருமாள், நவசீரடி பாபா, பொற்கோவில், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருவெண்ணாமலை, சிதம்பரம், நவக்கிரக ஆலயங்கள் 9, இராகு, கேது, சுக்கிரன், செவ்வாய், புதன், சூரியன், சந்திரன், வியாழன், சனி பகவான், வைரவன்பட்டி, குபேரன் கோயில், தஞ்சாவூர், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரங்குன்றம், அழகர்கோயில், பழமுதிர்ச்சோலை, நாகாத்தம்மன், மேல் மருவத்தூர், தோணியப்பர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக் காவல், சமயபுரம், மாங்காடு, திருவேற்காடு, அஷ்டலெட்சுமி, ஆறுபடை முருகன், (ஒரே இடத்தில்), பார்த்தசாரதி, கபாலீஸ்வரர், தன்வந்திரி விஸ்ணு, 408 சிவலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கலாம். வெக்காளி அம்மன், உட்பட 40 இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். 1 நாள் சொப்பிங் சென்னையில் எமது சேவை.

இருவழி விமான ரிக்கெட். காலை காப்பி பலகாரம், மதிய உணவு சாதம், 4 மணி காப்பி, ரீ, இரவு காப்பி, பலகாரம், தங்குமிடங்கள் 2 பேருக்கு கட்டில் மெத்தை குளியல் அறையுடன் கூடிய அறைகள், யாத்திரை முடியும்வரை A.C. வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் பாஸ்போட் படமுன் பக்க போட்டோக் கொப்பியும் 1 பாஸ்போட் சைஸ் கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க. **தொடர்புகளுக்கு: 077 736 2154, 077 768 0102, 072 422 2989**

**மேல் விபரங்கட்கு:**

கலாநிதி ரி.ஸ்ரீரெங்கநாதன்
#59, C/3/3 மூன்றாம்மாடி,
செட்டியார் தெரு, கொழும்பு 11

யாழ்ப்பாணத்தில்
எஸ்.பிரசாத் : 021 222 8155
எம்.குமாரசிங்கம்
0213206314, 0756144476

மட்டக்களப்பில்
கே.ராஜகோபால்
தொ.பே: 0653653719,
0752621141

திருகோணமலையில்
திரு.ரி.சிவபாலன்
0777293271

(சி-5038)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் சிவஞானம் தேனிலவன், புள்ளி - 174



செல்வன் தமிழ்வாணன் தேசிகன், புள்ளி 162



செல்வன் விக்னேஸ்வரன் நிரோஜன், புள்ளி 159



செல்வி அடைக்கன் கஜேந்தினி, புள்ளி 159



செல்வி ரவிக்குமார் தமிழ்நிலா புள்ளி -159



செல்வி சிவாபிரபு இசைப்பிரியா, புள்ளி 156

**தோற்றிய மாணவர்கள் : 48**
**சித்தியடைந்த மாணவர்கள் : 06**

**70 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 32**

எமது வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2013 இல் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் 70 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் எமது மாணவர்களுக்காக ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் வினாப்பத்திரங்களை இலவசமாக வழங்க கல்வி அபிவிருத்திக் குழுவை வழிநடத்திய பாராளுமன்ற உறுப்பினரும். பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் எமது வித்தியாலய ஸ்தாபகருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கும் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு
கிளி/விவேகானந்த வித்தியாலயம், அம்பாள்குளம், கிளிநொச்சி.

(சி-5168)





**நவராத்திரி விழாவும் ஆசிரியர் தினமும்**

(தனங்களப்பு)

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினமும் நவராத்திரி விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள , கைதடி நுணாவில் அறவழி கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

(அ-9-37)

# வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்

**ஹோட்டல் முகாமைத்துவம்** சிங்கப்பூர் மலேசியா

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/-
- பாடநெறிக்கட்டணம் 350,000/- 1 வருடம்

கட்டணம் 100% வீசா வந்தபின்
வீசா 14 நாட்களில்

**Hotline: 077 3013060**

**உயர் கல்வி அனுசரணை**
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...

எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.

**iCS Study Overseas**
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 24 2 இல் செவ்.
உயரம்: 6'
தகைமை/தொழில்: BED Sicience (ஆசிரியர் அரச)
தொ.இ:B823

பிறப்பு: 1982 இந்து (Ko)
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா. 17.75 4 இல் செவ்.
உயரம்: 5'7"
தகைமை/ தொழில்: A/L அமெரிக்கர் Manager (தனியார்)
தொ.இ:B828

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 3
உயரம்: 40
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L (விற்பனை முகாமையாளர்)
தொ.இ:B836

பிறப்பு: 1973 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 21.25
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA Teacher (அரச)
தொ.இ:B837

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா :31.5
உயரம்: 5'
தகைமை/தொழில்: Dr. (MBBS) (விவாகரத்தானவர்)
தொ.இ:G1097

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
கி.பா :27.5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, MA,SLAS. (உதவிப் பிரதேச செயலர்) சைவபோசனம்
தொ.இ:G1098

பிறப்பு: 1970 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா :93 செவ்.சூரி. 1
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA பிரதம மொழி பெயர்ப்பாளர் (அரச)
தொ.இ:G1099

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: புரட்டாதி 2
கி.பா :37.5 2 இல் செவ்.
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: HNDA முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ:G1100

**சகல தொடர்புகளுக்கும்:-**

**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய இடத்திலேயே

# பூநகரி பேருந்து நிலையம் இயங்க ஆவன செய்யுங்கள்

(பூநகரி)

**பேருந்து நிலையம் தற்போது இயங்கும் இடத்திலேயே இயங்க வேண்டுமெனவும் புதிய இடத்திற்கு மாற்ற வேண்டாம் எனவும் பொது அமைப்புக்களின் பிர்திநிதிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.**

புதிய ஒரு இடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதை கடந்த மாதம் பூநகரி பிரதேச சபையின் கூட்டத்தின் போது ஆறு அங்கத்தவர்கள் தாம் அந்நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்தனர்.

கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக பூநகரி நகர்ப்பகுதியான வாடியடியில் பேருந்து நிலையம் இயங்கி வந்தது.

இப் பேருந்து நிலையத்தில் நேரக்கண்காணிப்பாளரும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் வீதி, பரந்தன் - பூநகரிவீதி, யாழ் சங்குப்பிட்டி வீதி, நாகதேவன்துறை வீதி என்பன சங்கமமாகும் இடத்திலேயே இப் பேருந்து நிலையம் இயங்கி வந்தது.

தற்பொழுது சங்குப்பிட்டி வீதி புதிய சந்தை அமைக்கும் இடத்தில் இந்நிலையத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

புதிய பேருந்து நிலையத்தை பாரம்பரியமான கேந்திர இடமான தற்போது இயங்கும் வாடியடியிலே அமைக்க வேண்டும் என்ற மக்கள் கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேச சபையும் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

தற்பொழுது புதிய இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்படுவதற்கு பொது அமைப்புக்களும், பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவித்ததோடு பழைய இடத்திலேயே பேருந்து நிலையம் இயங்குவதற்கு ஆவன செய்யுமாறும் உரிய தரப்பினரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-84)

# கல்விக்கண்காட்சி

(குருமன்காடு)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவில் கல்விக்கண்காட்சியும் புத்தக விற்பனையும் நாளை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்குவலய கல்விப்பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம் , வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியும் தரமேம்பாடும் உப பீடாதிபதி கு. சிதம்பரநாதன், நிதி நிர்வாக உப பீடாதிபதி க. சுவர்ணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக வவு னியா தெற்கு வலய நிர்வாக பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர், கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி என். மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-266-250)

# விதை நெல்லின் விலை அதிகரிப்பு

(பூநகரி)

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரிப் பகுதிக்கு விதை நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக தினம் தினம் வியாபாரிகளும் விவசாயிகளும் வருவதை தருவதால் விதை நெல்லின் விலை விஷம் போல் ஏறியுள்ளது.

முன்னர் ஒரு மூடை நெல் 2 ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாகவும் தற்போது 3 ஆயிரம் ரூபாவையும் தாண்டி விலை அதிகரித்துள்ளதால் பூநகரிப் பகுதி விவசாயிகள் தமக்கு தேவையான விதை நெல்லை பெறமுடியாது அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பருவமழை தப்பியுள்ளதால் முன்னதாகவே விதைக்கப்பட்ட 60,70 வீதமான நெல் வயல்களில் இதுவரையிலும் நெல் முளைக்காமல் உள்ளது.

இதனால் விதை நெல் வைத்திருப்போர் கைவசம் உள்ள மீதி நெல்லை விற்கவோ ஏனையோருக்கு கொடுப்பதற்கோ முடியாத நிலையில் நெல்மூடைகளை சேமித்து வைத்திருக்கின்றனர்.

இதனால் நல்ல முளை திறன் உள்ள விதை நெல்லை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமம் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதிகளுக்கு நெல் வாங்க வருவோர் ஆட்டக்காரி என்ற புதிய நெல் இனத்தை தேடி அலைவதையும் காண முடிகின்றது. (ம-84)

# பார்வையற்றோருக்கான கிரிக்கெட் போட்டி

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் கண்பார்வையற்றோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று சனிக்கிழமை நடைபெற்றதோடு இன்று ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறவுள்ளதாக புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர் வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருபது ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக ஒலியெழுப்பும் தன்மைகொண்ட பந்தில் விளையாடவுள்ள கண்பார்வையற்றவர்கள் அணியானது யாழ்ப்பாண, இரத்மலானை, தங்காலை, கொழும்பு, ராகம; பிலியந்தலை, குருணாகல், முல்கிரியாகல ஆகிய இடங்களில் இருந்து பங்குகொள்ளவுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் மற்றும் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ள இப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார் எனவும் தெரிவித்தார். (ம-250-266)




# வவுனியா மாணவர்களின் கள ஆய்வு செயற்பாடு

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தை சேர்ந்த பாடசாலைகளின் 44 மாணவர்கள் நீர்கொழும்பை மையமாக கொண்ட கள ஆய்வு செயற்பாட்டில் நாளை திங்கட் கிழமை, நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஆகிய தினங்களில் ஈடுபடவுள்ளதாக வவுனியா மாவட்ட விஞ்ஞான கள கற்கை நிலைய முகாமையாளர் ஏ. ஜெய்க்கீசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓமந்தை மத்திய கல்லூரி, கனகராயன் குளம் மகா வித்தியாலயம், கல்மடு மகாவித்தியாலயம், புதுக்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த 44 மாணவர்கள் இலங்கையின் நாரா ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற நீர்கொழும்பு கண்டல் தாவர சூழல், முத்துராஜவெல சதுப்பு நிலம், வயம்ப பல்கலைக்கழக ஆய்வு கூடம், தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றை கள கற்கைக்காக பயன்படுத்தவுள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இச் செயற்பாட்டுக்கான வழி காட்டலை வவுனியா வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம் வழங்கவுள்ளதுடன் வளவாளராக ரூபசிங்கம் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-266)



வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஐந்தாம் கட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்... (படம்:- சிவநகர் செய்தியாளர்)

# வலைப்பந்தாட்ட போட்டி

(குருமன்காடு)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று சனிக்கிழமை நடைபெற்றதோடு இன்று ஞாயிற்றுக்கிழமையும் கல்வியியற் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க. பேர்ணாட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியியற் கல்லூரிக்கும் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்குமிடையில் சமூக உறவை வலுப்படுத்தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச் சுற்றுப்போட்டியில் வலைப்பந்தாட்ட அணிகள் 15 பங்கு கொள்ளவுள்ளதுடன் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளமையினால் அச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்கு கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-250-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுகளின் நியமனங்களின்போது ஜனநாயக பண்பு பின்பற்றப்படவில்லை

## புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களுக்கான நியமனங்களின் போது ஒரு கூட்டு அரசியல் தலைமைத்துவத்திற்கான ஜனநாயக பண்புகள் பின்பற்றப்படாமை யால் தான் சத்தியப்பிரமாண நிகழ்வினைப் புறக்கணித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமாகாண சபை உறுப்பினர்க ளுக்கான பதவியேற்பு நிகழ்வில் பங்கு கொள்வதை எமது அமைப்பு தவிர்த்திருந்தது. மேற்படி முடிவானது மக்கள் மத்தியிலும் எமது அமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியிலும் சில கேள்விகளை எழுப்பியிருக்கக் கூடும். எனவே இது குறித்து சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

நாம் இத்தகையதொரு முடிவை எடுக்க நேர்ந்தது என்றால் வடமாகாண சபை என்பது உண்மையில் வடக்கு மக்களுடன் மட்டுமே தொடர்புபட்ட ஒரு விடயமல்ல. இது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இலங்கைத் தீவில் கௌரவத்துடனும் சமத்துவத்துடனும் வாழ்வதற்கான ஒரு அரசியல் தீர்வை நோக்கி முன் செல்வதற்கான ஆரம்ப புள்ளியாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபையை அவ்வாறானதொரு நோக்கில் கையாள வேண்டும் என்பதுதான் கொழும்பின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வரும் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் அத்தகையதொரு நோக்கிலிருந்து கூட்டமைப்பு விலகிச் சென்றுவிடுமோ என்னும் அச்சம் எமக்குள் எழுந்துள்ளது. எமது மக்கள் வடமாகாண சபை தேர்தலின் போது எமக்களித்த பேராதரவை வெறும் கட்சி அரசியலுக்குள் முடக்குவதன் மூலம் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தையும் இழந்து விடக் கூடிய ஆபத்தை நாம் உணர்கிறோம்.

வடமாகாண சபைக்கான அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்புகளுக்கான நியமனங்களின் போது ஒரு கூட்டு அரசியல் தலைமைத்துவத்திற்கான ஜனநாயக பண்புகள் பின்பற்றப்படாமையானது எதிர்காலத்தில் வடமாகாண சபையை ஒரு அரசியல் தீர்விற்கான தளமாக பயன்படுத்திக் கொள்வதில் பல்தரப்பு உடன்பாட்டை காண முடியாத நிலைமையைத் தோற்றுவிக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் இருந்தும் வடமாகாண சபை நிர்வாக முடிவுகளில்ஒரு கட்சி மேலாதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய ஏது நிலையே காணப்படுகின்றது.

ஐந்து கட்சிகளின் பொது உடன்பாட்டின் பேரில் வடமாகாணத்திற்கான முதல்வராக ஏற்றுக் கொள்ளப்பட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அந்த உடன்பாட்டுக்கு மாறாக வெறும் கட்சி மனோபாவ அரசியலுக்குள் முடக்கப்பட்டு விடக் கூடிய ஆபத்தும் காணப்படுகின்றது.

சி.வி.விக்கினேஸ்வரன் மேற்படி நிலைமைகளை கவனத்தில் கொண்டு அவற்றை ஆரம்பத்திலேயே நிவர்த்தி செய்யாதுவிடின் வடமாகாணசபையை ஒரு இறுதி அரசியல் தீர்வு நோக்கி முன்கொண்டு செல்வதில் நாம் தோல்வியடைய நேரிடலாம். நாம் தோல்வியடைய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பமும் கூட.

இறுதியில் நாம், எமது மக்களுக்களித்த வாக்குறுதிகளை ஆகக் குறைந்தளவுகூட நிவர்த்தி செய்ய முடியாத கையறு நிலைக்கு தள்ளப்படுவோம். எனவே, இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எமக்குள்ள அதிருப்தியை வெளிப்படுத்தும் நோக்கிலேயே எமது அமைப்பு மேற்படி பதவியேற்பு நிகழ்வை பகிஷ்கரித்திருந்தது. வட மாகாண சபையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு எமது முழுமையான ஆதரவையும் கொடுப்போம் என அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)


### கறையான்களை முற்றாக அழித்தல்

வீடுகள், வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள், பொது அரச கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து முழுமையான தீர்வினைப் பெற.

புதிய கட்டடங்களை அமைக்கும் போது கறையான்களை உத்தரவாதத்துடன் முழுமையாக கட்டுப்படுத்தி உங்கள் செலவை குறைத்துக் கொள்ளுங்கள்.

குறைந்த செலவு நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு 100 சதவீத பலனைப் பெற்றிடுங்கள்.



எமது சேவைகள்

இலவச ஆலோசனை - இத்துறையில் சிறந்த அனுபவம் வாய்ந்தவரால் ஆலோசனை வழங்கப்படும்

3 - 10 வருடங்கள் வரையிலான உத்தரவாதம் வழங்கப்படும்


CONTACT

N.Rubakanth 0771515897 K.Kirushanthan - 0771588022

"ALL OUT" Pest Control

140/12, 4th cross street, Jaffna. Tel : 0214993200


## மரண அறிவித்தல்



### எட்வேட்ஜோ அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட்ஜோ அந்தோனிப்பிள்ளை *11.10.2013* அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை *(14.10.2013)* திங்கட்கிழமை மாலை *3* மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, தாளையடி புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட் டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**தகவல்:**

தாளையடி *(4160)* **மனைவி, பிள்ளைகள்.**

## அரச பல் வைத்தியர் சங்கத்தினால் யாழ்.மக்களுக்கான அறிவித்தல்

*(275/75, பவுத்த லோகா மாவத்தை, கொழும்பு - 07)*

யாழ்.குடாநாட்டில் அதிகளவிலான தகுதியற்ற போலி வைத்தியர்கள் பற்சிகிச்சையினை மேற்கொண்டு வருவதென்பதை அனேக மக்களால் எமது சபையின் கவனத்திற்கும் தெரியப் படுத்தியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் நன்மை கருதி பொறுப்பு வாய்ந்த சங்கம் என்ற ரீதியில் கீழ்க்கண்ட விடயங்களை பிரகடனஞ்செய்கின்றோம்.

1. 30 வருடங்கள் இடம்பெற்ற யுத்தம் காரணமாய் சுகாதார சேவையினை இப்பகுதியில் உரியமுறையில் மேற்பார்வை செய்வது கடினமாக இருப்பதால் அதிகமான போலி வைத்தியர்கள் பற்சிகிச்சையினை ஆரம்பித்துள்ளனர். உதாரணமாக பல் ஒழுங்காக்கல் (கிளிப்போடுதல்). பல் அடைத்தல். பல் கட்டுதல். மற்றும் பல்பிடுங்குதல் போன்ற பற்சிகிச்சைகளை இப்பகுதியில் மேற்கொள்கின்றனர்.
2. அரச சேவையில் பற்சிகிச்சைகளை மேற்கொள்ளுபவர்கள் பற்சிகிச்சை பட்டதாரிகளாகவும் இலங்கை மருத்துவசபையில் பதிவுசெய்யப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.
3. இவர்களில் மிகக்குறைந்தளவு பற்சிகிச்சை நிபுணர்களே தனியார் சேவையில் ஈடுபடுகின்றனர்.
4. பற்சிகிச்சைக்கான தேவை மிக அதிகமாகவும் பற்சிகிச்சை நிபுணர்கள் குறைவாககவும் உள்ளதால் போலி வைத்தியர்கள் பல இடங்களில் குறிப்பாக யாழ்.நகரிலும் பற்சிகிச்சைகளில் பலகாலமாக ஈடுபட்டு வருகின்றனர்.
5. பொய்யான பட்டதாரி விளம்பரங்கள். தம்மால் மேற்கொள்ளப்படும் போலி வைத்திய பட்டியல்களால் தமது இடங்களை அலங்கரித்து செயற்படுகின்றனர். போலி வைத்தியர்கள் பலர் சட்டத்திற்கு முரணாக தமது செல்வாக்குகளைப் பயன்படுத்தி சட்டம் நீதி விதிகளிலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர்.
6. தற்போது இப்பிரதேசத்தில் நிலைமை சீராகி அமைதி நிலவுகதன் காரணமாய் நாட்டின் சட்டங்கள் அமுலாக்கப்பட்டு பொலிஸ் நடவடிக்கைகள் மூலம் பல விஷமிகள் நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு முகம்கொடுப்பதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.
7. அனேகமான பற்சிகிச்சைகள் நிரந்தரமானவை. உரியமுறையில் பற்சிகிச்சை செய்யத் தவறின் நிரந்தர பக்கவிளைவுகளை உருவாக்குவதனால் வாய்க்குழியிலுள்ளும் தேக ஆரோக்கியத்திலும் மாற்றங்கள் உருவாக்கும்.
8. எனவே இந்நிலையில் யாழ்.வாசிகளாகிய நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்துகொள்ள வேண்டுமென்பதை இத்தால் அறிவிப்பதுடன் உரிய கல்வித் தகைமையும் பதிவுசெய்யப் பட்ட பல்வைத்திய நிபுணர்களை நாடும்படியும் வேண்டிக்கொள்கின்றோம்.
9. மக்களுக்கு உதவும் வகையில் பதிவுசெய்யப்பட்ட பல்வைத்திய நிபுணர்களின் பெயர்பட்டியல்கள் எமது காரியாலத்தில் உண்டு என்பதை அறியத் தருகின்றோம்.
10. பற் சிகிச்சை சம்பந்தமான சட்டம்

**வைத்திய சட்டம்/பற்சிகிச்சைச் சட்டம்/பகுதி IV/பிரிவு 48**

பல் மருத்துவரைத் தவிர்ந்த ஏனைய எவரும் எந்த ஒரு சட்ட நீதிமன்றம் மூலமாக பற்சத்திர சிகிச்சை அல்லது பற்சிகிச்சை செயற்பாடுகளான (கிளிப்போடுதல். பல் கட்டுதல்) அல்லது அத்துடனான பணிகள் அல்லது கவனிப்பு அல்லது பற்சிகிச்சைக்கான மருந்துகள் வழங்கல் அல்லது மருந்து சிட்டைகள் வழங்கல் (Prescription) என்பவற்றிற்கு கட்டணம் அறவிடமுடியாது.

Government Dental Surgeons' Association
Professional Centre
275/75, Prof, Stanley Wilesundara Mawatha,
Off Bouddhaloka Mawatha, Colombo - 07, Srilanka




குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

➤ கண் சத்திர சிகிச்சை



விசேட நிபுணத்துவம் வாய்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணரால் சகல கண்சத்திர சிகிச்சைகளும் குறைந்த செலவில் மேற்கொள் ளப்படுகின்றன. நாளாந்த கண் கிளினிக்குகளும் நடைபெறுகின்றன.

➤ காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை

விசேட வைத்திய நிபுணரால் உடனுக்குடன் நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் மேற்கொள்ளப் படுகின்றது.



➤ Dentel Surgery (Orthodontic) சகல விதமான பற்சிகிச்சைகள்



பற் சிகிச்சை நிலையத்தில் பல் கட்டுதல் பல்முடி போடுதல் பாலமிடுதல் என்பவற்றுடன் சகல பற்சிகிச்சைகளும் orthodontic சிகிச்சையும் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மிடையேயான முரண்பாடுகளை களைந்து தமிழ்த் தேசியத்துக்காக ஒன்றிணைவோம்

## தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா வலியுறுத்து

**தமிழர்களின் வரலாற்றிலே மக்கள் பின்னடைவுகள் பலவற்றைக் கண்டிருந்த போதிலும் தாம் வீழ்ந்து விடவில்லை நிமிர்ந்தே நிற்கிறோம் என வடக்குத் தேர்தலில் மக்கள் நிரூபித்துள்ளனர் என தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா தெரிவித்தார்.**

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் பதவியேற்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய வரலாற்றிலே பல பின்னடைவுகளை நாம் சந்தித்திருக்கிறோம்.

ஆயினும் நாம் வீழ்ந்து விடவில்லை. எப்பொழுதும் எழுந்து தான் நிற்போம் என்பதை மக்கள் தமது ஏகோபித்த தீர்ப்பு மூலம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, இந்த தீர்ப்பு முக்கியமானதொரு தீர்ப்பு ஆகும். தமிழர்களுடைய வரலாற்றிலே விட்டுக் கொடுக்க முடியாததற்கு சில காரணங்கள் உள்ளன.

சுய நிர்ணய உரிமை எங்களுடைய தேசியம். இவை இரண்டும் முக்கியமான காரணங்களாகும்.

இந்த காரணங்களை அடிப்படையாகக் கொண்டே மக்கள் இந்த ஆணையை வழங்கியிருக்கின்றார்கள்.

அவர்களின் இந்த ஆணையை அவர்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நிறைவேற்றுவார்கள்.

எமக்கு கிடைத்துள்ள தலைமைத்துவத்துக்கு ஆழ்ந்த சிந்தனையும் பரந்த ஞானமும் கொண்ட ஓர் முதலமைச்சர் கிடைத்துள்ளார்.

ஆகவே தான் என்னுடைய தாழ்மையான கருத்து அவரைத் தீர்மானங்கள் எடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்க வேண்டும்.

அவர் எங்கள் மக்களுக்கான நடவடிக்கைகளையும் காரியங்களையும் செய்து வரட்டும்.

உயர் நிலையிலுள்ள ஒருவரான தந்தை செல்வாவின் நினைவாக இந் நினைவாலயம் உருவாக்கப்பட்ட போது அங்கே இருந்தவர்களில் நானும் ஒருவன்.

அப்போது தென்னிந்திய திருச்சபையின் இரண்டாவது பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி வி.சி.அம்பலவாணர் பேசியது இன்றும் எனக்கு நினைவிருக்கின்றது.

காலம் சென்றுவிட்டது. நேரம் போய் விட்டது. நாம் செய்யக் கூடிய ஒன்று என்னவெனில் தந்தை செல்வா உயர்ந்த மதிக்கத்தக்க ஒருவர். அவரை மக்கள் எப்போதும் உயர்வாகவே நினைக்கின்றார்கள். ஆகவே தான் இந்த நினைவுக் கட்டடமும் நிமிர்ந்து உயர்ந்து நிற்கின்றது என்றார்.

அதேயிடத்தில் இன்று நினைவஞ்சலி இடம்பெற்று அனைவரதும் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாராட்டப்பட்டுமுள்ளார்.

நாம் செய்யக் கூடியது இன்று ஒன்றுள்ளது. எங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். பலவிதமான முரண்பாடுகள் இருக்கலாம். ஆயினும் தமிழ்த் தேசியம்,, சுய நிர்ணய உரிமை, எமது மொழி ஆகிய இவை எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் எமக்கு கிடைத்த இத் தலைமையின் கீழ் நாம் அணிதிரள வேண்டியது கட்டாயமானதாகும்.

இந்த வரலாற்று வெற்றி எமக்கு கிடைத்துள்ள ஒரு திருப்பு முனையாகும். அதனை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் பொருத்தமான ஒரு தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பமாகும். காலம் கனிந்து நிற்கிறது. நாம் எமது ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

எங்களுடையு எல்லா முரண்பாடுகளையும் களைந்து எங்களுடைய தேசியத்தையும் விட்டுக் கொடுக்க முடியாத சுய நிர்ணய உரிமையையும் கொண்டு நாம் தொடர்ந்தும் இந்த பயணத்திலே செல்வோம் என்றார். (அ-4)

## பெயர்வளைவு திறப்பு விழா

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் முகப்புப் பெயர் வளைவு திறப்பு விழாவும் வாணி விழாவும் நாளை (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு அதிபர் வை.விஜய குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன் கலந்து கொண்டு பெயர்வளைவைத் திரை நீக்கம் செய்து வைப்பார். (அ)

# வாரம் ஒரு தகவல்

## ஆசைப்பட்டால் அவஸ்தைதான்

ஓர் அரங்கம் முழுவதும் பார்வையாளர்களால் நிறைந்து வழிகிறது.

இன்னும் சிறிது நேரத்தில் நாடகம் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.

திரை விலகுகிறது. அரங்கில் புத்தர் தோன்றுகிறார். அமைதி தவழும் முகம்...எல்லாவற்றையும் வேண்டாம் என்று உதறித்தள்ளி விட்டல்லவா அவர் வருகிறார்.

அரண்மனை வேண்டாம்... ஆடம்பரம் வேண்டும்... என பற்றற்ற நிலையில் புத்தர் தமது பாதங்களை மெல்ல எடுத்து வைக்கிறார்.

அனைவரது இதயங்களிலும் புத்தர் இடம்பிடிக்கிறார். அனைவரும் அரங்கத்தில் தோன்றிய புத்தரை பார்த்து வியப்பில் ஆழ்ந்து அமர்கின்றனர்.

காட்சி மாறுகிறது. மேடையில் சீடர்கள் வருகிறார்கள்... புத்தர் அவர்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார். புத்தர் தனது உபதேசத்தில் ஆசைப்படாதீர்கள்... ஆசைதான் துன்பத்துக்கு காரணம் எனவே ஆசைப்படாதீர்கள்... பதவிக்கு ஆசைப்படாதீர்கள்... புகழுக்கு ஆசைப்படாதீர்கள்... 'உபதேசம் தொடர்கிறது"

இறுதியாக திரை விழுகிறது. கரவொலி விண்ணைத் தொடுகிறது. நாடகம் முடிவுற்றதும் அதற்கான பாராட்டு விழா இடம்பெறுகிறது.

அறிவிப்பாளர் அறிவிக்கிறார்... "நண்பர்களே இந்த நாடகத்தில் மிகவும் சிறப்பாக புத்தர் வேடம் தாங்கி நடித்தவரை கௌரவிக்கும் விதமாக தங்கக் கோப்பையை பரிசளிக்க இருக்கிறோம். அவர் வந்து பெற்றுக் கொள்ளலாம்" மீண்டும் கரவொலி. புத்தராக நடித்தவர் மேடைக்கு பின்னால் வேடத்தை கலைத்துக் கொண்டிருந்தார்... இந்த நிலையில் இவ் அறிவிப்பை கேட்டதும் தங்கக் கோப்பையைபெறும் ஆவலுடன் பாதி கலைந்த வேடத்தோடு பதறி அடித்து அரங்கில் ஏறுகிறார். அந்த தங்கக் கோப்பையை பெற ஆசையோடு ஓடி வந்த அவர்... காலில் ஏதோ தடுக்கி அப்படியே மேடையில் குப்புற விழுகிறார். பார்வையாளர்களில் ஒருவர் சிந்திக்கிறார். "உண்மை தான் ஆசைதான் துன்பத்துக்கு காரணம்"

"இன்றைய மனிதர்களுக்கு புத்தர் போன்று நடிக்க மட்டுமே தெரிகிறது."

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இராசி பலன்

13.10.2013
(புரட்டாதி 27, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
நவமி பிற்பகல் 2.12 மணிவரை
உத்தராடம் காலை 7.56 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
மகாநவமி விரதம்

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீகள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**இடபம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காண்பீர்கள், எதிர்பாராத பயணங்கள் கைகூடும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், புதிய திட்டங்கள் கைகூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** கவலைகள்தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு

**கடகம்** நட்பால் நல்ல காரியம் ஒன்று நடைபெறலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புகழ்கூடும்.

**சிங்கம்** பகைவர்கள் விலகுவர், பெண்களால் பெருமை வந்து சேரலாம், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், உடல் நலம் சீராகும்.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, வருமானம் திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**துலாம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** உடன்பிறப்புக்களின் மூலம் உதவிகள் கிடைக்கலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், வளர்ச்சி கூடும் நாள், தொலைபேசித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** நாவன்மையால் நற்பெயரெடுப்பீர்கள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மாதர் நட்புண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**மீனம்** வருமானம் திருப்திதரும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், பயணங்கள் கைகூடும், அதிர்ஷ்டகரமான நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பொருட்சேர்க்கை---

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 30 | 50 |
| உருளைக்கிழங்கு | 140 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 120 |
| தக்காளி | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 60 |
| கோவா | 50 | 60 | 80 |
| கரட் | 40 | 60 | 80 |
| பூசணி | 20 | 20 | 80 |
| புடோல் | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 190 | 100-140 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 60 | 120 |
| பாகற்காய் | 140 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 70 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 15 | 15 | 40 |
| கறிமிளகாய் | 50 | 50 | 100 |
| முருங்கைக்காய் | 90 | 60 | 120 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | -- | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புக்கு தெரிவுக்குழுவில் ஒருபோதும் அநீதி ஏற்படப் போவதில்லை

## தனித்து பேசி பயனில்லை என்கிறார் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

**தேசிய பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கம் தனித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமேயில்லை. மாறாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்வதன் மூலமே தீர்வு என்பது சாத்தியமாகும் என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

உலகில் இதுபோன்ற உள்நாட்டு பிரச்சினைகள் நிலவிய நாடுகளில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து ஒரு மேடையில் கூடி பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வு காணப்பட்டுள்ளன.

தனித்து இரண்டு தரப்புக்கள் பேச்சு நடத்தி தீர்வு எட்டப்படுவது சாத்தியமற்றதாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தகுதியான இடம் பாராளுமன்ற தெரிவுக் குழு மட்டுமேயாகும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கத்துவம் வகிக்கமாட்டோம் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் அரசாங்கமும் ஒன்றிணைந்து வேலை செய்து பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு சிறந்த சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது.

ஜனாதிபதி முன்னிலையில் வடமாகாண முதலமைச்சர் பதவியேற்பதற்கு எடுத்த தீர்மானமே ஒரு ஆரோக்கியமான சூழலுக்கான ஆரம்பமாக அமைந்துள்ளது.

எனவே, இரண்டு தரப்பினரும் இச் சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முன்வரவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக வடமாகாண அரசு மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதன் மூலம் வடமாகாணத்தை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு உதவியாக அமையும்.

இதேவேளை, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவே சிறந்த களமாக அமையும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக அமைந்துள்ளது.

உண்மையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமாயின் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை. அது தகுதியான விடயமாகவும் அமையாது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதன் ஊடாகவே சாத்தியமான தீர்வை நோக்கி நகரலாம்.

உலகில் இதுபோன்ற பிரச்சினைகள் காணப்பட்ட நாடுகளில் அனைத்து அரசியல் கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வுகளும் இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன.

மாறாக இரண்டு தரப்புக்கள் மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவிக்குழுவில் கலந்து கொள்ள வேண்டுமே தவிர அரசாங்கத்துடன் தனித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதில் அர்த்தம் இல்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் வகையிலான பிரதிநிதிகள் உள்ளனர். எனவே தெரிவுக்குழுவில் அநீதி ஏற்படும் என்று கூட்டமைப்பு சிந்திக்க வேண்டியதில்லை என்றார்.

(அ-2)

# வெளிநாட்டு விஜயங்கள் நவம்பரில் இடை நிறுத்தம்


(கொழும்பு)

அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்களின் சகல வெளிநாட்டுப் பயணங்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் தடைசெய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு மற்றும் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டப் பணிகளை முறையாக மேற்கொள்ளும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்ற பணிப்புரையை வழங்கியுள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் கலாநிதி மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்தத் தடை நடைமுறையில் இருப்பதுடன் இதற்கிணங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகளின் வெளிநாட்டு விஜயங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(அ-2)



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நவராத்திரி விழா இடம்பெற்ற போது...

# இலங்கை நோக்கி வரும் போதைப்பொருள் கப்பல்

## அவதானத்துடன் சுங்கத் திணைக்களம்

ஹெரோயின் போதைப்பொருள் ஏற்றிய கப்பலொன்று இலங்கை நோக்கி வருவதாகவும் சந்தேகத்துக்குரிய அக்கப்பல் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் மிகவும் அவதானமாக செயற் படுவதாகவும் சுங்க திணைக்களத்தின் இயக்குநர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரேபியக் கடலில் சந்தேகத்துக்குரிய கப்பலொன்று நங்கூரமிடப்பட்டுள்ளது. அது குறித்து மிகவும் அவதானமான இருக்கி றோம். சந்தேகத்துக்குரிய குறித்த கப்பல் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கிறோம்.

ஹெரோயின் போதைப்பொருள் ஆப்கானிஸ்தானிலிருந்து ஏற்படுவதாக ஆரம்பகட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானில் ஏற்றப்படும் போதைப்பொருட்கள் அங்கிருந்து பாகிஸ்தான் கொண்டு செல்லப்படுகின்றன.

பாகிஸ்தானின் கராச்சி பகுதியில் கப்பலில் போதைப் பொருளை ஏற்றுவதற்கு முன்னர் பொதி செய்யப்படுகிறது. குறித்த கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் பட்சத்தில் அது கைது செய்யப்படும் என்றார்.

அண்மைக்காலமாக பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ-2)

# அரசாங்கம் கோப் அறிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை

## சிறிரங்கா எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கோப் அறிக்கைக்கு அரசாங்கம் எவ்வித முக்கியத்துவமும் அளிக்கவில்லை என ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்கா தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தும் நோக்கில் நிறுவப்பட்ட கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கோப் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் தருணத்தில் இந்த அவையில் ஆறு பேரே பிரசன்னமாகியுள்ளனர்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முனைப்பு அரசாங்கத்திற்கு கிடையாது.

குறித்த அறிக்கை காரணமாக எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஆளும் கட்சிக்கு இழுக்கும் முயற்சிகள் வலுப்பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிரங்காவிற்கு பிரதி அமைச்சர் பதவியொன்று வழங்கப்படும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அண்மையில் வழங்கப்பட்ட பிரதி அமைச்சர் பதவிகளின் போது சிறிரங்காவிற்கு பதவி வழங்கப்படவில்லை.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒற்றுமையின் பலம்

...முதல் மகன் ஒன்றாய் வைத்து கட்டப்பட்ட அந்த கொம்புகளை உடைக்க முயற்சி செய்தான். அவனால் உடைக்க முடியவில்லை. இப்போது பெரிவர் அடுத்த மகனை உடைக்கச் சொன்னார். அவனாலும் அதை உடைக்க முடியவில்லை. மற்ற இரண்டு மகன்களாலும் அதை உடைக்க முடியவில்லை.

இப்போது பெரியவர் அந்தக் கயிற்றை அவிழ்க்கச் சொல்லி கொம்புகளை தனித்தனியே நால்வரையும் எடுத்துக் கொள்ளச் சொன்னார். மகன்களும் அவ்வாறே செய்தனர்.

முதல் மகனை நோக்கி அவன் கையிலிருந்த கொம்பை உடைக்கச் சொன்னார். அவன் அந்த கொம்பை சுலபமாக உடைத்து விட்டான். அடுத்தடுத்த மூவரும் தங்கள் கையிலிருந்த கொம்பை சுலபமாக உடைத்துவிட்டனர்.



ஒற்றுமையின் பலம் என்னவென்று உங் களுக்கு இப்போது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் நால்வரும் நான்கு கொம்பு களைப் போல்தான். நீங்கள் ஒன்று சேர்ந்திருந்தால் உங்களை யாராலும் வெல்ல முடியாது.

சண்டை போட்டுக் கொண்டு தனியாக இருந்தால் உங்களை யார் வேண்டுமானாலும் இலகுவில் வென்றுவிட முடியும் என்று பெரியவர் கூறினார்.

நான்கு மகன்களுக்கும் இப்போது ஒற்றுமையின் பலம் புரிந்தது.

அன்றிலிருந்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளாமல் ஒற்றுமையாக வாழத் தொடங்கினார்கள்.

(முற்றும்)

******* ******* ******* *******

# நன்றிக்கடன்

கானபுரி என்றொரு நாடு இருந்தது. அந்த நாட்டை சோதநாதன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அப்போது எலிகள் கூட்டம் கூட்டமாக நாட்டிற்குள் புகுந்தன. வீடுகளில் உள்ள பொருட்களையும் வயல்களில் விளைந்த தானியங்களையும் பெருமளவில் தின்றன. எலிகள் செய்த அழிவால் நாட்டில் பஞ்சமே ஏற்பட்டுவிட்டது.

இதனால் மன்னன் பெருங்கவலை அடைந்தான். தனது படைவீரர்களையும் குடிமக்களையும் எலிகளைக் கொல்லும்படி ஆணையிட்டான். நகரைச்சுற்றி பெரிய மண் ஜாடிகளை வரிசையாக அடுக்கி அகப்பட்ட எலிகளைக் கொல்லும்படி ஏற்பாடும் செய்தான்.

இப்படித் தனது இனமே அழிவதைக் கண்ட எலிகளின் அரசன், மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தது. எலிகளைக் காப்பாற்ற வழியென்ன என்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது. அப்போது தனது நீண்டகால நெருங்கிய நண்பனான யானையின் நினைவு வந்தது. அதனிடம் சென்ற எலிகளின் அரசன், தன் இனமே அழிவதைக் கூறிக் கண்ணீர் வடித்தது.

அதனைக் கேட்டு இரக்கம் கொண்ட யானை தனது உயிர் நண்பனான எலிக்கு உதவப்புறப்பட்டது. ஊரைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த மண் ஜாடிகளையெல்லாம் உடைத்து எறிந்தது. எலிகளும் யானையின் உதவியால் உயிர் பிழைத்து ஓடின. எலியரசன் தனது நண்பனான யானை செய்த பேருதவியை எண்ணி மனம் நெகிழந்தது. நண்பரே! நீங்கள் செய்த உதவிக்கு நானும் எனது இனமும் நன்றிக் கடன் பட்டுள்ளோம். தக்க சமயத்தில் நாங்கள் தங்களுக்கு உதவக் கடமைப் பட்டுள்ளோம் என்று கூறிச் சென்றது.

நாட்கள் சில கழிந்தன. அந்த நாட்டு மன்னனான சோமநாதன் தனது பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்றான். அப்போது எலிகளைக் காப்பாற்றிய யானை அவர்களின் எதிரே வந்துகொண்டிருந்தது.

மன்னனுடன் வந்தவர்கள் அதனைக் கண்டு அஞ்சி ஓடினர். மன்னர் அவர்களை அழைத்து அந்த யானையை எப்படியும் பிடிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.


உடனே வீரர்கள் அடர்ந்த மரங்களுக்கிடையில் ஒரு பெரும் பள்ளத்தைத் தோண்டினர். அதில் மேலாக மரக் கிளைகளைப் போட்டு மறைத்தனர். அந்த வழியாக ஓடிவந்த யானை குழிக்குள் விழுந்துவிட்டது. வீரர்கள் வந்து தன்னைப் பிடித்து விடுவார்களே என்று எண்ணி மிகவும் மனம் கலங்கியது.

அந்த இக்கட்டான வேளையில் தான் தனது உயிர் நண்பனான எலியரசனின் நினைவு வந்தது. இருப்பினும் எவ்வாறு எலிகள் என்னைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்தது .

யானை நினைத்த சிறிது நேரத்திற்குள் அதன் நண்பனான எலியரசன் அங்கே வந்தது. அதனுடன் எலிகள் அனைத்தும் கூட்டமாக வந்து பல்லாயிரக்கணக்கில் சுற்றி வளைத்தன. நிலைமையை உணர்ந்து அத்தனை எலிகளும் சேர்ந்து அங்கே தோண்டப்பட்டுக் குவிந்து கிடந்த மண் குவியலை குழிக்குள் வேகமாகத் தள்ளின. பள்ளம் படிப்படியாக உயர்ந்து யானை மேலே வந்தது.

எலி உருவத்தில் சிறியது என்றாலும் நன்றியுடன் தன்னைக் காப்பாற்றியதை எண்ணி யானை நெஞ்சம் நெகிழ்ந்து தும்பிக்கையைத் தூக்கி வணக்கம் தெரிவித்தது.

******* ******






- ➢54- உரோமப் பேரரசன் குளோடியஸ் அவனது நான்காவது மனைவியினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதினால் அவளது மகன் உரோமப் பேரரசனானான்.
- ➢1492- கொலம்பசும் அவரது குழுவினரும் பஹாமாசில் தரையிறங்கினர்.
- ➢1792- வெள்ளை மாளிகைக்காக அடிக்கல் வாஷிங்டன், டிசியில் இடப்பட்டது.
- ➢1884- அனைத்துலக நேரம் கணிக்கும் இடமாக கிறீனிச் தெரிவு செய்யப்பட்டது.
- ➢1885- ஜோர்ஜியா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- ➢1917- யாழ்ப்பாணம் மாநாகராட்சிப் பகுதி மத்திய, மேற்கு, கிழக்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.
- ➢1923- துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லிலிருந்து அங்காராவுக்கு மாற்றப்பட்டது.
- ➢1944- இரண்டாம் உலகப்போர்: லாத்வியாவின் தலைநகர் ரீகா சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டது.
- ➢1953- டட்லி சேனநாயக்கா இலங்கைப் பிரதமர் பதவியைத் துறந்தார்.
- ➢1990- சிரியப் படைகள் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தது.

**பிறப்புக்கள்**

- ➢1925- மார்க்ரேட் தாட்சர், இங்கிலாந்து முன்னாள் பிரதமர்
- ➢1925- லென்னி புரூஸ்,அமெரிக்க நகைச்சுவை நடிகர் (இ.1966)

**சிறப்பு நாள்**

இயற்கைப் பேரிடர் குறைப்பிற்கான அனைத்துலக தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டட்லி சேனநாயக்க**



டட்லி செல்ட்டன் சேனநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து சுதந்திர இலங்கையின் பிரதமராக மூன்று தடவைகள் பதவியில் இருந்தவர். இவரது தந்தையும் அப்போது பிரதமராகவும் இருந்த டி.எஸ்.சேனநாயக்க இறக்கவே, 1952 ஆம்ஆண்டு மார்ச் 26 இல் இலங்கைப் பிரதமராக இலங்கை ஆளுநர் சோல்பரி பிரபுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஓராண்டு காலத்துள் இவரது அரசு, மக்களின் செல்வாக்கை இழந்தது. இதனால் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

1956 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் தோல்வியடைந்ததை அடுத்து மீண்டும் அரசியலுக்கு வந்தார்.

1960 இல் டட்லி சேனநாயக்க அதிக உறுப்பினர்களைக் கொண்டிருந்ததால் மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக, டட்லியிடம் ஆட்சியைக் கொடுத்தார். இந்நிலையில் நாடாளுமன்றத்தில் அரியணை உரை மீது எடுக்கப்பட்ட முதல் வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்புடன் டட்லி சேனநாயக்கவின் அரசு தோற்கடிக்கப்பட்டதை அடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு மீண்டும் இடம்பெற்ற தேர்தல்களில் டட்லி சேனநாயக்க எதிர்கட்சித் தலைவரானார். 1965 தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகப் பிரதமரானார். 5-வது நாடாளுமன்றத்தின் முழுமையான காலப்பகுதிக்கும் பிரதமராக இருந்த டட்லி 1970 தேர்தலில் தோல்வியடைந்தார். அதன் பின்னர் நீண்ட காலம் சுகவீனமுற்றிருந்த அவர், 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 இல் தனது 61-வது அகவையில் காலமானார்.

# செயலாளர் நாயகத்துக்கு விசேட உரிமை வழங்கும் ஐ.நா. சாசனத்தின் 99-வது சாராம்சமும் முள்ளிவாய்க்கால் படுகொலையும்

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்ததும், 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்காவில் சன் பிரான்ஸ்ஸிக்கோ நகரில், கூடிய நாடுகள், முன்பு இருந்த *லீக் ஓப் நேசன்* என்ற அமைப்பிற்கு பதிலாக ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கினார்கள்.

அவ்வேளையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளில் முக்கிய பங்கை வகிக்கும் செயலாளர் நாயகத்திற்கு சில விசேட உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம், ஐ.நா. சாசனத்தில் 15-வது அத்தியாயத்தில் சில சாராம்சங்களில் செயலாளர் நாயகத்துக்குரிய கடமை, அதிகாரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் வேளைகளில் முன்னெச்சரிக்கையாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் அவசர, அவசிய நிலைமைகளின் அடிப்படையிலேயே 99-வது சாராம்சம் பாவிக்கப்படும்.

இதன் அடிப்படையில் செயலாளர் நாயகம் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு முதலில் தனது கரிசனையை அறிவிப்பது வழமை. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் கருத்தை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏற்றுக்கொள்ளும் கட்டத்தில் அவ் விடயத்திற்காக பாதுகாப்பு சபை கூட்டப்படும் வேளையில், ஐ.நா. செயலாளர் நாயகம் முதலாவதாக உரையாற்றுவது வழமை. செயலாளர் நாயகத்தினால் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு மட்டுமல்லாது, பொதுச் சபை, ஐ.நாவின் மற்றைய பிரிவுகளுக்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் அறிவிப்பது வழமை.

உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் வேளைகளில் செயலாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அரசியல் கலப்பு கொண்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் 99-வது சாராம்சத்தின் அடிப்படையில், பாதுகாப்பின் அடிப்படையின் அங்கத்துவ நாடுகளின் உண்மை நிலைகளை அறிந்து கொள்வதற்காக செயலாளர் நாயகம் சுதந்திரமாக உண்மைகளை அறியும் குழுக்களை நியமிக்கவும் அதிகாரம் கொண்டுள்ளார்.

இவ் அடிப்படையில் உலக நாடுகளின் நிலைமையை பொறுத்து வேறுபட்ட ஐ.நா. செயலாளர் நாயகங்கள் இவ் 99-வது சாராம்சத்தை பாவித்துள்ளனர். இவ் 99-வது சாராம்சத்தை ஆராயுமிடத்து செயலாளர் நாயகங்களினால் சில சந்தர்ப்பங்களில் காலம் தாழ்த்தியும் வேறு சில சந்தர்ப்பங்களில் இச்சாராம்சம் அறவே பாவிக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

1960 ஆம் ஆண்டு கொங்கோ நாட்டிலும் 1989 ஆம் ஆண்டு லெபனானிலும் 99-வது சாராம்சம் காலம் தாழ்த்தி பாவிக்கப்பட்ட நிகழ்வுகளாகும். இதே போல் மூன்று முக்கிய சந்தர்ப்பங்களில் இச் சாரம்சம் அறவே பாவிக்கப்படாத காரணங்களினால் ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டன.

இதில் முதலாவதாக- 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அன்றைய கிழக்கு பாகிஸ்தானாகிய இன்றைய பங்களாதேஷ் இத்தகைய சர்ந்தப்பத்தை எதிர்கொண்டது.. அங்கு முஜிபூர் ரகுமானும் அவரது ஆவாமிய லீக்கும் 1971 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி ஒருதலைப்பட்சமான சுதந்திரத்தை அறி வித்த வேளையில் அன்றைய பாகிஸ்தானிய ஜனாதிபதியான ஜாகியாக்கான் தமது இராணுவம் மூலம் இச்சுதந்திரப் பிரகடனத்தை அடக்க முயன்ற வேளையில் கிழக்கு பாகிஸ்தானி லிருந்து இலட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவிற்குள் சென்றவர். அவ்வேளையில் பர்மா நாட்டைச் சேர்ந்த திரு **யூதாண்ட்** என்பவரே ஐ.நா. செயலாளர் நாயகமாக கடமை யாற்றினார். பாகிஸ்தானும் இந்தியாவும் அவ்வேளையில் இப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையென கருதிய காரணத்தினால் **யூ தாண்ட்**, 99-வது சாராம்சத்தைப் பாவிப்பதற்கு முன்வரவில்லை.

இதேபோல் 1994 ஆம் ஆண்டு செயலாளர் நாயகமாக கடமையாற்றிய எகிப்திய நாட்டைச் சேர்ந்த **பூட்டஸ் பூட்டஸ்- காலி**, ருவாண்டாவில் 99-வது சாராம்சத்தைப் பாவிப்பதற்குக் காலம் தாழ்த்திய காரணத்தினால் லட்சக்கணக்கான ரூட்சி இன மக்கள் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமாகியிருந்தனர்.

அடுத்து 70 ஆயிரம் முதல் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டதற்கு முக்கிய காரணம், வடகொரியாவைச் சேர்ந்த தற்போதைய செயலாளர் நாயகம் **பான் கீ**



**மூன்**, 99- வது சாராம்சத்தைப் பாவிக்காது காலம் தாழ்த்தியமையே ஆகும்.

உலகில் அரசியல் போராட்டங்கள் சில நடந்து முடிந்துள்ளன. பல நடந்துகொண்டிருக்கின்றன. சிலர் தொடர்ந்து தமது சுயநிர்ணய உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். இவற்றில் இலங்கை தீவில் வாழும் தமிழ் மக்கள் போல் அதிஷ்டமற்று சோகம் நிறைந்தவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் பல பின்னடைவுகள், முன்னேற்றங்களின் மத்தியில் அங்கு ஓர், **நடப்பின்படி மெய்யான சகல கட்டமைப்புக்களைக்கொண்ட அரசு, தமிழீழ விடுதலை புலிகளின் தலைமையில் உருவாகி** ஏறக்குறைய இரு தசாப்தங்களாக நிலைத்திருந்தது.

இலங்கை அரசு யதார்த்தத்திற்கு முரணான பல பொய் தகவல்களை சர்வதேச அளவில் பறைசாற்ற ஆரம்பித்தது. இலங்கைத் தீவு விடுதலை அடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து தொடந்து வந்த சுயநிர்ணய உரிமைக்கான ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி இப்போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளினாலேயே ஆரம்பிக்கப்பட்டதாக சர்வதேச மட்டத்தில் பொய் பிரசாரம் செய்தது அரசு.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் தமது இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளினாலும் வெல்ல முடியாதென நன்கு தெரிந்திருந்த இலங்கை அரசுகள் யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்த அதேவேளை புத்தி ஜீவிகள், கல்விமான்களினால் பொய்கள் [illegible] ஓர் மாபெரும்




சர்வதேசப் பரப்புரைகளில் ஈடுபட்டனர். இதுவே ஈழத்தமிழ் மக்களது அரசியல் போராட்டத்தின் வீழ்ச்சியின் ஆரம்பமாகும்.

### 99-வது சாராம்சம் எதற்காக செயலிழந்தது?

அன்று ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் 99-வது சாராம்சத்தைப் பாவிக்காமல் அலட்சியம் செய்யப்பட்டதற்கான சில காரணங்களை ஊகிக்க முடிகிறது.

முதலாவதாக- இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச பரப்புரை. விபரமாக கூறுவதானால் புலம்பெயர் வாழ் அமைப்புகளினாலும் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட உண்மைகள் அடங்கிய பரப்புரைகள் உலகில் எந்தவொரு அரசாங்கத்தினுடையதோ அல்லது நாட்டுடையதோ ஆதரவை திரட்ட முடியவில்லை.

இரண்டாவதாக- யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதல்லைப் புலிகள் இயக்கம் 36 நாடுகளில்- அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, ஐரோப்பிய யூனியன் உட்பட பல முக்கிய நாடுகளில்



தடை செய்யப்பட்டிருந்தது.

இவ் தடைகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் வழக்கு தாக்கல் செய்வார்களென சர்வ்தேச சமுதாயம் எதிர்பார்த்திருந்தது. ஆனால், அப்படி எந்த வழக்குகளையும் விடுதலைப்புலிகள் தாக்கல் செய்யவில்லை.

சர்வதேச சட்டத்துக்கு அமைய மக்களின் அழிவுகளை மேற்காட்டி ஐ.நா. செயலாளர் நாயகம் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வரலாம் என்பது உண்மை. ஆனால், முன் கூறியதுபோல் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நடவடிக்கைகள் அரசியல் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

மிகவும் கொடூரமான போர் நடந்த வேளையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சில உத்தியோகப்பற்றற்ற கூட்டங்கள் இடம்பெற்றது என்பது உண்மை. ஆனால், இக்கூட்டங்கள் பாவும் சில அங்கத்துவ நாடுகளின் முன்னெடுப்பிலேயே நடைபெற்றன. அவை ஐ.நா. செயலாளரின் வேண்டுகோளுக்கு அமைய நடைபெறவில்லை.

மூன்றாவது விடயம், ஐ.நா. செயலாளர் நாயகம் அவர்களது காரியாலயத்தில் வேலை செய்த சிலர் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்களாக காணப்பட்டனர். இதேவேளை அங்கு வேலை செய்த ஓர் உத்தியோகத்தரின் உறவினர் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு இலங்கைக்கு ஆலோசனை வழங்குபவராக காணப்பட்டார்.

நான்காவது- விடுதலைப்புலிகள் ஏறக்குறைய இரு தசாப்தங்களுக்கு மேலாக ஓர் நடப்பின்படி மெய்யான சகல கட்டமைப்புக்களையும் கொண்டு ஓர் தமிழீழ அரசை தமது தலைமையில் உருவாக்கி நிலைத்திருந்த பொழுதிலும் அதற்கான ஒருதலைப்பட்சமான சுதந்திர பிரகடனத்தை விடுதலைப் புலிகள் செய்ய தவறிவிட்டார்கள்.

உண்மையைக் கூறுவதானால் 99-வது சாராம்சத்தின் பலத்தை இலங்கை அரசுக்கள் முன்கூட்டியே நன்றாக அறிந்துள்ளது. இதன் காரணமாகவே 2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த செயலாளர் நாயகம் கோபி அனான், ஐ.நா சாசனத்தின் 100-வது சாராம்சத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வன்னிக்கு செல்ல முயன்ற வேளையில் அதை இலங்கை அரசு முற்றுமுழுதாக தடுத்து நிறுத்தியிருந்தது. கோபி அனான் திட்டமிட்டதுபோல் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வன்னிக்கு அன்று சென்றிருந்தால் அவர் அநேகமாக 99-வது சாராம்சத்தைப் பாவித்திருப்பார்.

எமது இராஜதந்திரப்போர் நடவடிக்கை, என்பதை சரியாக ஒருங்கிணைத்து, திட்டமிட்டு, இலக்கு வைத்து, யாவரும் ஐக்கியப்பட்டு செய்யப்படவேண்டும். இதன் மூலமே நாம் எமது இலக்கை அடையமுடியும். எமக்கு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய யூனியன் போன்ற பலம் பொருந்திய நாடுகளின் ஆதரவு மிக அவசியம்.

செயலாளர் நாயகத்தினால் 99-வது சாராம்சம் மூலம் அடையக் கூடிய பல விடயங்களை தவறவிட்டுள்ளோம். ஆகையால் தொடர்ந்து தவறுகளை செய்யாது, சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் படிப்படியான வழிமுறைகள் மூலம் எமது மக்களையும் நிலங்களையும் காப்பாற்றும் அதேவேளை எமது இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை நாம் கையாள வேண்டும்.

இதேவேளை ஐ.நா.வும் சர்வதேச சமுதாயமும் இலங்கைத் தீவில் தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைகளின் மூல காரணங்களை ஆராய்ந்து அறிந்து பாதுகாப்பான ஓர் நிரந்தர தீர்வை அடைவதற்கான வழிகளை



தேட வேண்டும்.

அர்ப்பணிப்புகளின் உச்சத்தில் இருக்கும் தமிழ் மக்களாகிய நாம் எமது இறுதி இலட்சியத்தை அடைவதில் எப்போதும் குறியாக இருப்பதுடன் நாங்கள் தேர்வுசெய்த மாகாண அரசையும் அவ்வழிக்கு நகர்த்த கடமைப் பட்டுள்ளோம்.

**இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் திருவருளும்

பூத்தவளே புவனம் பதினான்கையும்
பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்
கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு
இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர்
தெய்வம் வந்திப்பதே புவனம் பதினான்கு!

" புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவள் பின் மறைத்தவள். அவள் கறைக் கண்டனுக்கு மூத்தவள் ! சிவபெருமானுக்கு மூத்தவள். முகுந்தர்க்கு இளையவள்! கடவுள் நாராயணனுக்குத் தங்கை! மாத்தவள்! உயர்ந்த தவப்பேற்றை உடையவள் அன்னை அபிராமி என்கிறார் அபிராமிப்பட்டர்.

மனமாசு நீங்கியவர்களுக்கு மாயை இல்லை. உயர்வு,தாழ்வு, உறவுகள் இல்லை.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
தெய்வமெல்லாம் நன்றென்றிரு"

"மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்
திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் தெளி நின்றதால்
விழியாள் மதனை அழிக்கும் தலைவர்
அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு
பாகங்கொண்டாளும் பராபரையே"

இமவான் பெற்ற கோமளம் அன்னை உமை. சிவனார் இடப்பாகத்து இணைந்த தலைவி, அவளே அண்டங்களுக்கு அன்னை. சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் சூலமும் தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள்... அம்மாதா...

மும்மல பந்தத்தால் பிணைக்கப்பட்ட



வர்கள் சும்ப-நிசும்பர் என்ற அரக்க சோதரர் மகிஷனும் அப்படியே.

தேவர்களும் மன்றாடினார்கள்

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் தனது கடமை என்றார் எண் குணத்தார் பரம்பொருள்.

ஏற்கனவே அசுரனுக்கு தானளித்த வரத்தை எப்படி மாற்றமுடியும்? என்றார். ஆன்மாக் களின் நலன் விரும்பிய தெய்வத்தாயோ நான் தவமிருக்கப் போகிறேன் என்றார்.

"அது விதி" என்றார் முற்றும் உணர்ந்த அப்பன்.

துர்க்கை எனிற் பொருள் மங்கலம் தரு பவள் அல்லவா? அன்னை புரட்டாதி மாதத்துச் சுக்கிலபட்ச பிரதமையில் நோன்பை ஆரம் பித்தார்.

"மங்கள வாரம் சொல்லிட வேண்டும்
மங்கள கன்னிகை ஸ்லோகம்-இதை
ஒன்பது வாரம் சொல்லுவதாலே
உமையவள் திருவருள் சேரும்"

பார்வதி தேவியாரைக் கும்பத்திலே பூசை செய்து அனுட்டிக்கும் விரதமாம்.

முதல் மூன்று நாட்களும் அன்னை

## வெற்றித் திருநாளும்

மாயையின் ஆக்கிரமிப்பால் மமதை கொண்டவர்கள் மற்றையவர்களை வருத் தினர்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலினி அவள். தேவி இறைவனிடம் கருணையை எதிர்பார்த் தாள். ஆன்மாக்கள் படும் அவஸ்தைகளை இறைவா கண்டு கொள்ளவில்லையா? எனத் தாயுள்ளம் இரந்தது.

துர்க்காதேவியாக இருந்து அருள் பாலித்து ஆன்மாக்கள் உய்தி பெறக்காத்தாள்.

''பொற்கரங்கள் பதினெட்டும் நம்மைச்
சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டு வெற்றிப்
பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதிசக்தி
அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் எம்மைக் காப்பவளே"

அன்னையின் பாதங்களில் சரண்புகுந் தார்க்கு அல்லல்கள் தீரும்

அபயம் என்று அவளைச் சரண் புகுந்தாலே
அடைக்கலம் அவளே சக்தி ஜெய ஜெய
சங்கரி கௌரி மேனாகரி அபயம் அளிப்பவள்
அம்பிகை பைரவி - சிவ சிவ சங்கரி
சக்தி மஹேஸ்வரி திருவருள் தருவாள் தேவி

மகிஷாசூர சங்காரத்தை அன்னை மகா நவமியிலே நிறைவேற்றுவாள்.

அன்னையிடம் தோற்றோடிப் புதுமை யான வன்னி வாழைக்குள்ளே ஒளித்த மகிஷாசூரனை அன்னை சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலும் சூலமும் தங்கக் கைகளில் தாங்கி.நிற்பாள் அம்மாதா...

சிங்கத்தின் மேலே வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நிற்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையர்க் கரசியும் அவளே
அங்கயற் கண்ணியும் அவளே...'

அன்னையின் மகிஷாசூரவதம் புனித ஆன்மாக்களைக் கொண்டாடி மகிழ வைத் தது. அதன்பின்னே விஜய தசமி பிறந்தது. இதுவே மேலான வெற்றித்திருநாள். இந்த நாளில், மழலைகள் மாண்பு பெற அறியா மையை போக்கும் அறிவுபெற அஷராப் பியாசம் முதலிலே செய்து "அ" கற்க வைத் தார்கள்.

இல்லங்கள் தோறும் செழுமையும் வள மும் மகிழ்வும் நிலைக்க மங்கலங்கள் எட்டும் என்றும் நிலைக்க செய்தொழிற் படைக் கலங்களுக்கு பூசை வழிபாடியற்றித் தொழில் களை ஆரம்பித்தார்கள்.

மனதிலே உள்ள மன இருள் விலகி விடிவு தழுவிய ஒளி எங்கும் வியாபித்துப் பரவி குதூகலம் நிறைந்த நாளே விஜய தசமி!

க.கு.க.சிவபாலன்
அம்பாள் பக்தர்

# அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியை தழுவுவார்

## ராஜீவை தாக்கிய முன்னாள் கடற்படை வீரர்

(கொழும்பு)

ராஜீவ்காந்தியை தாக்கிய முன்னாள் இலங்கை கடற்படை வீரர் விஜிதரோஹண விஜிதமுனி அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியைத் தழுவுவார் என தெரிவித்துள் ளதோடு, இந்தியாவில் பிரதமராவதற்கு ராகுல்காந்திக்கு சகல தகுதிகளும் இருப்பதாக வும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்திய ஊடகமொன்று நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1987 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைத் தாக்கிய இலங்கைச் சிப் பாய் தற்போது ஜோதிடராகவும் இசைக் குறுந் தகடுகளின் விற்பனையாளராகவும் தொழில் புரிந்து வருகிறார்.

தற்போது 46 வயதான இவர் இலங் கையின் முன்னாள் கடற்படை சிப்பாயாவார்.

இவர் ராஜபக்ஷ குறித்து ஊடகத்திற்கு ஜோதிடம் கூறுகையில், அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ தோல்வியைத் தழுவுவார் என்றார்.

மேலும் இந்திய அரசியலையும் தான் கவ னித்து வருவதாகவும் வரும் 2014 ஆம் ஆண்டு தேர்தலில் பாரதீயஜனதா ஆட்சி யைப் பிடிக்கும் எனவும் ஜோதிடம் கூறியுள் ளார்.

ராஜீவ் குறித்து கேட்கப்பட்ட கேள்வி ஒன் றிற்கு பதிலளித்த விஜிதமுனி , ராகுல் நிச்சயம் பிரதமராவார். ஆனால், இப்போதல்ல, அடுத்த தேர்தலில்தான் எனக் கூறியுள்ளார்.

ராகுலுக்கு தீர்க்காயுசு எனவும் தனது ஜோதிட திறமை மூலம் தாம் இதனைக் கணித் திருப்பதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மற்றொரு சிங்கள ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டியில் விஜிதமுனி , தான் இந்தியாவுக்கு எதிரானவன் அல்லன் என்றும் இலங்கையின் வான் பரப்பில் அத்துமீறி, பறந்து நாட்டை ஆக்கிரமிப்பு செய்த ராஜீவ் காந்தி பலாத்காரமாக இந்திய-இலங்கை உடன் படிக்கையை மேற்கொண்டு நாட்டைப் பிரிக் கும் 13 ஆவது திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் இலங்கை அரசியலமைப் புக்குள் புகுத்தியதனாலேயே தான் அவரைத் தாக்கியதாகவும் கூறியிருந்தார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத் தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சா ளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் பொது மக்களின் நாளாந்த வாழ்க்கையில் இது பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அவர் கூறினார். (அ-2)

# பிரதி அமைச்சு பதவிகள் வழங்கும் செயற்பாடுகள் தொடருமாம்

(கொழும்பு)

அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு பிரதியமைச்சுப் பதவிகளை வழங்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரி வித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதியமைச்சுப் பதவி களை வழங்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறும். நாட்டின் அபிவிருத்தி தேவை கள் அதிகரிக்கும் போது, அவற்றுக்கான பதவி நியமனங்கள் அவசியமாகும். அதனையே நாம் செய்துவருகின்றோம்.

கடந்த 1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாகாண சபைகளில் அமைச்சர்களாக இருந் தவர்களுக்கும் பதவிகள் வழங்கப்பட்டுள் ளன. அவ்வாறான சில விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட் டுள்ளன. (அ-2)

# சர்வதேச சிறுவர் தினத்தில் பெறுபேற்றை வெளியிடக்கூடாது

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றை, சர்வதேச சிறுவர் தினத்தில் வெளியிடக்கூடாது என்று மனித உரிமை ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றை, சர்வதேச சிறுவர் தினத்தில் வெளியிடுவது தொடர்பில் விளக்க மளிக்குமாறு ஆணைக்குழு அரசதிணைக் களங்களில் 35 திணைக்களங்களின் அதி காரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந் தது.

இந்த அழைப்பையேற்று வருகைதந்த அரச திணைக்களங்களின் அதிகாரிகளே மேற் கண்டவாறு தெரிவித்ததாக மனித உரிமை கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீப மஹாநாமஹேவா தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தாது ஏழாம் அல்லது எட்டாம் ஆண்டுகளில் இந்த பரீட்சையை நடத்து வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற் கான யோசனைகளைப் பெற்றுக் கொள்வது உகந்தது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கேதார கௌரி விரத பூஜைகள்

(கரணவாய்)

பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூசைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இவ் விரத வழிபாடுகள் நாளை திங்கட் கிழமை முற்பகல் 11 மணி முதல் ஆரம்பமாக வுள்ளதுடன் தினமும் காலை 9 மணி முதல் பூசைகள் நடைபெறவுள்ளன.

காப்புக்களைப் பெற விரும்புவோர் ஆலய முன்றலில் காலை 9 மணி தொடக் கம் 11 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும். (அ-9-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காத்திருக்கிறேன்...

உன்னைச் சந்திக்கும் அந்த
திருநாளை எண்ணினால்
என் மனதுக்குள் ஆயிரம்
பட்டாம்பூச்சிகள் அல்லவா
இறக்கை முளைத்து
சிறகடித்துப் பறக்கின்றன...
உன் பார்வைகளை
நான் பரிசிக்க வேண்டும்
உன் மூச்சுக் காற்றினை
நான் சுவாசிக்க வேண்டும்
உனக்குள் என்னை
தொலைத்துவிட்ட அந்த
நாளை உன்னிடம்
வார்த்தைகளால்
வடித்து எடுத்து
உன் காதோரம்
கூற வேண்டும்....

கங்கா. பா
வண்ணார்பண்ணை

## கன்னி


என் கனவுகளில்
வந்து செல்லும்
அதிசய பறவை நீ
உனை நிஜங்களில்
காணவில்லை
விழிமூடியவுடன்
வருகின்றாய்- என்
கண்களின் ஓரம்
என்மன வலைகளில்
உனைப் பிடிக்க நினைத்து
கன்னி வைக்கின்றேன்
நான்தான் சிக்கி விடுகின்றேன்

இணுவில் வாகீசன்

## நிமிர்ந்து நில்

*ஓ கண்களே!
தடுமாறும் பார்வைகளே!
தலைகுனிய வைக்கும்
சமுதாயத்தின் மத்தியில்
உன்பார்வை மற்றவரை
தலை குனிய வைக்கட்டும்
தலை நிமிர்ந்து நடைபோடு
தன்னொளி பரவட்டும்
எங்கெங்கும்...*

விஜிதா,
மயிலிட்டி




## நெஞ்சோடு

கனவுகளுக்காகக் காத்திருக்கும்
உன் நினைவுகளோ
நடுவெளியில் தவிக்க விட்ட
தீபங்களாய்
தினம் தினம் போராடுகின்றது
திரியாய் நானிருந்தும்-- உன்னை
அணையா ஒளியாய் மாற்றிவிட
முயற்சிக்கிறேன்...
என் முயற்சிகளோ
காற்றுடன் சண்டையிட்டு
தோற்று விடுகிறது
நான் திரியாயிருந்து என்ன பயன்
ஒளியை அணையாமல் காத்திட
என்னிடம் கைகள் இல்லையே!
ஒளி அணைந்தாலும்--
உன் நினைவுகளோ
என் நெஞ்சில் அணையா
ஒளிவிளக்கே!

தாட்ஷாயினி, சுரிமலை.

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
இயல், இசை, நாடகமென
கலை வாழ்வை மறந்து
திரைப்படப் பாணியில்
தனை மாற்றி -- தலைவாரி
உடல் உழைப்பால் தவிர்த்து
உலா வருகின்றான்
நாற்பது கடந்தால்
சர்க்கரை நிச்சயமென்பதறியாமல்

- மாவை.நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல் - 173



## அடக்கிய சுமைகள்

தந்தை தனயன் முதல்
கட்டிய கணவன்வரை
அடிமைத் தொழிலில்
அமைதியடைந்த பெண்ணே!
மறந்து விட்டாயே- விடிவு
உன் கையில் என்பதை
கைகளை விரித்துவிடு
கட்டுக்கள் தளர
சுமைகள் அகலும்

தமிழ்த்தோழி
இரா.ஜெயறூபினி

## நாளை

முதுகில் விறகினை
சுமக்கும் பெண்ணே!
உன் கஷ்டத்துக்கு
நாளை பதில்
சொல்லும் சமூகம்

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## பிள்ளை மனம் கல்லு

பத்துமாதம் சுமந்து
பெற்று பாலூட்டி
சீராட்டி மார்மேலும்
தோள்மேலும் சுமந்து
பகலிரவாய் விழித்திருந்து
வளர்த்து ஆளாக்கிய
அன்னையே
தள்ளாடும் வயதினிலே
உமக்குப் பணிவிடைகள் செய்யாமல்
விறகு சுமக்க வைத்த
உம் பிள்ளைகளின்
மனமோ கல்லம்மா

மீரா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## வேதனை

காலத்தின் கோலத்தால்
கண் இமைபோல
காத்திட்ட குழந்தைச்
செல்வங்கள் எங்கே?
ஏன்? இந்த அவலம்
உங்கள் முதுகில்
சுமை சுமக்கிறீர்கள்
யாரால் இந்தச் சோதனை
ஏன் இந்த வேதனை

ஆ.சுஜவேந்தன்
மட்டுவில்

## அன்பு

முதுகு கூன் விழுந்தாலும்
கால் இடறப்பட்டாலும்
ஆவி அடக்கப்பட்டாலும்
நான் வைத்த அன்பு
உங்கள் மேல் உலகளவு
நான் பெற்ற செல்வங்களே

யோ.பிரத்திகா
மிருசுவில்

## தன்னம்பிக்கை

பெற்றவர்களென்ன
சுற்றத்தவரென்ன
எத்தனைபேர் சேர்ந்தாலும்
என் முதுகெலும்பு
போதும் இச்சுமை
சுமந்து இப்பூமியில்
நிமிர்ந்து வாழ

யு.சோபியா
விசுவமடு

## அவலம்

சுமக்கப்படவேண்டியவள்
சுமைதாங்கியானாள்
துதிக்கப்படவேண்டியவள்
துன்பத்தின் அடிமையானாள்
மிடிமை கண்டோர்
மீட்சிதான் என்றோ?

[illegible]

## வெள்ளை ராணி

வெறித்த பார்வை
வெளிறிய தோல்கள்
தடித்த புருவம்
தவறெண்ணா உள்ளம்
பழுத்த நரம்பு - இன்னமும்
பயமறியா கண்கள்
சுருங்கிய தோல்கள்- ஆனாலும்
சுறுசுறுத்த இதயம்- உனக்கு
சுற்றமென யாருமில்லை...
உண்மையிலே நீ
கள்ளிக்காட்டு
வெள்ளை ராணிதான்...

ஒட்டுவெளியூர்
ந.வினோரூபன்

## கிரியைக்காய்

ஈழத்திலே ஈன்றெடுத்த பிள்ளை
இன்றுவரை வரவில்லை
இறுதி கிரியைக்கு
இன்றுமுதல் சேர்க்கிறேன்
இவ் விறகுகளை

எஸ்.ரி.என்.நிரோஜன்
மட்டுவில்

## தனிமை

நான் செய்த பாவம் பாசம்
நான் கண்ட உண்மை துரோகம்
எனினும் கடவுளை
எண்ணிக்கொண்டு
கைகளை நம்பிக்கொண்டு
செல்லும் பாதை
வாழ்க்கைப் பயணமல்ல
வாழ்க்கைப் பாடம்

சு.அபர்ணா
வட்டுக்கோட்டை

## காலம் வாழ வைக்கும்

இழந்தவற்றை எண்ணிக்
கவலைப்படாதே பாட்டி
துணிவோடு எழுந்து நிமிர்ந்து நில்
எத்தடை வந்தாலும் அத்தடைகளைத்
தகர்த்துத் தாண்டிச் செல்
கட்டு விறகை இறக்கி வை
இனிக் கவலையும்
கண்ணீரும் வேண்டாம்
காலம் உன்னை வாழவைக்கும்

துரை
தென்மட்டுவில்

## ஆதரிப்பார் யார்?

சொந்தங்களை இழந்து தன்
சொத்துக்களையும் பறிகொடுத்து
ஆதரிப்பார் யாருமின்றி
அநாதையாய் விடப்பட்ட பாட்டி
வயிற்றுப் பசிபோக்க ஒருவேளை
உணவுக்கு வழியின்றி
நொந்து வெந்த மனதோடு முதுகில்
விறகுக் கட்டை
சுமந்து செல்கிறாள்
யார் இவளை ஆதரிப்பார்


இ.ஆராதனா
மட்டுவில் தெற்கு

## முன்னேற்றம் காண

கால்கள் கானமயில்களாக நடக்க
வியர்வை பனித்துளியாக பெருக
என் வாழ்க்கைக்காக
போராடுகிறேன்
வாழ்வின்
முன்னேற்றம் காண!

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -174



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 17.10.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சு பதவிக்கான இழுபறிகளும், அரசாங்கத்தின் இராஜதந்திரமும், அர்ப்பணிப்பு நிறைந்த மண்ணும்



சர்வதேசத்தின் கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாகியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அந்த நெருக்குதல்களில் இருந்து மீளுவதற்காக, கூட்டமைப்பிற்கு கயிறு விடும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாக அரசாங்கத்திற்கு மிகவும் நெருக்கமான தரப்புகளில் இருந்து தெரியவருகிறது.

ஐக்கியநாடுகள் மனித் உரிமைகள் அமைப்பின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம், அதன் பின்னரான அவரது வாய்மொழி மூல அறிக்கை அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா முதலான நாடுகளின் கடுமையான அறிக்கைகள் என்பன இலங்கையை கடுமையான சிக்கலில் மாட்டியுள்ளன. கூடவே எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக இலங்கை இறுதியுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், தொடர்பாகசர்வதேச நியமங்களுக்கு ஈடான விசாரணை, குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனை உருப்படியான மீள் குடியேற்றம், வடக்கு கிழக்கின் இராணுவ பிரசன்னத்தை குறைத்தல், உள்ளிட்ட சர்வதேசத்தின் பல்வேறு நிபந்த னைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய நிலையில் இராஜபக்ச குடும்ப அரசாங்கம் விளங்குகிறது.

ஆயினும், வழமைபோலவே போலியான உத்தரவாதங்களிலும் பொய்யான வாக்குறுதிகளிலும் மயங்கி, தமது கயிற்றைப் பிடிக்கும் தமிழ்த் தலைமைகளுக்கு கயிறு விடுவதுதான், இவற்றில் இருந்து மீளுவதற்கு மிகவும்இலகுவான வழி என்றே



அரசு நம்புகிறது.

ஏற்கனவே, ஒரு நிகழ்வில் கலந்துகொண்டபோது முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவரிடம் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி நீங்கள் தான், வடமாகாண சபைத் தேர்தலில் வெல்வீர்கள் என்பது எனக்குத் தெரியும், அந்த வெற்றியை எப்படி எதிர்வரும் ஜெனிவாவிற்கு துருப்புச் சீட்டாக பயன்படுத்துவதும் என்பது எனக்குத் தெரியும் எனக் கூறினாராம்.

அண்மையில் இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித், ஜனாதிபதியை சந்தித்த போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அருகிருந்தார்.

அச்சந்திப்பின்போது, கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ச "மாவட்ட அபிவிருத்தி அமைச்சர்களை நான் நியமனம் செய்யப்போகிறேன். வட மாவட்டங்களின் அபிவிருத்தி அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவே விளங்குவார். எனவே, அவரும் சீ.வி. விக்னேஸ்வரனுத் அபிவிருத்திக்கான இணைத் தலைவர்களாக செயற்பட வேண்டியிருக்கும்" எனக் கூறியிருக்கிறார். ஆகவே, வடக்கின் அனைத்து அபிவிருத்தி நிதியும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் அரசாங்க அமைச்சரே நேரடியாகக் கையாளும் நிலை உருவாகுவது, நிச்சயமாகியுள்ளது.

சிலநாட்களுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்தனர். வடமாகாண முதல்வர், பதவியேற்பு மற்றும் ஏனைய பல விடயங்கள் குறித்து அந்த சந்திப்பில் உரையாடப்பட்டது. ஜனாதிபதியின் கூற்றுக்கமைய இரா.சம்பந்தனும் சுமந்திரனும் பாதுகாப்புச் செயலரைச் சந்தித்ததாகவும், அச்சந்திப்பின்போது, பாதுகாப்புச்செயலர், "வட மாகாண சபை உத்தியோகபூர்வமாக செயற்பட தொடங்கியவுடன் வடக்கின் பிரதான கட்டளைத் தளபதிகள், காவற்றுறை மாஅதிபர்கள், முக்கிய அதிகாரிகளுடனான சந்திப்பின் [illegible] செய்கிறேன். எதிர்காலத்தில் மாகாண சபையுடன் எவ்வாறு இணைந்து தொழிற்படுவது என்பது பற்றி பேசுவோம்" என தெரிவித்ததாக செய்திகள் கசிகின்றன.

இப்படியான முன்னகர்வுகள் ஒருபுறம் தொடர, இலங்கை ஜனாதிபதி, தனக்கு மிக நெருங்கிய ஒருவரிடம், நேரடியாக கூறாமல் கூறிய ஒரு விடயம் மிகமிக முக்கியமானது. கொமன் வெல்த் நாடுகளின் மாநாடு, எதிர்வரும் 2014 ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம், அதற்கு முன்னராக வழங்கப்பட்ட காலக்கெடு, அமெரிக்காவினால், கொண்டு வரப்படலாமென எதிர்பார்க்கப்படும் கடுமையான அறிக்கை இவை எல்லாவற்றையும் கடந்தபின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், செயற்பாடு களில் கண்டுபிடிக்கப்படும் ஓட்டை களை வைத்து ஒரு வருடத்தில் மாகாண சபையைக் கலைத்துவிடு வதன் மூலம் தெற்கில் ஏற்பட்ட கடும் போக்காளர்களின் விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, 2014 அரசாங்கத் தேர்தல்களிலும் பாரிய வெற்றியைப் பெறமுடியும் என்ற கருத்துப்பட உரையாடல்கள் நிகழ்ந்ததாகவும் செய்திகள் கசிகின்றன.

இந்த மிகநுண்ணிய அரசியல் நகர்வுகளை, காய்நகர்த்தல்களை முன்னெடுக்கும் மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் அதன் ஆலோசகர்களும் அதற்கு ஏற்றதாக அதி முக்கியமான ராஜதந்திர நகர்விலும் களமிறங்கியுள்ளதாக தெரிய வருகிறது. எதிர்வரும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் வடக்கின் முதலமைச்சர்களை கலந்துகொள்ள வைக்கும் முயற்சியும் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் அபிவிருத்திக்கு இந்த நாடுகளின் ஆதரவைப் பெறலாம் என்ற வாக்குறுதிகளுடன் இவர்களைக் கலந்து கொள்ளச் செய்தால், உலக நாடுகளின் கொதிப்பையும் வாயையும் அடைக்க முடியும் என இலங்கை அரசாங்கத்தின் ஆலோசகர்கள் தெரிவிக்கிறார்கள். அதனால், அந்த முயற்சியில் அரசியல் காய்நகர்த்தல்களை ஆரம்பித்துள்ள அரசாங்கம், இதன்மூலம் இந்தியப் பிரதமரையும் கலந்து கொள்ள வைப்பதில் இந்தியாவுக்குள் ஏற்படும் சலசலப்புகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என உறுதியாக நம்புகிறது. இது குறித்து இரகசியப் பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே, கூட்டமைப்பின் தலைமையுடன் அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்பினர் ஆரம்பித்துள்ளனர். அரசாங்கததின் இந்தக் கோரிக்கையையும் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்வதற்கான அதிக வாய்பு இருப்பதாக அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றபோதும், கூட்டமைப்பு இதுபற்றி எதுவுமே நடக்காத தோற்றத்தில் மௌனித் திருப்பதாக [illegible] இலங்கையின் [illegible] சகோதரர்கள், அவர்தம் ஆலோசகர்கள் யாவரும் வடக்கில் ஏற்பட்ட தமது கடும் தோல்வியில் இருந்தும், சர்வதேசத்தின் பொறியில் சிக்கித் தவிக்கும் பரிதாப சூழலில் இருந்தும் மீளுவதற்கான தந்திரோபாயங்களையும் மூலோபாயங்களையும் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அரைநூற்றாண்டாக ஆரம்பத்தில் அகிம்சையிலும், பின்னர் 3 தசாப்பதங்கள் ஆயத வழியிலும் போராடி, சொல்லொணாத் துயரங்களையும், விலைமதிப்பற்ற இழப்புகளையும் அடைந்து, இறுதியில் முள்ளிவாய்க்காலையும் நந்திக் கடலையும் தமது குருதியால் குளிப்பாட்டிய அர்ப்பணிப்பு மிக்க இனத்தின் -தலைமைகளாகத் தம்மைச் சொல்லிக்கொள்வோர் போடும் அரசியல் பித்தலாட்டங்களை எப்படி கூறுவது?

போனஸ் ஆசன ஒதுக்கீட்டிலும், அமைச்சரவைப் பங்கீட்டிலும், தமது கட்சிக்குள்ளேயே தாம் விரும்புவோருக்கு அமைச்சுக்களை கோருவதிலும், ஒருவரையொருவரை ஒருவர் ஓரம் கட்டுவதிலுமே, இனிவரும் காலத்தையும் அழிவுப் பாதைக்குள் செலுத்துவதற்கு கங்கணம் கட்டி நிற்கிறார்கள்; இந்த சந்திசிரிக்கும் கூத்துகள் அடங்குவதாக இல்லை....

இந்த நிலையில் இவ்வாறான, செயற்பாடுகளில் உள்ள அனைவரையும் நோக்கி முக்கியமான கேள்களை முன்வைப்பது தவிர்க்க முடியாதது.

தமிழ்த் தேசியப்பற்றாளர் களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்குப் பின்ன ரான தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமையின் நடவடிக்கைகள் குறித்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்தார்களா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் தமது கட்சிக்குள் தொடரும் பதவிப் போட்டிகள் குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனரா?

மாகாணசபைத் தேர்தலின் பின் முன்ரைவிடவும் கூர்மையடைந்துள்ள த.தே. கூட்டமைப் பின் முரண்பாடுகளுக்கு உடனடியான தீர்வைக் காண அனைவரும் முயன்று இருக்கிறார்களா?

த.தே.கூட்டமைப்பின் தலைமையும் வடமாகாண சபையின் தலைமையும் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளும் நல்லிணக்கச் செயற்பாடுகளை, சர்வதேச நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான உத்தியாக, அரசாங்கம் மாற்றிக்கொள்ளப்போகிறது, என ஏன் கருத முடியாது, எனக் கேள்விகள் கேட்டார்களா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் தலைமையும் வடமாகாண சபையின் தலைமையும் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சரியான உத்தரவாதங்கள், உறுதி மொழிகள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என கேள்வி எழுப்பினரா?

கணக்கிட முடியாத உறுதி மொழிகளை எல்லாம் குப்பையில் போட்ட ஜனாதிபதி மகிந்தராஜபக்சவையும் அவரது அரசாங்கத்தையும்நம்பிகண்ணைமூடிக் கொண்டு நல்லிணக்கம் பேச முற்படும் தமது தலைமையிடம் கேள்வி கேட்பார்களா?

அத்தகைய ஆக்கபூர்வமான கேள்விகளை விடுத்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் காக்கும் பொருத்தமான செயற்பாடுகளை விடுத்து, முரண்பாடுகளை வளர்த்து அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் அயோக்கியத் தனமான, ஈனத்தனமான செயல்களைப் புரியவா? மக்கள் வாக்குகளைப் பெற்றீர்?

-ராஜபரமேஸ்வரி-
குளோபல் தமிழ்ச் செய்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வுக்கான தெரிவுக்குழுவே சிறந்தது

## முடிவில் மாற்றமில்லை என்கிறார் அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)

**பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடனான சந்திப்பின் போது இதனையே வலியுறுத்தியிருந்தார்.

எனினும் இந்திய அமைச்சர் இது தொடர்பில் அதிகம் பேசாது ஓரிரு வார்த்தைகளுடன் நழுவிவிட்டார். ஆயினும் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமை இரண்டையும் இணைத்து ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர்,

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு அல்லது வேலைத் திட்டத்துக்கு முரணானது எனில் அதில் பிரச்சினை உள்ளது. எனினும் இது சத்தியப் பிரமாணத்துக்கு தடையாக இருக்காது.

நாட்டின் அடிப்படைச் சட்டங்களுக்கு அது முரணானது எனில் அது தொடர்பில் சட்டப்படியான முறைமை கையாளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டியிருந்தது. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அரசியல் அமைப்புக்கு முரணானது என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அரசியல் அமைப்புக்கு முரணான வகையில் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருந்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றது. தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் முதலமைச்சரின் பதவிப் பிரமாணத்துக்கும் தொடர்பில்லை.

ஜனாதிபதியின் முன்னிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை சட்டத்துக்குபுறம்பானதல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது அங்கு மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வு கூடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து மக்கள் நலன்சார்ந்து உழைக்க ஒத்துழைப்போம்

## வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சராக நியமனம் பெற்றுள்ள சி.வி.விக்னேஸ்வரனுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாகாண சபை முறைமையை ஏற்று அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு அவர் முன்வந்திருப்பதையும் பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை முறைமையை ஒழுங்குற செயற்படுத்துவதன் ஊடாக அதனை ஓர் ஆரம்பமாகக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கான தீர்வை எட்ட வேண்டும் என்பதை நாம் கடந்த பல வருட காலமாக கூறி வந்திருக்கின்றோம். இதனை இவர்கள் காலங்கடந்தாவது இன்று ஏற்றுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

அந்த வகையில், நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் மீறாத வகையில் மாகாண சபை நிர்வாகத்தை முன்னெடுத்து, எமது மக்களின் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் முன்வர வேண்டும். இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நான் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவேன். தவிரவும் எதிர்க்கட்சி என்ற வகையில் வெறுமனே எதிர்ப்புக் கட்சியாக நாம் இருந்துவிடப் போவதில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, எமது பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை சார்ந்த பிரச்சினைகள் பல தீர்க்கப்பட வேண்டியுள்ளன. அது மட்டுமல்லாது, இந்திய கடற்றொழிலாளர்களால் எமது கடற்றொழிலாளர்கள் அன்றாடம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

விவசாயிகளின் பிரச்சினைகள், குடும்பத் தலைவரை இழந்த பெண்களுக்கான சுய தொழில் வாய்ப்புக்கள், வீதிகள் மற்றும் பாடசாலைகள் அபிவிருத்தி செயற்பாடுகள், தொழில் வாய்ப்புக்கள் உட்பட பல்வேறு துறை சார்ந்து நாங்கள் மேலும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அவர் விடுத்துள்ள அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

மொனராகலை மேல் நீதிமன்றம் இரு சகோதரர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களுக்கே நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 1997 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடந்த கொலைச் சம்பவம் தொடர்பில் இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மொனராகலை மாவட்டத்தின் எத்திமலை என்ற பிரதேசத்தில் இரண்டு பேரை இவர்கள் கொலை செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் சகோதரர்கள் சம்பந்தப்பட்டிருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நீதிபதி கியான் எச்.குலதுங்க, கொலையை அவர்களே செய்துள்ளதாக சாட்சியங்களும் சம்பவங்களும் உறுதிப்படுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

இதனால் இந்தக் கொலை குற்றத்திற்காக குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிப்பதாகவும் நீதிபதி அறிவித்தார். (அ-2)

# பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலை முதற்தேர்வு-2010 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகின் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தமது பரீட்சைப் பெறுபேறுகளை வெளிவாரி பரீட்சைகள் அலகில் நாளை திங்கட்கிழமை முதல் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் மீள்பரீட்சார்த்திகள் உடனடியாக பரீட்சைக்கும் விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# மணி விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபரும் தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்த மூர்த்தியின் மணிவிழாவும் ஸ்ரீஸ்கந்தநாதம் மலர் வெளியீடும் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை கலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரீன் பி.ஞானப்பிரகாசம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஸ்ரீஸ்கந்தநாதம் மலரை ஹற்றன் நஷனல் வங்கி சங்கானைக் கிளை முகாமையாளர் ம.தயாகரன் வெளியிட்டு வைக்க வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா, ஆய்வுரையை திருநெல்வேலி யா/ பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

முதற் பிரதியை யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்புப் பிரதியை ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சண்முகநாதன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை தடவை காதல் வரும் அண்ணா?

**அமீரா, கோகுலவீதி**

அன்பின் வியாசரே!

ஆண்கள் ஏன் பெண்களிடம் உண்மையாக இருப்பது போல் நடிக்கின்றார்கள்? அவர்களுக்கு பெண்களின் மனது புரிவதில்லையா? தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

**கண்டதற்கெல்லாம் கண்ணீர் விடும் கலாசாரம் உள்ளவரை ஆண்கள் நடிகர்கள்தான். என்ன செய்வது சிலதைப் பெற வேண்டுமென்றால் பல பொய்கள் சொல்லத்தான் வேண்டும். அதிலொன்று " இன்றைக்கு நீ ரொம்ப அழகா இருக்க"**

---

**ர.புவித்ரா, சாவகச்சேரி**

வியாசர் அண்ணா!

இன்றைய காலத்தில் முதியோர் இல்லங்களில் முதியவர்கள் கூடுதலாக காணப்படுகின்றார்கள். காரணம் வறுமையா? அல்லது கைவிட்டவர்களா? அல்லது வேறு காரணமா?

**வறுமையும் கைவிடப்பட்டவர்களும் 10 வீதம் என்றால் மீதி 90 வீதமும் பிள்ளைகள் வெளிநாட்டில்தான் இருக்கும். என்ன செய்வது அவர்கள் மரணத்தின் பின் வருவார்கள் முதியோர் இல்லத்திற்கல்ல மலர்ச்சாலைக்கு.**

---

**தர்ஷிகா, யாழ்ப்பாணம்**

வியாசர் சேர்!

ஐஸ்வர்யா கண்கள் பிடிக்குமா? அமலாபால் கண்கள் பிடிக்குமா? என்பதை கள்ளங்கபடம் இல்லாத வெள்ளை மனத்துடன் சொல்லுங்கள் பார்க்கலாம்?

**ஐஸ்வர்யாவையும் அமலாபாலையும் ஏராளமானவர்களுக்கு பிடிப்பதற்கு அவர்களின் கண்கள் காரணமில்லையே! அதை கள்ளம் கபடம் இல்லாத மனதுடன் எப்படிச் சொல்ல முடியும்?**

---

**எஸ்.எஸ்.ஸ்ரீ, அல்லாரை**

வியாசர் அண்ணா!

எத்தனை தடவை காதல் வரும் அண்ணா? முதலாவது தடவை வருவது உண்மையான காதலா? அல்லது பின்னர் வருவது உண்மையான காதலா? என்னவென்று அறிவது காதலை?

**தம்பி! ஸ்ரீ காதல் கழுத்தில் கட்டிய மணியா வருவது தெரிவதற்கும் நினைத்தவுடன் தூக்கிப் பார்ப்பதற்கும்.**

---

ஐஸ்வர்யா கண்கள் பிடிக்குமா?
அமலாபால் கண்கள் பிடிக்குமா?

கொஞ்சம் சிரிங்கப்பா...




**கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்**

அன்பின் வியாசரே!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நீங்கள் எழுதுவதாக இருந்தால்?

**இதைப்படி அதைப்படி என்று திணிக்கவும் பத்து மணிக்கு ஒன்று பதினொரு மணிக்கு இன்னொன்று என Class இற்கு கூட்டிச் செல்லவும் எனக்குத்தான் பெற்றோர் இல்லையே! நிம்மதியால் எழுதலாம்.**

---

**சு.ஜெயரூபன், பருத்தித்துறை**

அன்பின் வியாசரே!

அரசியல் செய்ய என்ன தகுதி வேண்டும்?

**என்னிடம் எந்தத் தகுதியும் இல்லையென்ற பதில் உங்களிடமிருந்து வருமானால் அப்போதே நீங்கள் அரசியல் செய்ய தகுதி பெற்று விட்டீர்கள் என்று அர்த்தம்.**

---

**க.கபில்ஸ்ரன்**

அன்பின் வியாசரே!

உண்மைக்காக அநியாயத்தை எதிர்ப்பதா? அல்லது அநியாயத்திற் காக உண்மையை எதிர்ப்பதா? எது சிறந்தது. இதற்கு உங்கள் பதில் என்ன?

**உண்மைக்காக அநியாயத்தை எதிர்க் கும்போது உண்மை வெல்லும். அநியா யத்திற்காக உண்மையை எதிர்க்கும் போது உண்மை சொல்லும்.**

---

**எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்**

வியாசர் அண்ணா!

பெண் புத்தி பின் புத்தி என்று கூறுகிறார்களே. அது எப்படி என்று நீங்கள் பதில் கூறுவீர்களா? (பிளீஸ்)

**"பின்" என்றால் ஆங்கிலத்தில் கூர்மை என்று பொருள். அப்படி என்றால் பெண் புத்தி கூர்மையானது என்றே பொருள்படும்.**

---

**வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி**

அன்பின் வியாசரே!

ஒரு பெண் ஆணைக் காதலிக்க காரணம் என்ன?

**பிச்சைக்காரன் போல் அடிக்கடி அவளிடம் போய் காதல் காதல் என்று கேட்டால் அவளும் என்ன செய்வாள். வேறு வழி இல்லாமல் பிச்சையாய் காதலை கொடுத்து விடுவாள்.**

---

**சி.றெபேக்கா, மட்டுவில்**

அன்பின் வியாசரே!

சிறு வயதினிலே சோம்பறியாக இருப்பவர்களைப் பற்றி யாது நினைக்கின்றீர்கள்?

**இவர்கள் தாங்கள் வீடு கட்டாமல் இன்னொருத்தர் கட்டிய வீட்டில் குடிபுக நினைப்பவர்கள். நம் இனம் சனத்தொகை விகிதாசாரத்தில் இன்னும் முன்னேறாமல் இருக்கக் காரணமும் இது தான்.**

---

**கணபதிதாசன், கட்டைக்காடு**

அனைத்துக் கேள்விகளுக்கும் அசல் பதில் தரும் வியாசர் ஐயா அவர்களே!

கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்து அறிவதே மெய் என ஒரு அறிஞர் சொன்னாரே?

**கண்ணால் கண்டதும் பொய் என்று காதால் கேட்டதும் பொய் என்று தீர விசாரிக்கவும் தேவையில்லை என்று கூறுபவர்கள் இருக்கும் இந்நாட்டில் அந்த அறிஞர் இல்லாது போனது நல்லதற்கே.**

---




**அன்பு வாசகர்களே....!**

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# வாழ்வெழுச்சி திட்டத்தின் ஐந்தாம் கட்டம் ஆரம்பித்து வைப்பு

(கொழும்பு)

குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தும் தேசிய விவசாய திட்டமான **திவிநெகும** வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஐந்தாம் கட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அலரிமாளிகை சுற்றாடலில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பலா மரக்கன்றொன்றை நாட்டி வைத்து ஜனாதிபதி இந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஒரே சமயத்தில் நாடளாவிய ரீதியிலுள்ள 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளில் மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் நாட்டப்பட்டன. அத்துடன் ஒரு இலட் சத்து 25 ஆயிரம் வீட்டுத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் **திவிநெகும** வாழ்வெழுச்சித் திட்டம் 2011 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மற்றும் நகர மட்டத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் 18 அமைச்சுக்கள் இச் செயற்றிட்டத்துடன் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தின் ஐந்தாம் கட்டம் ஆரம்பமானதுடன் 14 இலட்சம் மரக்கறி விதை பொதிகள், 23 இலட்சம் பழக்கன்றுகள் , தென்னங்கன்றுகள், வாசனைத் திரவியம் மற்றும் மூலிகைக் கன்றுகளும் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட சகல பிரதேசங்களிலுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்ட ஐந்தாம் கட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. (அ-2)

# பொப்பிசை ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் இணைப்பாடவிதான அபிவிருத்தி நிதிக்காக கல்லூரியின் தேசிய சாதனை கலைஞர்கள், கல்லூரியின் பழைய மாணவரும் பொப்பிசைப் பாடகருமான நித்திகனகரத்தினமும் இணைந்து வழங்கும் பொப்பிசை ஆற்றுகை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-5)

# தேசிய டெங்கு ஒழிப்பு அனுஷ்டிப்பில் 5007 டெங்கு பரவும் இடங்கள்

(கொழும்பு)

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் முதல் நாளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் சுகாதார அமைச்சு மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுளம்பு உற்பத்தி இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 91 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 661 நிறுவனங்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

சுகாதார அமைச்சு கடந்த 7 ஆம் திகதி முதல் இன்றுவரை தேசிய நுளம்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் முதற்கட்டமாக நுளம்பு உற்பத்தி இடங்களை இனங்காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

[illegible] இலங்க நுளம்பு ஒழிப்பு வாரத்தின் முதல் நாள் சோதனை நடவடிக்கைகளிலேயே 5 ஆயிரத்து 7 அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களில் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அந்நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில் சுகாதார அமைச்சும் டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் மேலும் 12 அமைச்சுகளும் இணைந்து டெங்கு ஒழிப்பு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதன் முதல் நாள் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்தது.

ஆயிரத்து 324 சுகாதார உத்தியோகத்தர்கள் சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே அதிகமான நிறுவனங்கள் டெங்கு உற்பத்தியாகும் இடங்களாக இனங் காணப்பட்டுமுள்ளன. (அ-2)

# சஜித், கரு, ரணில் இணைந்து பேச்சு

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் விசேட பேச்சுவார் த்தை ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர்களான சஜித் பிரேமதாச, கரு ஜயசூரிய ஆகியோருக்கு இடையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது.

கட்சியை மீளவும் வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் நோக்கிலேயே குறித்த பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் படகு கவிழ்ந்தது; 12 குழந்தைகள் உட்பட 50 பேர் பலி!

(வல்லெட்டா)

**இத்தாலியில் குடியேற சென்றவர்களின் படகு கவிழ்ந்து 12 குழந்தைகள் உட்பட 50 பேர் பரிதாபமாக பலியாகினர்.**





இப்பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மால்டா மற்றும் சிசிலி கடற் பகுதியில் நேற்றுமுன்தினம் சுமார் 150 பேரை ஏற்றியக்கொண்டு படகு ஒன்று இத்தாலியின் லம்படுசா தீவு நோக்கி கொண்டிருந்தது.

அப்போது எதிர்பாராத விதமாக வீசிய சூறைக்காற்றில் தடுமாறிய படகு கடலுக்குள் கவிழ்ந்தது.

அப்பொழுது அவ்வழியாக இத்தாலிய ரோந்து படகொன்றில் சென்ற வீரர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் படகுகளிலும், உலங்குவானூர்திகளிலும் அவ்விடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் சுமார் 100 பேரை மீட்டனர்.

மேலும் 12 குழந்தைகள் உட்பட 50இற்கும் மேற்பட்ட சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. காணாமற் போன மேலும் சிலரைத் தேடும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. (2)

# சுதந்திரதேவி சிலையை திறக்க அமெரிக்கா முடிவு



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்ட சுதந்திரதேவி சிலையை மீண்டும் திறக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பு மற்றும் நிதி நிர்வாகம் குறித்து அரசுதரப்பு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் விவாதம் ஏற்பட்டது. இதன்காரணமாக அந்நாட்டு அரசு, பொழுதுபோக்குப்பூங்காகள் உட்பட பல சுற்றுலாத் தலங்களை தற்காலிகமாக மூடி வைத்துள்ளது.

அரசு செலவினங்களைக் குறைகும் விதமாக அந்நாட்டில் பணியாற்றி வந்த அரசுப் பணியாளர்களில் ஏராளமானோர் சம்பளம் இலலாத பணி விடுப்பில் அனுப்பப்பட்டனர்.

பத்து தினங்கள் கடந்த நிலையில், சுதந்திரதேவி சிலை, கிராண்ட் கேன்யான் பள்ளத்தாக்கு போன்றவற்றையும், தேசிய பொழுதுபோக்குப் பூங்காக்களையும் மீண்டும் திறப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. அந்தந்த மாநில நிர்வாகங்கள் அவற்றைப் பராமரிக்க ஒப்புக் கொண்டதால் இந்தமுடிவு எடுக்கப்பட்டதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க், அரிசோனா, கொலராடோ மற்றும் உடா மாகாணங்களுடன் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய பூங்காக்கள் பராமரிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. அரசின் உதவித் தொகையும் இந்த மாநில நிர்வாகங்களுக்கு அளிக்கப்படும்.

மாகாணங்களின் இழந்த வர்த்தகத்தையும், தொடர்புகளையும் மீண்டும் பெறுவதற்கு இந்த தற்காலிக ஏற்பாடு உதவக்கூடும் என்று உள்துறை செயலர் சாலி ஜுவெல தெரிவித்தார். நாடாளுமனறத்தின் ஒப்புதலோடு விரைவில் ஏனைய பூங்காக்களையும் திறப்பதற்கு விரும்புவதாகவும் அவர் கூறினார். (2)



பாலஸ்தீனத்தின் மேற்குகரை நகரான ரமல்லாவில், அந்நாட்டு ஜனாதிபதி மக்மூத் அப்பாசை இஸ்ரேலின் தொழிலாளர் கட்சி எம்.பி.ஹில்லிக் பார் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# குற்றவாளிகளை ஒப்படைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும்

## இந்தோவை இந்தியா வலியுறுத்து

குற்றவாளிகளை பரஸ்பரம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்திற்கும் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்திற்கும் விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு இந்தோனேசியாவை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

ஆசியான் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் புரூனே சென்றிருந்தார்.

அதனைத்தொடர்ந்து இந்தோனேசியா சென்றுள்ள அவர், அந்நாட்டு ஜனாதிபதி சுசீலோ பாம்பங்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

அப்போது இரு தரப்பு உறவுகள் குறித்தும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர். இந்தச சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் மன்மோகன் சிங் கூறியது:

குற்றவாளிகளை பரஸ்பரம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்துக்கும், பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்துக்கும் விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு இந்தோனேசியாவை கேட்டுக்கொண்டேன்.

அரசியல் ரீதியிலான இருதரப்புப் பயணங்களை அதிகரிப்பது மற்றும் இருதரப்பு முன்முயற்சிகளை அமுல்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அர்த்தமுள்ள மற்றும் இருதரப்புக்கும் பலன் தரத்தக்க பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு விரிவான செயற்



றிட்டத்தை வகுக்குமாறு நாங்கள் அதி காரிகளுக்கு உத்தரவிட்டுள்ளோம்.

பேரிடர் மேலாண்மை மற்றும் போதைமருந்துக் கடத்தலைச் சமாளிப்பது ஆகிய விவகாரங்களில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இவை, நம்மிடையை வளர்ந்து வரும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு மேலும் பலத்தைக் கொடுக்கும் என்றார்.

இரு நாடுகள் சார்பாகவும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

"இந்த இரு தலைவர்களின் சந்திப்பின்போது, பயங்கரவாதம், பயங்கரவாதத்துக்கு நிதி உதவி, ஆயுதக்கடத்தல், அமைப்புரீதியிலான குற்றம், சட்ட விரோத பணப் பரிவர்த்தனை, போதை மற்றும் ஆள்கடத்தல், போலி நோட்டுகள், சைபர குற்றம் ஆகியவற்றைச் சமாளிக்க ஒத்துழைப்பை அதிகரிக்க இரு தரப்பும் உறுதிபூண்டன.

இரு நாடுகளின் உளவு மற்றும் சட்ட அமுலாக்க அமைப்புகளிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கவும், பயங்கரவாதம், திட்டமிட்ட குற்றச் செயல்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட பரஸ்பரம் உதவி செய்து கொள்ளவும் இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்" என்று தெரிவிக்கப்பட்டது.

**இந்தோனேசியா ஒப்புதல:**

இந்திய நிறுவனங்கள் இந்தோனேசியாவில் நிலக்கரி, சுரங்கம், உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் பெரிய முதலீடுகளைச் செய்துள்ளன. எனினும், அவற்றில் சில நிறுவனங்கள் சில பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன.

நம்நாட்டிலுள்ள எரிசக்தி நிறுவனங்கள் உள்நாட்டு நிலக்கரித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக இந்தோனேசிய நிலக்கரி இறக்குமதியை எதிர் நோக்கியுள்ளன.

இந்நிலையில், அந்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங், அமைசசர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த விவகாரத்தை அந்நாட்டுத் தலைவர்களிடம் எழுப்பினர். அதற்கு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக இந்தோனேசியத் தலைவர்கள் ஒப்புக் கொண்டனர். (2)

# இலங்கை மீனவர்களுக்கு ஒக்.25 வரை காவல் நீடிப்பு

(இராமநாதபுரம்)

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 26 பேர் நேற்றுமுன்தினம் இராமநாதபுரம் நீதிமன்றல் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த 26 மீனவர்கள் 4 படகுகளில் கடந்த 9ஆம் திகதி கன்னியாகுமரியில் இருந்து தென்கிழக்கே இந்திய கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண டிருந்தனர்.

அப்பகுதியில் ரோந்து சென்ற தூத்துக்குடி இந்திய கடலோர காவல் படையினர் 26 மீனவர்களையும் கைதுசெய்தனர். 4 மீன்பிடி படகுகளையும் அவற்றில் இரண்டு படகுகளில் இருந்த 4 ஆயிரத்து 800 கிலோ சூரை மீன் மற்றும் தூண்டில் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர். படகுகளுடன், மீனவர்களையும் அழைத்து சென்று, இந்திய கடலோர காவல் படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்கள் அனைவரும் நேற்று முன் தினம் இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

தலைமைக் குற்றவியல் நீதிபதி இலங்கை மீனவர்கள் 26 பேரையும் இம் மாதம் 25ஆம் திகதி வரை பாளையங்கோட்டை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதையடுத்து மீனவர்கள் 26 பேரையும், பொலிஸார் பாளையங்கோட்டை சிறைக்கு அழைத்து சென்றனர். (2)

# நேட்டோ படைகள் 2014 வரை ஆப்கானில் நிலைநிறுத்தப்படும்



ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படைகளை எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இறுதி வரை நீடிப்பதென ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலக அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் நிலவி வருவதைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஐ.நா. பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

ஆப்கான் நிலவரம் குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த வியாழக்கிழமை விவாதிக்கப்பட்டது. அப்போது கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் ஆப்கானில் தலிபான், அல்-கொய்தா, சட்ட விரோத கும்பல்களால் தீவிரவாதச் செயல்கள், வன்முறை மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் [illegible] பனை பெருகி வருவதாக வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டுப் படைகள் ஆப்கானில இருந்து திரும்புவதை தலிபான்கள் தங்களுக்கு சாதகமாககிக் கொண்டு கடந்த சில மாதங்களாக தாக்குதல்களை அதிகப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, உலக அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் நிலவுவதால எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இறுதிவரை ஆப்கானில் நேட்டோ படைகளை நீட்டிப்பது என்றும் அதன் பின்னர் பாதுகாப்பு பொறுப்புகள் முழுவதும் அந்நாட்டுப் படையினரிடம் ஒப்படைக்கப் படும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், இதுவே இறுதியான நீட்டிப்பு என்று ஐ.நா பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

நேட்டோ படைகளால் ஆப்கான் மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதாக அந்நாட்டு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஆப்கானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறுவது குறித்து சில வாரங்களில் முடிவெடுக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீர்வும் இந்தியாவும்



மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த தமிழரின் ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் மௌனித்துப் போனது.

இதனையடுத்து உயிரிழந்து, உடைமையிழந்து, சொந்தங்களையிழந்து, இனத்தின் அடையாளத்தையிழந்து, அகதிகளாகவும் அநாதைகளாகவும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மண்ணைவிட்டு வெளியேறி மீண்டும் சொற்பளவு மக்கள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் அடிப்படைவசதிகளற்ற நிலையில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இச் சூழ்நிலையில், புனர்வாழ்வு என்ற பெயரில் முன்னாள் போராளிகள் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதும், விடுதலை செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதும் சித்திர வதைகளுக்கு உள்ளாகுவதும் ஒருபுறம் இருக்க, விசாரணைகளின்றி தமிழ் அரசியல் கைதிகளின் சிறைவாசமும் தொடர்கதையாகியுள்ளது.

இந்நிலையில், சர்வதேசத்தின் தொடர் அழுத்தம் காரணமாக ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த வடக்கு மக்களுக்கு இலங்கை அரசு ஒரு சந்தரப்பத்தை கடந்த மாதம் 21 ஆம் திகதி வழங்கியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை வடக்கு மக்கள் பயன்படுத்திய விதம் சர்வதேசத்தை இலங்கையின் வடபகுதி நோக்கி மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைத்தது.

வடபகுதி யுத்த அழிவுகளை எதிர்கொண்டவேளை சர்வதேச மனித உரிமை சாசனங்கள் மீறப்பட்டதாகக்கூறி வடபகுதியை உற்று நோக்கிய வெளிநாடுகள், இவ்வளவு அழிவுகளுக்குப்பின்பும் வடக்கு மக்களின் எழுச்சியைக்கண்டு மிரண்டு போனது. இது தென்னிலங்கையிலுள்ள தீவிரவாத சக்திகளுக்கு பெரும் இடியாகவும் விழுந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்கள் ஏனைய மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டமை போன்று வழங்கப்படுமா? என்ற கேள்வி பல தரப்பட்டவர்களாலும் எழுப்பப்பட்டுள்ள நிலையில், அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லாத சூழ்நிலையில் ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா எவ்வாறான கரிசனையைக் கொண்டுள்ளது என்பதை மறுபடியும் வெளிப்படுத்தும் வகையில், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேசித்தான் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விடயத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளை இந்தியா நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. ஆனாலும் இலங்கை அரசாங்கத்துடன் பேசித்தான் நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்பதையும், அதில் இந்தியா தலையிட முடியாது என்பதையும் நாசூக்காக கூறிவிட்டு அவர் நாடு திரும்பிவிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்தார்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டு ஒரு இலட்சத்து 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்புவாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற வடக்கின் முதலாவது முதலமைச்சரான முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் என்பதே அந்த எதிர்பார்ப்புக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

இலங்கைக்கு இரண்டு நாட்கள் பயணமாக கடந்த ஏழாம் திகதி வருகைதந்த இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பை ஏற்படுத்தியிருந்த போதிலும் வடக்கு முதலமைச்சர் உடனான சந்திப்பே முக்கியம் பெற்றிருந்தது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் எடுத்த பின்பு சந்தித்த முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரியாக, இந்திய வெளிவிவகார அமைச்சர் முக்கியத்துவம் பெற்றார். இந்திய வெளிவிவகார அமைச்சராக சல்மான் குர்ஷித் பதவியேற்ற பின்பு இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது விஜயமாகவும் இவ்விஜயம் அமைந்தது. இவ்விரு விடயங்களால் இவர்கள் இருவரின் இச்சந்திப்பு மேலும் வலுப்பெற்றிருந்தது.

**வழமை போன்று ஒரு நிகழ்வு**

இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகையை எதிர்நோக்கி தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தந்தை செல்வா புரத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் திறப்பு விழாவுக்காக காத்திருந்தன. வெளிவிவகார அமைச்சர் நண்பகல் 12 மணிக்கு வருகை தரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து காலை 9 மணியிலிருந்தே ஏற்பாடுகளும் காத்திருப்புக்களும் அதிகரித்திருந்தன.

இதில் அப்பகுதியில் வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் குடும்பத்துடன் அழைக்கப்பட்டிருந்தனர். மேலும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பணிநிமிர்த்தம் கலந்து கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் நண்பகல் 12 மணியிலிருந்து வெயிலில் காத்திருந்த வயோதிபர்கள் , சிறுவர்கள் எனப்பலரும் அந்தரித்துக்கொண்டிருந்த போது பிற்பகல் 2 மணியளவில் அமைச்சர் வந்து சேர்ந்தார்.

அவருடன் இலங்கைக்கான இந்தியாவின் உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் உள்ளிட்டபலரும் அங்கு சமுகம் தந்தனர்.

**கோலம் போச்சே**

வீட்டு திறப்பு விழாவுக்காக வீட்டு பயனாளிகளால் சிரமப்பட்டு கைகளால் போடப்பட்டிருந்த கோலத்தை புகைப்படம் எடுக்கும் அமளியில் ஊடகவியலாளர்கள் கால்களால் அலங்கோலப்படுத்திவிட்டனர் என்று அழுதும் முரண்பட்டும் கொண்டனர் வீட்டு உரிமையாளர்கள். அதேவேளை அமைச்சரும் மனவேதனையுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

**வடக்கு ஆளுநருடனும் சந்திப்பு**

வீடுகளைத் திறந்து வைத்து விட்டு அதன் உரிமையாளர்களுடன் புகைப்படமெடுத்த கையோடு, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்திப்பதற்காக ஆளுநர் அலுவலகத்திற்கு பிற்பகல் 3 மணியளவில் சென்ற அமைச்சர் சல்மான் குர்ஷித்,வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

**சிவில் சமூகத்தினருடன**

யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார்களுடன் சந்திப்பை ஏற்படுத்திய இவர், அவர்கள் முன்னிலையில் , உரையாற்றுகையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற போது அங்கிருந்தோர் கைகளைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.இந்த நிகழ்வின் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறிய, நடுத்தர வர்த்தகர்களுக்கான காசோலைகளையும் அமைச்சர் வழங்கியிருந்தார்.

இந்திய அமைச்சர் சல்மான் குர்ஷித்தை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் பிற்பகல் 4 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே இலங்கை அரசாங்கத்துடன் பேசித்தான் தமிழருக்கான நிரந்தரத் தீர்வுக்கு வழியைத்தேட வேண்டும் என்ற கருத்தை அமைச்சர் சல்மான் முன்வைத்திருந்தார்.

தமிழருக்கான தீர்வைப் பெற்று கொடுப்பதில் இந்தியா எவ்வாறான நழுவல் போக்கினைக்கொண்டுள்ளது என்பதை அந்தக் கூற்று வெளிப்படுத்தியிருந்தது.

இருப்பினும் இலங்கை அரசாங்கத்துடன் முன்பு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்கும் இனிமேல் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளுக்கும் வேறுபாடுள்ளது. உலகிலே பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டு கொண்டு இருக்கின்ற போது முன்னைய பேச்சு வார்த்தைகளுக்கு கிடைத்த முடிவு தான் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பேச்சு வார்த்தைகளிலும் எட்டப்படும் என்று கூற முடியாது. அவ்வாறான ஒரு முடிவுக்கு இப்பொழுதே நாம் வந்துவிடமுடியாது என்று முதலமைச்சர் நம்பிக்கை கொடுத்தார். அமைச்சருடனான சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து கூறியபோது முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

சந்திப்பில் முக்கியமாக இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை குறித்து பேசப்பட்டதாகவும் அதற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கடலின்இரு பக்கங்களிலும் இருக்கும் மீனவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே பேசித்தீர்வுகாண வேண்டும் என்றும் இருநாடுகளும் அதுசம்பந்தமாக பேசி மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் குர்ஷித் தெரிவித்ததாக முதலமைச்சர் கூறினார்.

ஆக, இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைக்கு கூட ஒரு முடிவினை விரைவாக எடுக்க இந்தியா தயாராக இல்லை என்பதை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இலங்கையில் வாழும் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதிலும் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதிலும் இந்தியாவின் நிலைப்பாடு?

**-எஸ்.ஆர்.கரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று வெற்றி! வலுவிழந்து போய்விடுமா?

தோற்றவரை விட வென்றவருக்கே தலைவலி அதிகம் எனும் சொற்பதத்தை போரில் புலிகளை வெற்றி கொண்ட இலங்கை அரசுக்கு ஊடகங்கள் சுட்டிக் காட்டியதை இவ்விடத்தில் நினைவுபடுத்தியே ஆக வேண்டும்.

வெற்றி தோல்வி சகஜம் என்பதும் வெற்றி பெற்றவர்கள் தோற்றவரின் மனதைப் புரிந்துகொண்டு அவருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதும் எழுதாவிதி.

இவ்வாறான நடைமுறை மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்ற போதிலும் அபிவிருத்தி அடைந்து வரும் கீழைத்தேய நாடுகளில் இந்நிலை பூச்சியத்தில் இருப்பதென்பது நாம் இன்னும் மனதளவில் அபிவிருத்தியடையவில்லை என்பதையே சுட்டிக்காட்டி நிற்கின்றது.

நடந்து முடிந்த வடமாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வெற்றி உலகிற்கு ஒரு நல்ல செய்தியை எடுத்துக்காட்டி நிற்கிறது. போரினால் வெந்து நொந்துபோன தமிழ்மக்களுக்குத் தேவையானது அபிவிருத்தி என்பதற்கு அப்பால் உரிமைகளே என்பது வெள்ளிடை மலையாய் உயர்ந்து நிற்கிறது.

வன்னிப் பெரும் நிலப் பரப்பில் துவக்குச் சன்னங்களாலும் செல்வீச்சுக்களாலும் உறவுகளை இழந்து தவித்த இனம் தன் உரிமைகளை இன்று வாக்குகளால் காட்டிவிட்டு மிக அமைதியாய் இருக்கிறது.



வடமாகாணத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றி என்பது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டிய ஒரு பாரிய வெற்றியாகும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அமோக வெற்றியைப் பெற்றது கூட்டமைப்பு.இவ் வெற்றியைக் கொண்டா டாமல் தமிழ் மக்கள் அமைதி யாக இருந்ததனூடாக, தமிழ் மக்களை அழித்து விடுதலைப் புலிகளை வெற்றிகொண்ட அரசாங்கத்திற்கும் தென்னிலங்கை மக்களுக்கும் நாங்கள் தோற்றவரின் மனதைப் புரிந்து கொண்டவர்கள். மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காண்பவர்கள் இல்லை எனும் கீதோபதேசத்தை உபதேசித்திருக்கிறார்கள்.

### குளவிக்கூட்டில் விழுந்த கல்

கூட்டமைப்புக்கு கிடைத்த வெற்றியின் பின்னர் போனஸ் ஆசனம் யாருக்கு வழங்குவது என்பதில் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளும் குறிப்பிட்ட கட்சியின் தலைவர்கள் ஒவ்வொருவரும் தன்சார்ந்தவர்களை நியமிக்கச் சொல்லி சம்பந்தர் ஐயாவை புளிந்தெடுக்க ஒருவாறு ஒருவருடத்துக்கு ஒருவர் எனும் புதிய முறையைக் கையாண்டு அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

### அடுத்த பேரிடி

இருப்பதோ நான்கு அமைச்சுக்கள். அதில் நீ நான் என்று போட்டி. என் பிரதேசம், உன் பிரதேசம் என ஆர்ப்பாட்டம், என் கட்சி , உன் கட்சி என அல்லோலகல்லோலம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் ரெஸ்ட் கிரிக்கெட் தொடர் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகும்.

வருடாந்தம் நடைபெற்று வரும் அநேக போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் ஆதிக்கமே மேலோங்கியிருப்பது வரலாற்றுப் பதிவுகளாகும்.

இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் ஐந்துக்கு ஒன்று என இங்கிலாந்து வரலாற்று வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

### வெற்றியால் வந்த வினை

தொடரை வென்ற இங்கிலாந்து அணிவீரர்கள் அன்றையதினம் இரவு மைதானத்தில் இருந்து மது அருந்தி வெற்றியைக் கொண்டாடி, மைதானத்தில் சிறுநீர் கழித்து தமது வெற்றிக்களிப்பை வெளிப்படுத்தினர். இவ்விடயம் ஊடகங்களூடாக வெளிவர கிரிக்கெட் ரசிகர்களின் விமர்சனத்திற்கும் முகஞ்சுழிப்பதற்கும் உள்ளானது இங்கிலாந்து அணி.

இங்கிலாந்து அணியின் வரலாற்று வெற்றிபோல்தான் வடமாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற கூட்டமைப்பின் வெற்றியும். வெற்றிக்குப் பின்னான அமைச்சருக்கான கூட்டமைப்பின் கூட்டுக் கட்சிகளின் அடிபாடும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உறுப்பினர் பதவியேற்பை பகிஷ்கரித்தமையும் அமைந்துவிட்டது.

மாபெரும் வெற்றியைப் பெற்றுவிட்ட கூட்டமைப்பு போனஸ் ஆசன ஒதுக்கீட்டிலும் அமைச்சுத் தெரிவிலும் நடந்து கொண்டமுறை தமிழ் மக்களை முகம் சுழிக்க வைத்து விட்டதென்பதை மறுத்து விட முடியாது.

தமிழ் அரசுக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டாடாமல் தென்னிலங்கைக்கு கீதோபதேசம் செய்த தமிழ் மக்களின் மனங்களைப் புரிந்துகொள்ளாமல் குளவிக் கூட்டுக்கு கல்லெறிபவர்களை மக்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

இனிவரும் தேர்தல் காலங்களில் அவர்கள் கூப்பிய கரத்துடன் வீடு தேடி வரும் போது நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பது திண்ணம்.

இந்திரபுத்திரன்

# தலைமைத்துவத்தை மதிக்க வேண்டும்

## ஜனாதிபதி அட்வைஸ்

(கொழும்பு)

கட்சியைச் சேர்ந்த அனைவரும் தலைமைத்துவத்தை மதிக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒன்பது பிரதி அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வில் பங்கேற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நம் அனைவருக்கும் பதவிகள் கிடைப்பது கட்சியினாலேயாகும். எவருக்கும் இப் பதவிகளைப் பயன்படுத்தி குறுகிய வழிகளில் முன்னேற நாம் நினைக்கக்கூடாது, அடிமேல் அடியெடுத்து வைத்தே முன்னேற வேண்டும்.

அரசியல் அனுபவம், ஆற்றிய சேவை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

கிடைக்கப் பெற்ற பதவியை உரிய முறையில் பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். கட்சி நடவடிக்கைகளுக்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக மீனவர்களை கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுங்கள்


## தமிழக தலைவர்களிடம் மன்னார் ஆயர் கோரிக்கை

இலங்கை கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறுவதை தடுக்குமாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழக மீனவர் விடயத்தில் அரசியல் எதுவும் இல்லை. இலங்கையின் கரையோரத்தில் இருந்து 500 மீற்றர் தூரம் வரையில் வரும் தமிழக மீனவர்கள் தமது தொழில்களை மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக இலங்கையில் குறிப்பாக வடக்கு மீனவர்கள் வாழ்வாதார ரீதியில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் இலங்கை மீனவர்கள் தம்மாலான நடவடிக்கைகள் யாவற்றையும் எடுத்தனர். எனினும் எதுவும் பயன்தரவில்லை. எனவே, இது தொடர்பில் தமிழக முதல்வரும் கருணாநிதியும் கவனத்தில் கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் உள்ளிட்ட அமைச்சர்கள் நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் சந்தித்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வின் பின்னர் ஆளுநர் , முதலமைச்சர் உட்பட அமைச்சர்களுடன் அவற்றின் செயலாளர்களும் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# மாணவர்கள் கௌரவிப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வட மாகாணத்தில் சித்தியடைந்து மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கல்விமேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் செ. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பௌதீகவியற்றுறைப் பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொள்ளவுள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊடக இணைப்பாளர் இ.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டின் அவதாரம்

## சச்சினின் 200 ஆவது டெஸ்ட் மும்பையில்




கிரிக்கெட்டின் அவதாரம் எனப் போற்றப்படும் சச்சினின் 200 ஆவது டெஸ்ட்போட்டி மும்பையில் நடைபெறவுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை (பிசிசிஐ) அறிவித்துள்ளது.

200ஆவது டெஸ்டுடன் ஓய்வுபெறப்போவதாக சச்சின் வியாழக்கிழமை அறிவித்தார். இதையடுத்து சச்சின் பங்கேற்கும் இந்த டெஸ்ட் அவரது சொந்த ஊரில் நடைபெறவேண்டும் என மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சச்சினின் 200 ஆவது டெஸ்ட் மும்பை வான்ஹடே விளையாட்டரங்கில் நடத்த பிசிசிஐ ஒப்புக் கொண்டுள்ளது. இந்தத் தகவலை மும்பை கிரிக்கெட் சங்கத் தலைவர் ரவி சாவந்த் தெரி வித்தார்.

## சச்சினுடன் இணைந்து விளையாடியது பெருமைக்குரிய விடயம்; ஷேன் வோர்ன்



கிரிக்கெட்டின் அவதாரம் என புகழப்படும் சச்சின் எண்ணற்ற சாதனைகளுக்கு சொந்தக்காரர்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கிட்டதட்ட ஒரு சில சாதனைகளை தவிர மற்றைய அனைத்தும் சச்சின் வசம் தான் உள்ளது. கடந்த 24 ஆண்டுக ளாக சர்வதேச போட்டிகளில் விளையாடி வரும் சச்சினின் ஓய்வு குறித்து பலர் தமது கருத் துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இது பற்றி தனது டுவிட்டர் இணைய தளத்தில் கருத்து தெரிவித்துள்ள ஓய்வுபெற்ற அவுஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்ன், டெண்டுல்க ருடன் இணைந்து விளையாடியது பெரு மைக்குரிய விடயம் என்று தெரிவித்துள் ளார். மேலும் கடந்த 20 ஆண்டு கால கிரிக்கெட்டில் சச்சின் தான் மிகச்சிறந்த வீரர் என்றும் தெரிவித்துள்ளார்.

## சச்சினின் ஓய்வு கடினமாக உள்ளது — யுவராஜ்

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறுவதைப் பற்றி எண்ணும்போது கடினமாக உள்ளதாக இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவ்ராஜ் சிங் தெரிவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் தனது வாழ்வில் வழிகாட்டியாகக் காணப் பட்டிருந்தார் எனவும் யுவ்ராஜ் சிங் குறிப்பிட்டார்.

இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ள சச்சின் டெண்டுல்கர், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறவுள்ளதாக நேற்று அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யுவ்ராஜ் சிங், தனிப்பட்ட ரீதியில் சச்சின் டெண்டுல்கர் தன்னை எப்போதும் வழிநடத்தியிருந்ததாகவும், அது மைதானத் திற்கு உள்ளேயும், மைதானத்திற்கு வெளி யேயும் காணப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண இறுதிப் போட்டியின் போது சச்சின் டெண்டுல்கரின் வழிகாட்டல் முக்கி யமானது எனக் குறிப்பிட்ட யுவ்ராஜ் சிங், அது மிகவும் விசேடமானது எனக் குறிப்பிட்டார். எனவே சச்சின் டெண்டுல்கர் ஓய்வுபெறு வதைப் பற்றி எண்ணும் போது கடினமாக உள்ளதாக யுவ்ராஜ் சிங் மேலும் குறிப்பிட்டார்.

பல வருடங்கள் சச்சின் டெண்டுல் கரோடு இணைந்து விளையாடுவதற்குக் கிடைத் தமை மிகச் சிறப்பானது எனக் குறிப்பிட்ட யுவ்ராஜ் சிங், கிரிக்கெட் உலகில் தோன்றிய மிகச்சிறந்த வீரர்களுள் சச்சின் டெண்டுல்கர் ஒருவர் எனக் குறிப்பிட்டார். சச்சின் டெண்டுல க ரின் இறுதி 2 டெஸ்ட் போட்டிகளில் அவ ரோடு இணைந்து வாய்ப்புக் கிடைக்குமா எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்ட யுவ ராஜ் சிங், அவ்வாறு குழாமில் இடம் கிடைக் காவிட்டால் சச்சின் டெண்டுல் கரின் இறுதி டெஸ்ட் போட்டியை நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்



## முதல் இன்னிங்சில் வலுவான நிலையில் பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 501 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இவ்விரு அணிகளிடையிலான முதல் டெஸ்ட் போட்டி சிட்டகாங் நகரில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத் தாடி முதல் இன்னிங்ஸில் 469 ஓட்டங்க ளைப் பெற்றது.

நியூஸிலாந்து வீரர் வில்லியம்சன் 114 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அந்த அணியின் விக்கெட் காப்பாளர் வாட்லிங் சிறப்பாக விளையாடி சதமடித்தார். 182 பந்துகளில் அவர் 103 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார்.

11 ஆவது வீரராக களமிறங்கிய பெல்ட் சிறப்பாக விளையாடி 52 ஓட்டங்களை சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அணி 2ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 103 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில் 3 ஆம் நாள் ஆட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மார்ஷல் அயூப் 21 ஓட்டங்களுடனும் மோமினுல் ஹக் 77 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடங் கினர். மேலும் 4 ஓட்டங்கள் சேர்த்த நிலை யில் அயூப் ஆட்டமிழந்தார்.

ஆனால், மோமினுல் ஹக் சிறப்பாக விளையாடி பவுண்டரிகளாக விளாசி சதம டித்தார். அவருடன் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் முஷ்பிகர் ரஹீம் சிறப்பாக விளை யாடி அணியின் ஓட்டத்தை உயர்த்தினார். 181 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் மோமி னுல் ஹக் ஆட்டமிழந்தார்.

முஷ்பிகர் ரஹீம் 67 ஓட்டங்களும், நசீர் ஹொசைன் 46 ஓட்டங்களும், ஷாகிப் அல் ஹசன் 19ஓட்டங்களுடனும் வீழ்ந்தனர்.

தொடர்ந்து வந்த ஹசி 101 ஓட்டங்களை யும், இஸ்லாம் 33 ஓட்டங்களையும் பெற்ற னா். பதிலுக்கு தனது இரண்டாவது இனனிங்சை தொடரும் நியூசிலாந்து 1 விக்கெட்டினை இழந்து 117 ஓட்டங்களை பெற்றது

## 2014 உலகக் கிண்ண காற்பந்து தொடருக்கு பெல்ஜியம் தகுதி

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெற வுள்ள உலக கிண்ணக் காற்பந்து தொடருக்கு பெல்ஜியம் அணி தகுதி பெற்றுள்ளது.

பிரேசிலில், 20ஆவது 'பிபா' உலக கிண் ணக் காற்புந்து தொடர், அடுத்த ஆண்டு ஜீன் 12ஆம் திகதி முதல் ஜீலை 13ஆம் திகதி வரை நடைபெறுகிறது. மொத்தம் 32 அணி கள் பங்கேற்க உள்ள இத்தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள், ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா உட்பட 6 பிரிவுகளாக நடக்கின்றன.

ஐரோப்பிய கண்டத்துக்கான தகுதிச் சுற் றில், ஸ்பெயின், ஜேர் மனி உட்பட 53 அணி கள் 9 பிரிவுகளாக பங்கேற்கின்றன. இதில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணிகளுடன், சிறந்த இரண்டாவது இடத்தை பிடிக கும் நான்கு அணிகளை சேர்த்து 13 அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும்.

'ஏ' பிரிவில் நடந்த லீக் போட்டி யில் பெல்ஜியம், குரோஷியா அணி கள் மோதின. அபாரமாக ஆடிய பெல்ஜியம் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பெல்ஜி யம் சார்பில் ரோமிலு லுகாகு இரண்டு கோல் அடித்தார். இதுவரை விளையாடிய 9 போட்டி யில் 8 வெற்றி, ஒரு சமநிலை உட்பட 25 புள்ளி களுடன் 'ஏ' பிரிவில் இருந்து பிரதான சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதுவரை, இத்தாலி (பி பிரிவு), ஜேர்மனி (சி), நெதர்லாந்து (டி), சுவிட்சர்லாந்து (இ) அணிகள் உலக கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளன.

'சி' பிரிவில் நடந்த லீக் போட்டி யில், ஜேர்மனி, அயர்லாந்து அணி கள் மோதின. இதில் ஜேர்மனி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு போட்டி யில் சுவீடன் அணி 2-1 என்ற கோல் கணக் கில் ஆஸ்திரியாவை தோற்கடித்தது. 'டி' பிரி வில் நடந்த போட்டியில், நெதர்லாந்து அணி 8-1 என்ற கோல் கணக்கில் ஹங்கே ரியை வீழ்த்தியது. 'இ' பிரிவில் நடந்த போட்டியில், சுவிட்சர்லாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் அல்பனியாவை வீழ்த்தியது. போர்ச சுகல், இஸ்ரேல் அணிகள் மோதிய 'எப்' பிரிவு போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் 'டிரா' வில் முடிந்தது. 'ஐ' பிரிவு போட்டியில் ஸ்பெயின் அணி 2-1 என்ற கோல் கணக்கில் பெலா ரஸ் அணியை தோற்கடித்தது.

**அர்ஜென்டீனா அபாரம்:**

தெற்கு அமெரிக்கா பிரிவுக்கான போட்டியில. ஆர்ஜென்டினா, பெரு அணிகள்மோதின. அபார மாக ஆடிய ஆர்ஜென்டீனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கொலம் பியா, சிலி அணிகள் மோதிய போட்டி 3-3 என்ற கோல் கணக் கில் சமநிலையானது. வடக்கு அமெரிக்கா பிரிவுக் கான போட்டி யில், அமெரிக்கா 2-0 என்ற கோல் கணக்கில ஜமைக் காவை வீழ்த்தியது. மற்றொரு போட்டியில் மெக்சிகோ அணி 2-1 என்ற கோல் கணக்கில் பனாமாவை தோற்கடித்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புகளுக்காக காத்திருப்பவன் வெறுங்காலுடனே நடக்க வேண்டிவரும்.

–டேனிஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண அரசின் முதற்பணி சர்வதேச அழுத்தத்திற்கு வைரம் பாய்ச்சுவது

வடக்கு மாகாண சபையின் அரசு பதவியேற்றுப் பணிகள் தொடங்கும் நிலையில் வடக்கு மாகாண அரசின் கிடைப்பனவு தமிழ் அரசியல் தரப்புகள் நிம்மதியாக மூச்சுவிடுவதற்கு உதவுமா? என்றால் இல்லவே இல்லை என்று சொல்லலாம்.

ஆனாலும் மாகாண சபை அரசின் கிடைப்பனவை நாம் பார்க்கின்ற பார்வை, கிடையாக் கிடைப்பு கிடைத்துவிட்டதான பார்வையாக இருந்துவிடுமோ! என்று நினைக்கும்போது ஏக்கம் பிடித்துவிடுகிறது.

வடக்கு மாகாண அரசை தமிழ் மக்கள் அமைத்ததன் ஊடாக வடபகுதியில் ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பைச் செய்வதற்கு அது உதவும் என நம்பலாம்.

அதற்காக வடக்கு மாகாண அரசே எங்களுக்கான தீர்வு என்று யாரேனும் கருதினால், அது மகாதவறு. அவ்வாறானதொரு நினைப்பை, எவரும் கொண்டிருக்க கூடாது. அவ்வாறானதொரு நினைப்பு ஏற்பட்டு விடுமாக இருந்தால், மாகாண ஆட்சி கிடைக்காமல் இருந்திருக்கலாம் என்று கூறுவதே பொருத்துடையதாக இருக்கும்.

எனவே வடக்கு மாகாண அரசு, வட பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவதும் அதேநேரம், இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி அதிக அழுத்தம் கொடுப்பதுவும் குறித்து காத்திரமான திட்டங்களைத் தயார் செய்ய வேண்டும்.

இலங்கை அரசுடன் பேசுவதற்குத் தயார் என்று கூறுவதெல்லாம் ஒரு பொருத்தமற்ற விடயம். அப்படியானால் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தாமல் எவ்வாறு தீர்வு காண்பது என்று நீங்கள் கேட்கலாம்.

நாம் கூறுவதெல்லாம் எங்களில் யாரேனும் அரசுடன் பேச்சு நடத்தியதால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டதா? என்றால் அதற்கான பதில் இல்லை என்பதாகும்.

அதேநேரம் தமிழ் அரசியல் தலைமைகள் அரசுடன் பேச்சு நடத்தியிருந்தால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு சம்மதம் தெரிவித்திருக்குமா? என்றால் அதற்கும் இல்லை என்பதே விடை.

ஆக, தமிழ் மக்களுக்கு ஒரு அடிப்படையாக இருக்கக்கூடிய வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதைக் கூட, நாங்கள் அரசுடன் பேச்சுநடத்திச் செய்துவிட முடியவில்லை.

வடக்கில் மிகச் சிறப்பாகத் தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என்ற கட்டாயத்தை ஜெனிவாத் தீர்மானமே செய்து முடித்தது.

எனவே வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ! அவர்களைச் சிக்கனப்பிடித்துக் கொள்வதுதான் ஒரே வழி.

அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதன் பிரகாரம் அவர்களின் மத்தியஸ்தப் பணியோடு அதைச் செய்வோம்.

மாறாக வடக்கில் மாகாண சபை அரசு கிடைத்துவிட்டது என்ற குட்டிப் புளுகில் ஐ.நாவை–ஜெனிவாத் தீர்மானத்தை–அமெரிக்காவின் அழுத்தத்தை மறந்து விடாதீர்கள்.

எந்த அழுத்தத்திற்கு இலங்கை அரசு தலையாட்டுமோ அந்த அழுத்தத்தை வைரம் பாய்ச்சச் செய்வதே வடக்கு மாகாண சபையின் முதற்பணியாகும்.

# கனடா குற்றச்சாட்டு பதவி விலகமாட்டார் கமலேஷ்?

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா மீது கனடா குற்றஞ்சாட்டிய போதிலும் அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் செயலாளரின் பேச்சாளர் இந்திய பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். இப்போது திறக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தில் இலங்கையின் மனித வுரிமைகள் குறித்து கவனிக்கப்படும். இது தவிர வேறு பல பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில் கமலேஷ் சர்மாவிற்கு அப்பதவியிலிருந்து விலகும் நோக்கமெதுவும் இல்லை. மேலும் அவர் தனது பணியினை தொடர்ந்தும் முன்னெடுப்பார் எனவும் அவரது பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் இலங்கைக்கு சார்பாக செயற்படுவதாக கனடா குற்றம் சாட்டியிருந்ததுடன் இலங்கையில் இடம்பெறவுள்ள மாநாட்டையும் புறக்கணிப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல சர்மா மீது நம்பிக்கை உள்ளது என தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ–11)

# இந்தியா புறக்கணிக்க வேண்டும் சென்னை மாணவர்கள் உண்ணாவிரதம்


இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழுவினர் கும்பகோணம் காந்தி பூங்கா அருகே திடீரென சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினர்.

இலங்கையை அந்த அமைப்பில் இருந்து வெளியேற்ற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். அதையும் மீறி நடந்தால் இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழுவினர் கும்பகோணம் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் ரயில் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதையறிந்த பொலிஸார் 23 மாணவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்தனர். இதை கண்டித்தும் சென்னையில் உண்ணாவிரதம் இருக்கும் தியாகுவிற்கு ஆதரவு தெரிவித்தும் பல்வேறு கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு கும்பகோணம் காந்தி பூங்கா அருகே திடீரென சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினர். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (எ–11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சும்மா விருந்துபார் தம்பி



பண்டுமின்றும் உள்ளதடா தம்பி
பாடிப் பணியெடா தம்பி

அகம்பிர மாஸ்மியென்று தம்பி
அனுதினமுஞ் சாதனைசெய் தம்பி

இகலோகம் பரலோகந் தம்பி
இங்கேநீ கண்டுகொள்வாய் தம்பி

# எப்போதும் நன்றி கூறுவோம்; நன்றி மனநிலையோடு வாழ்வோம்

இன்று நமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில்"பத்துத் தொழுநோயாளர்கள் நோய்நீங்கப்பெறுதல் புதுமையை நாம் பார்க்கின்றோம்" இந்த பத்துப் பேரில் ஒன்பது பேர் யூதர்கள், ஒருவர் மட்டும் சமாரியர். அக்காலத்தில யூதர்கள் சாமரியரும் தமக்கிடையே இனத்தால் வேறுபட்டே இருப்பர். யூதாகள் சமாரியரை வேறுபடுத்தி ஒதுக்கிவிடுவர். ஒரே குடும்ப உணர்வு அவர்களிடம் இல்லை மாறாக பிரிவினையே நிலவியது. பிளவோங்கி நின்றது.

இங்கு பத்து தொழுநோயாளிகள் இயேசுவிற்கு எதிராக வந்தனர். அவர்கள் யூதரா? சமாரியரா? அவர்களுக்கு தெரியவில்லை. அவர்கள்

## பரமபிதா காட்டிய பாதை

அனைவரும் தொழுநோயாளிகள் என்றே அவர்களுக்கு தெரிந்தது. தொழுநோய் என்ற ஒரே காரணத்தால், யூத சமூகமும், சமாரிய சமூகமும் அவர்களைப் புறக்கணித்தன. அந்த புறக்கணிப்பு இந்த பத்துப்பேரையும் இணைத்தது. நோய், நொடி, துன்பம், பேரழிவு என்று வரும்போது மனித சமுதாயம் பலவகைகளில் இணைந்து விடுகிறது நாம் கண்ட உண்மை.

இப்போது அமெரிக்க சென்று வர உங்களை அழைக்கின்றேன். 2001.9.11 அன்று இரண்டு விமானங்கள் மோதியதால, நியூயோர்க்கில், இரு பெரும் வர்த்தகக் கோட்டைகள் இடிந்து விழுந்தன. அனைவருக்கும் நினைவிருக்கும். அந்த அழிவு அங்கு இருந்தவர்கள் அனைவரையும் சமமாக்கியது. இதைப் பற்றி மின்னஞ்சலில் தாங்கப்பட்ட ஒரு செய்தி: "இடிந்து விழுந்தது கோபுரங்கள், நிமிர்ந்து நின்றது மனித குலம். அந்த இடிபாடுகள் எழுப்பிய, புகையும், புழுதி மண்டலமும் சூழ இருந்த மக்கள் அனைவரையும் ஒரே நிறமாக்கியது. புழுதி, புகை நிறம். வெள்ளையர், கறுப்பர் என்ற பாகுபாடுகள் இல்லாமல் போயின. பல நூறு ஆண் டுகள் அந்த மக்கள் கண்டு வரும்' சமத்துவம் என்ற கனவு அந்த நேரத்தில் நனவாகியது."

அந்த அழிவு அவர்களுக்கு ஒரு சில பாடங்களை ஆழமாகச் சொல்லித் தந்ததால், இன்று கறுப்பினத்தைச் சார்ந்த ஒருவரைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்து, வெள்ளை மாளிகைக்கு அனுப்பியுள்ளனர் என்று குறிப்பிடலாம். கறுப்பினத்தைச் சார்ந்த ஒருவர் வெள்ளை மாளிகையிலா கனவில் கூட எண்ண்ணிப்பார்க்க முடியாதது .முடிந்துள்ளதே? அங்கு கறுப்பு, வெள்ளை என்ற பாகுபாடுகள் குறைய ஆரம்பித்திருப்பது அமெரிக்காவிற்கும் உலகத்திற்கும் இன்று நல்லது.

பத்துத் தொழுநோயாளர்களும் புறப்பட்டு போகும்போது, அவர்கள் நோய் நீங்கிற்று." என்று இன்று நமக்கு தரப்படும் வேதாகமப் பகுதி கூறுகிறது. நோய் நீங்கியதை உணர்ந்த ஒருவர் உரத்த குரலில் கடவுளைப் புகழ்ந்து கொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவர் ஒரு சமாரியர். "மற்ற ஒன்பது பேரும் எங்கே?" என்று இயேசு கேட்கின்றார். நன்றி பெறவேண்டும் என்பது அல்ல இயேசுவின் விருப்பம் மாறாக அவர்களிடம் அவர் கண்ட அந்த ஒற்றுமை எங்கே போனது என்பதை இயேசு அதிகம் தேடுகின்றார். அந்த ஒற்றுமை எங்கே போனது? என்று சற்று அலசினால் போகும் வழியில் அவர்கள் நோயே நீங்கியது என்று கூறிவிடலாம். நோயாளி என்ற ஒரே குலத்தில் இருந்த அவர்கள், நோய் நீங்கியதும் யூதர் என்றும் சமாரியர் என்றும் பிரிந்தனர். அவர்கள்மத்தியில் ஒரு சமாரியர் இருந்ததை அவர்கள்மீண்டும் உணர்ந்தனர். அவரா கவே அவர்களை விடடு விலகுகிறார். இயேசுவிடம் வந்து அன்போடு குண மாக்கியவர் காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

செலுத்தினா். இங்கு நனறி பற்றி கூறித் தான் ஆக வேண்டும்

உலகில் உள்ளவர்களை நன்றியுள்ளவர்கள், நன்றி மறந்தவர்கள். என்று இருபிரிவாக பிரிக்கலாம். ஒவ்வொரு குழுவிலும் எத்தனை பேர் இருப்பார்கள்? இன்று சொல்லப்பட்டது போல, ஒன்றுக்கு ஒன்பது என்பதுதான் அந்த கணக்கு. நம்முடைய வாழ்விலும் நன்றி உணர்வு ஒன்று எழுந்தால், அதை அழுத்தி, புதைத்து விட ஒன்பது பிற எண்ணாங்கள் எழுந்து வரும்.

நன்றி கூறும்போது மன நிறைவு கிடைத்ததை பலமுறை உணர்ந்திருப்போம். நன்றி தாழ்வு மனத்தைப் போக்கி, தன்னம்பிக்கையைத் தருகிறது. உலகத்திலேயே மிக முக்கியமான, அவசியமான செபம் தமிழில் யோசித்துப் பார்த்தால், ஒரே வார்த்தை தான "நன்றி". இன்னுமொரு அழகான கூற்று: " கடவுள் வாழும் இல்லங்கள் இரண்டு. ஒன்று விண்ணகம். மற்றொன்று நன்றி நிறைந்த உள்ளம்." கடவுள் விரும்பித்தங்கும் இல்லமாக எங்கள் உள்ளம் இருக்க வேண்டும் என்பது எம் செபம் ஆகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றாழையின் மகத்துவம்

உஷ்ண வாயு தொடர்பான பிணிகளை மிகவும் துரிதமாகவும், பூரணமாகவும் இது குணப்படுத்தும் கற்றாழை எங்கும் காணக் கிடைக்க கூடியது கோடைக்காலத்தில் உருவாகக் கூடிய நீர்கடுப்பு, நீர்தாரை எரிச்சல், மாதவிடாய் கோளாறுகள், உடல் வெப்பம், உடல் காந்தல் போன்ற பாதிப்புகளுக்கு, சோற்றுக் கற்றாழை உள்ள சோறு போன்ற கலவையை எடுத்து சுத்தமான நீரில் அலசிக் கொள்ள வேண்டும். பிறகு அதற்குச் சமமான அளவில் பனங்கற் கண்டினை அத்துடன் சேர்த்து காலை, மாலை இருவேளைகளிலும் உண்டு வரவேண்டும்.

இதனால் உடல் உஷ்ணமும், எரிச்சலும் குறையும். வெயில் காலத்தில் சிலருக்கு கண்களில் எரிச்சல் உண்டாகி, கண்கள் சிவந்து விடும். அப்போது, கற்றாழையின் ஒரு துண்டை எடுத்து அதன் நுங்குப் பகுதி வெளியே தெரியும்படி இரண்டாகப் பிளந்து, கண்களை மூடி கண்களின் மீது அந்தத் கற்றாழை துண்டை வைத்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே படுத்திருக்க வேண்டும். இப்போது கண் எரிச்சல், குறைவதோடு, சிவந்த நிறமும் மறைந்து விடும்.

இதை இரவு நேரங்களில் தூங்குவதற்கு முன் செய்து வந்தால் நல்ல உறக்கம் வருவதோடு, உடலுக்கு பல நன்மைகளும் கிடைக்கும். நன்றாக சதைப்பற்றுள்ள கற்றாழை மடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சதை பகுதியை சிறுசிறு துண்டுகளாக வெட்டி கொள்ள வேண்டும். இந்த துண்டுகளைப் பலமுறை தண்ணீர் விட்டு கழுவவேண்டும். அவற்றின் வழுவழுப்புத் தன்மையும் நாற்றமும் அகலும் வரை கழுவி சுத்தம் செய்ய வேண்டியது முக்கியம்.

வாய் அகன்ற பாத்திரம் ஒன்றை எடுத்து அதில் கழுவி சுத்தம் செய்து வைத்திருக்கும் கற்றாழைத் துண்டுகளைப் போட்டு பனங் கற்கண்டு அரை கிலோ, வெள்ளை வெங்காயம் கால் கிலோ ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றை சேகரித்து கொள்ள வேண்டும்.



வெங்காயத்தை மட்டும் இடித்து சாறு எடுத்து மற்ற பொருட்களோடு கலந்து அடுப்பிலிட்டுச் சிறு சிறு தீயாக எரிக்க வேண்டும்.

சாறு சுண்டி சடசடப்பு அடங்கும் வரை வைத்திருந்து பின்பு இறக்கி சூடு ஆறிய பிறகு கண்ணாடி ஜாடியொன்றில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். வயிற்றில் ரணம், மாந்தம், வயிற்றுவலி, புளியேப்பம், பொருமல், மற்றும் உஷ்ண வாயு தொடர்பான பிணிகள் தோன்றினால் வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் காலை, மாலை, கொடுத்து வர நல்ல முறையில் குணம் தெரியும். கற்றாழை உடல் முதல் உள்ளம் வரை அனைத்தையும் குணப்படுத்தும் சிறந்த மருந்து.




வெளிநாட்டிலிருந்து மணிகிராம் சேவை ஊடாக அனுப்பும் பணத்தை கொமர்ஷல் வங்கியில் பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு LED TV, ஹோம் தியேட்டர் சிஸ்டம், மைக்ரோவேவ் அவண், வோட்டர் பில்டர், கிறைண்டர், டோஸ்டர் உட்பட மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்களும் மணிகிராம் ஊடாக பணத்தை அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் பெற்று, சீட்டிழுப்பில் கலந்து கொண்டு வெற்றியாளராகுங்கள்.

செப்டம்பர் 01 முதல் டிசம்பர் 31 வரை மாதாந்தம் பரிசுகள்.

MoneyGram. money transfer

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

+94 114 932 444 / +94 112 353 578

## புற்றுநோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும்....

இலைக்காய்கறிகளில் ஒன்றான முட்டைக்கோஸின் நன்மைகள் பற்றி நாம் அதிகம் தெரிந்திருப்பதில்லை. முட்டைக்கோஸ் வெள்ளை, சிவப்பு, பச்சை மற்றும் ஊதா போன்றவை நிறங்களில் உள்ளது. இவை அனைத்தும் ஆரோக்கியம் தரும் உணவுகளே. இதில் பைட்டோ நியூட்ரியண்டுகள் மற்றும் விற்றமின்களான ஏ, சி மற்றும் கே போன்ற சத்துகளை கொண்டுள்ளது.

இவை உடலை தாக்கும் புற்றுநோய், இதயநோய், போன்றவற்றை தடுக்கும். இதில் நார்ச்சத்துகளை கொண்டுள்ளதால் செரிமான பிரச்சினை மற்றும் மலச்சிக்கல் பிரச்சினைகளை சரிசெய்கிறது. குறிப்பாக முட்டைக் கோஸை சமைக்கும்போது அளவுக்கு அதிக மாக வேகவைத்து சாப்பிடக்கூடாது. ஏனெனில் அதிக ளவு வேகவைக்கும்போது அதன் சத்துகள் வெளியாகி விடும்.

முட்டைகோஸில் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் பொருட்களை அதிகளவு கொண்டுள்ளது. எனவே



இதனை சாப்பிட்டால், புற்றுநோயை ஏற்படுத்தும் செல்கள் வளர்வதை முற்றிலும் தடுக்கும். மேலும் ஆய்வு ஒன்றிலும், முட்டைகோஸ் சாப்பிட்டால், புற்றுநோய் வளர்வதை தடுக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அல்சரால் அவதிப்படுபவர்கள், முட்டைக்கோஸை ஜூஸ் போட்டு சாப்பிட்டு வந்தால், அல்சரை விரைவில் குணப்படுத்தலாம். ஏனெனில் இதில் அல்சரை குணப் படுத்தும், குளுட்டமைல் அதிக அளவில் நிறைந்துள்ளது.

இதில் உள்ள அதிகப்படியான விற்றமின் சி, நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமைப்படுத்தி, உடலை நோய்கள் தாக்காதவாறு பாதுகாக்கும். முட்டைகோஸில் பீட்டா-கரோட்டீன் அதிக அளவில் இருப்பதால், அது கண்புரையை தடுக்கிறது. எடையை குறைக்க நினைப்போர், தினமும் ஒரு கப் வேக வைத்த முட்டைகோஸ் அல்லது முட்டைகோஸ் சூப் சாப்பிட்டால், உடல் எடையை ஆரோக்கியமான முறையில் குறைக்கலாம்.

பெண்களுக்கு மெனோபாஸ் காலங்களில் உண்டாகும் கல்சியம், பொஸ்பரஸ் இழப்பை முட்டைக்கோஸ் ஈடுசெய்யும். நரம்புகளுக்கு வலு கொடுக்கும். நரம்புத் தளர்ச்சியைப் போக்கும். தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்கும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். முட்டைக்கோஸை நீரில் போட்டு சிறிது நேரம் ஊறவைத்து அந்த நீரைக் கொண்டு முகம் கழுவினால் வறட்சியான சருமம் பளபளப்படையும். எலும்புகளுக்கு வலு கொடுக்கும். இதில் சுண்ணாம்புச்சத்து அதிகமிருப்பதால் எலும்புகளும் பற்களும் உறுதியாகும்.




மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரு. 189 | ரு. 300 | ரு. 100 | ரு. 400 |
| ரு. 589 | ரு. 900 | ரு. 400 | ரு. 1,300 |

கட்டணங்கள் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை. *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா தோல்வி...

ஆராய்ந்த பின்னர். இறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை ஒன்றை வெளியிட உத்தரவிட்டார். இதன்படி ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஹீட் டிங் இறுதி அறிக்கையை தயாரித்து முடித்துள் ளார்.

அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப படவில்லை. எனினும் இன்னர் சிட்டி பிரஸ் இணையத்தளம் இந்த இறுதி அறிக்கையை நேற்று அதிரடியாக வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் நியமித்த உள்ளக ஆய்வு குழுவினால் தயாரிக் கப்பட்ட "இலங்கையின் இறுதி யுத்த காலப் பகுதியில் ஐக்கிய நாடுகளின் செயற்பாடு" என்ற அறிக்கையின் தொடர் அறிக்கை வருமாறு,

மனித உரிமைகளை பாதுகாப்பது, ஐக்கிய நாடுகளதும் அதனோடு இணைந்த ஒழுங்கமைப்புகளதும் கடமை.

2009ம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற யுத்தம் ஐக்கிய நாடுகளுக்கு ஒரு சோதனை. இதில் நாங்கள் தோற்றுவிட்டோம்.

இந்த நிலையிலேயே ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் தோல்வி தொடர்பில் உள்ளக அறிக்கை ஒன்றை தயாரிக்க தூண்டியது.

எனினும் சவாலான விடயம் என்னவெனில், இலங்கை நமக்கு புதிய நாடு இல்லை. நீண்ட காலமாக இலங்கை எம்முடன் இணைந்திருக் கிறது.

நெருக்கடி சூழ்நிலையில் ஏற்பட்ட இழப்புகள் குறித்த புள்ளிவிபரங்கள் தொடர்பிலான தொடர்பாடல் முறையாக இடம்பெறவில்லை.

இந்த நிலையில் இராஜதந்திர, சட்ட மற்றும் நடவடிக்கைகளை அமுலாக்கும் கொள்ளளவு போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வி கண்டுள்ளது.

எமது அதிகாரிகளை மாறுபட்ட சூழ் நிலைகளில் ஒழுங்குபடுத்தவும், ஈடுபடுத்தவும், அபாயகரமான செயற்பாடுகளின் போது அவர்களுக்கு ஆதரவளிக்கவும் ஐக்கிய நாடுகள் தவறிவிட்டது.

தலைமையகத்தின் தெளிவான தலைமைவத்துவம் இல்லாமை, இந்த விடயத்தில் மாறுபட்ட செய்திகளை அனுப்ப வழி செய்த துடன், இதனால் நல்ல சந்தர்ப்பங்களும் இழக்கப்பட்டன. இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் ஆறு விதமான பரிந்துரைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பரிந்துரை- 1:** ஐக்கிய நாடுகளின் அனைத்து அதிகாரிகளின் சாதாரண வாழ்க்கை வட்டத்தில் மனித உரிமைகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

**பரிந்துரை- 2:** 99ம் இயல்பு சரத்து ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், ஐக்கிய நாடுகளின் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொறுப்புக்களை முறையாக மேற்கொள்ள வலியுறுத்தல்

**பரிந்துரை- 3:** மக்கள் நெருக்கடியான நிலையை எதிர்கொள்ளும் போது, ஐக்கிய நாடுகள் சபை அரசியல், மனித உரிமைகள், மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி இயலுமைகளை உறுதியான நிலையில் அதிகரித்துக் கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை கொண்டிருத்தல்.

**பரிந்துரை- 4:** ஐக்கிய நாடுகளின் தலைமையகத்துக்கும், உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பு நாடுகளில் தொழிற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் குழுக்களுக்கும் இடையில் அடிமட்டத்தில் இருந்து சிறந்த அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்வதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்படல். இதன் மூலம் அனர்த்த நிலைமைகளை முன்கூட்டியே சமாளிக்க முடியும்.

**பரிந்துரை- 5:** அதிக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்ற பகுதிகளில் அதனை பாதுகாப்பதற்கான முன்னெடுப்பில் துரித முன்னேற்றத்தை காண்பதற்கான வேலைத்திட்டம். இதற்கு அதிக செயற்பாட்டு இயலுமை அவசியப்படுவதுடன், மனித உரிமைகள் ஆணையகத்தின் ஒத்துழைப்பும் அவசியப்படுகிறது.

**பரிந்துரை-6:** உண்மையான தகவல்களை மிக விரைவாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்தல். இதன் மூலம் முன்கூட்டிய எச்சரிக்கைகளை வழங்குவதுடன், ஐக்கிய நாடுகளால் முற்கூட்டிய செயற்பாட்டினையும் முன்னெடுக்க முடியும்.

இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் ஏற்கெனவே ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் கூறப்பட்டவை. அவை புதியவை இல்லை. எனினும் இலங்கையின் இறுதிப்போரின் போது இவை முழுமையாக அமுலாக்கப்படவில்லை.

இந்தநிலையில் இனிவரும் காலப்பகுதியில் இது கட்டாயமாக முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் இலங்கையின் இறுதிக்கட்ட போர் தொடர்பாக உள்ளக அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.(எ-11)

## முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மகன் பட்டப்படிப்பில் சாதனை படைத்தார்



இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA Sri Lanka) பிஸ்னஸ் ஸ்கூலைச் சேர்ந்த இரண்டு இலங்கை மாணவர்கள் அண்மையில் அவுஸ்திரேலியா தென் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட எம்.பி.ஏ பட்டப் படிப்பை உயர்ந்த தர பெறுபேறுகளுடன் நிறைவு செய்து சாதனை படைத்துள்ளனர்.


யௌவனகுகன் விக்னேஸ்வரன் மற்றும் நதிகே மகேஷ்குமார ராஜபக்ஷ ஆகிய இருவருமே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மேற்குறித்த பல்கலைக்கழகத்தில் சாதனை படைத்துள்ளனர். பல்வேறு சமூக தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டதன் மூலமும் தேர்வுக் குழுவினரின் பாராட்டைப் பெற்றதன் மூலமும இவர்கள் இச் சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்த இருவருடன் மலேசியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் சீன நாட்டைச் சேர்ந்த மாணவர்களும் இந்தக் கற்கை நெறியில் ஈடுபட்டிருந்த போதிலும் இலங்கையைச் சேர்ந்த மேற்குறித்த இருவரும் சாதனை படைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யௌவனகுகன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் மகன் என்பது குறிப்பிடத் தக்கது. (ந)

## தமிழர் பிரச்சினை தொடர்பில் தெளிவான திட்டம் தேவை!

### ஜி.கே.வாசன் கோரிக்கை



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தெளிவான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று எட்டப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சல்மான் குர்ஷித்தின் இலங்கை விஜயம், தமிழக மீனவர்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளுக்கு விரைவில் தீர்வு காண வழியமைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

13ம் திருத்தச் சட்ட அமுலாக்கம் தமிழர்களின் உரிமைகள் போன்ற விவகாரங்களின் அடிப்படையிலேயே பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பாரா என்பது தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலில்...

பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் உறுப்பினரான மாகாண சபை உறுப்பினர் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் மற்றும் ஈ.பி. ஆர். எல்.எப்பின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் இணைந்து பத்திரிகையாளர் சந்திப்பினை நடத்தியிருந்தனர்.

இச்சந்திப்பின்போதே அவர்கள் மேற் கண்டவாறு கூட்டாகத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு விழாவினை பதவிகளுக்காக நாம் புறக்கணிக்கவில்லை. தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான நடவடிக்கைகள் தொடர்கின்றன. இதற்காகவே நாம் பதவியேற்பு விழாவினை புறக்கணித் திருந்தோம்.

போர்க் குற்றவாளியின் முன்னர் முதலமைச்சர் சத்தியப்பிரமாணம் செய்வதனை நாம் எதிர்த்து சமயப் பெரியார்கள் முன்னிலையில் செய்யுமாறு கோரியிருந்தோம். ஆனால் எமது கருத்து ஏற்கப்படாமல் தமிழரசுக் கட்சி தன்னிச்சையாகவே முடிவெடுத்தது.

எங்களைப் பொறுத்தவரையில் நாம் கூட்டமைப்பிலிருந்து சர்வதேச விசாரணை தேவை என்பன உட்பட மக்களின் நலன்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்.

ஆனால் தமிழரசுக் கட்சி எம்மை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக வெளிநாட்டு நிகழ்சி நிரலின் கீழ் இயங்குவது போன்று தெரிகின்றது.

தமிழ் மக்கள் தனியொருவருக்காக வாக்களிக்கவில்லை கூட்டமைப்பிற்கே வாக்களித்துள்ளனர். நாம் தமிழ் மக்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டுள்ளோம்.

நாம் அமைச்சுக்களுக்காகவும் பதவிகளுக்காகவும் அரசியலுக்குள் வரவில்லை. நாம் மக்களுக்காகப் போராடியவர்கள். ஆகவே எம் கோரிக்கை தொடர்பில் அச்சப்பட வேண்டியதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தினை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டு முயற்சியொன்று அவசியமாகும்.

ஆனால் கூட்டமைப்பினை உடைக்கும் முகமாக தேர்தலுக்கு பின்னதாக கூட்டமைப்பில் உள்ள இயக்கங்கள் மீதும் தனிப்புட்ட நபர்களுக்கு எதிராகவும் சேறு பூசும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கூட்டமைப்பின் பதவியேற்பு விழாவில் சுமந்திரன் கூறியிருந்தார் அமைச்சுப் பதவிகள் கேட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. கேட்காதவர்களுக்கு வழங்கப்பட்டது என இதனைப் பேசுவதற்கு சுமந்திரனுக்கு என்ன அதிகாரம் உள்ளது?

இவையும் எம்முடன் கலந்து பேசி தெரிவு செய்யப்படவில்லை. தமிழரசுக் கட்சி தவறிழைக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்கின்றது என்றே மக்கள் கேட்கின்றனர்.

நடைபெறுகின்ற தவறுகளை நாம் வாய்மூடி பார்த்துக் கொண்டிருந்தால் பின்பு அது பெருந்தவறாகி விடும்.

பதவியேற்பு புறக்கணிப்பு என்பது எமது எதிர்ப்பு மட்டுமே தவிர மாகாண சபையினை குழப்புவது எமது நோக்கமல்ல என்றனர். (எ-4)

## மரண அறிவித்தல்



திருமதி

**இரத்தினபூபதி துரைராசா**

சுதுமலையை பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினபூபதி துரைராசா நேற்று (12.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா அன்னப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, விஜயகுமாரி, ராசகுமாரி, சசிகலா, சுரேஸ் குமார் (கரிகரின்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி விவேகானந்தன், இரங்கசாமி, தனலக்சுமியின் மாமியாரும், யசோதரன், கலைமதி, நவநீதன் யசோதா, கவிதா யோகநாதன், சுதன், குயிந்தா, நிறோஷா, சஜீவன், திலக்ஷன், விஷாலினி, தனிகை, நிறோஜினி, தயானி, நிதுபன், டஞ்சி, தனலக்சுமி, அனுசியா ஆகியோரின் பேர்த்தியும் டனுசிகா, கிருஷாந்தன், ஜிறுசிகா, டலுக்ஷிகா, கிருத்திகா, கிருஷாலி, டிஷாந்தன், நிஷாலினி ஆகியோரின் பூட்டிய மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 13.10.2013 இன்று பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி, கல்வியங்காடு.
தொலைபேசி : 0774011222,
0772180479 (4166)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



திருமதி

**லோகரூபி சுரேஷ்குமார்**

அன்னை மடியில் 19.11.1983 — இறைவன் அடியில் 10.10.2013

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காரைக்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகரூபி சுரேஷ்குமார் 10.10.2013 வியாழக் கிழமையன்று இறைபதமடைந்தார். அன்னார் சபாரத்தினம் - சீதாலஷ்மி தம்பதியரின் அன்பு மகளும் அப்புத்துரை சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரேஷ்குமாரின் அன்பு மனைவியும்,

மோகனதாஸ் (மோகன் - புத்தளம்), குகனதாஸ் (குகன் - கோண்டாவில்), கௌரி (கனடா), கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமார் (சுவிஸ்) சுகந்தன் (லண்டன்) அன்புக்கரசி (நோர்வே), நிரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (கனடா), ஸ்ரீரஜனி (புத்தளம்), காஞ்சனா (கோண்டாவில்) ஸ்ரீகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் பத்மாவதி, தர்சினி, சூரியகுமார், யோகேஸ்வரன், கலியுகவரதன் ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.10.2013 திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. சுரேஷ்குமார் (கணவர்)

இணுவில் கிழக்கு,
காரைக்கால். (சி-5172)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Spoken English & Diploma in English

City & Guilds

## Opening the Door to the Modern World

International English Language Qualifications
City & Guilds Offers a wide range of English language Qualifications suitable for students and people of all ages engaged in work & business.They develop Speaking , Writing,Reading and Listening skills using real- life examples and tasks from entry to advanced level.



குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற: சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப் பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திக்கையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், I.N.G.O.S மற்றம் வெளிநாட்டு நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினைப் பெற அரியதோர் பாடநெறி. City & Guilds இன் சான்றிதழ்கள் உலகம் முழுவதும் அங்கிகாரம் பெற்றவையாகும்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
**14-10-2013**
Batch - I = 8.30 - 10.30
Batch - II = 2pm - 4pm



## BRITISH COLLEGE OF ENGLISH

**City & Guilds Approved centre**
192, Navalar Road, Jaffna. T.P: 0755435089, 0778803887

---

# புலமை கல்வி நிறுவனம்

தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
ஆசிரியர் திரு. **க. கலாமோகன்** BA, Dip. in Teach.
காலம் : 14.10.2013 திங்கட்கிழமை

தரம் 4 (தற்போது 3) மாலை 4.00 பிரிவு - I
தரம் 5 (தற்போது 4) மாலை 5.00 பிரிவு - II

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

- இயக்குநர்கள் -

(4145)

---

## திடீர்...

இப் பிரதேச மீனவர்கள் கடந்த 2004-ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சுனாமியினால் பாதிப்படைந்ததன் பின்னர் தற்போது இடம் பெற்ற கடல் கொந்தளிப் பினாலேயே சேதத்தை எதிர் நோக்கினர்.

எனவே பாதிக்கப்பட்ட மீனவர்களின் தொழிலினை மீண்டும் முன்னெடுக்க உரியவர்களை நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(எ-9,64)

---

## University of Bedfordshire — Study in the UK

**Great location:** 30 minutes from London
* **Merit Scholarships Available**

- Top 10 University for International Students
- Honorary Doctorate given to Actor Shah Rukh Khan
- Queen's Award for Enterprise : International Trade 2011
- Award: International Student Recruitment Team of the Year 2009

www.beds.ac.uk

**Spot Admissions for February 2014 Intake**

**Postgraduate / Undergraduate Courses**
MBA / Business & Management / Computing / Finance & Accounting / HRM Engineering / Pharmacology / Public Health / Art & Design / Biotech / Education Information Systems / Media / Marketing / Law / Nursing / Psychology / Tourism.

**To find out more meet our Regional Representative Mr Jagat Patel & Regional Officer**

| | |
|---|---|
| Date: 23 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Thames International<br>136 B 1/1 High Level Road,<br>Nugegoda 10250, Sri Lanka<br>Tel No: 011 431 9027 / 0714 16 0178 | Date: 23 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: ICBT Study Abroad<br>R A De Mel Mawatha<br>(Opp. British Council), Colombo.<br>Tel No: 0773 442628 |
| Date: 24 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Loho Group Office<br>Lucky Plaza Building. 4/7, 4th Floor<br>St. Anthony's, Mawatha, Kollupitiya.<br>Tel No: 0777 917929 / 0773 498660 | Date: 24 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Achievers International<br>[UCAS Visa Center] W.A. Silva Mw,<br>Colombo 06,Wellawatha ,Srilanka.<br>Tel No: 0779 568350 / 0777 887050 |
| Date: 24 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: Australian Busi. Edu. Centre<br>No 10 A, Rotunda Garden,<br>Colombo 03, Sri Lanka.<br>Tel No: 0770 692940 / 0773 265931 | Date: 25 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Campus Direct<br>No: 102 A Horton Place<br>Colombo 7, Sri Lanka.<br>Tel No: 077 824 6666 / 072 222 3522 |

**Please Bring your Academic Documents for Spot Admission to the Venue**

---

## 25 உறுப்பினர்...

பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக மீள்குடியேற்றம் என்ற அமைச்சுப் பொறுப்பினையும், புனர் நிர்மாணம் எனும் அமைச்சுப் பொறுப்பினையும் முல்லை மாவட்ட தலைமை வேட்பாளராக நின்ற அன்ரன் ஜெயநாதன் என்பவருக்கு வழங்கியுள்ளோம்.

இம்மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களுக்கான அமைச்சு அலகினை அஸ்மினிடம் வழங்கியுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் நிறைவுற்றுள்ள நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சி அலுவலகங்களினை திறப்பது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

இவ் அலுவலகங்கள் ஊடாக மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளோடு இணைந்து பேசி மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

மக்கள் மதங்களினால் பிரிக்கப்பட்ட காலம் சென்று மக்கள் மனிதர்களாக ஒன்று சேருவதற்கான காலம் கனிந்துவிட்டது.

எந்த மதத்திற்கு அடக்குமுறை இடம்பெற்றாலும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் என்று பாராது ஒருமித்து அவ் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களும் மனிதாபிமானம் கொண்டவர்களும் ஒன்று சேரும் காலம் உருவாகியுள்ளது. நாம் அனைவரும் சேர்ந்து பாரிய மாற்றத்தினை ஏற்படுத்துவோம் என்றார். (எ-4)

---

உங்கள் நிரந்தர வாழ்வினை தீர்மானிக்கும் எங்கள் நிரந்தர வேலை வாய்ப்பு பிரதான தொழிற்சாலைகளான கோடியல்/ ஜேம்/பிஸ்கட்/கோழி இறைச்சி/காமென்ட் பால்மா PVC கிளவுஸ், தேயிலை, பொலித்தீன் போன்ற தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர், லேபல் பொதியிடல், தரம் பிரித்தல் பிரிவுக்கு 17 -50 வயது ஆண் பெண் தேவை. சம்பளம் 18,000/-, 25,000/-, 32,000/- உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும். வருகை அன்றே வேலை வாய்ப்பு

**தொடர்பு: 0775583806/ 0777117661**

(C-5163)

---

வேலையில்லாத பிரச்சினையை தீர்க்க எம்மிடம் கைகோருங்கள். எம்மிடம் நிரந்தர தொழில் கப்பல் புனர்நிர்மாண வேலைகளான தச்சு/வெல்டர்/ பெயின்டர்/சாதாரண ஊழியர்களும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர்/கேட்டரீஸ்/ காகோ பிரிவுகளில் 18 -50 ஆண் பெண் தேவை. சம்பளம் 20,000/- 45,000/- (தொழில் அடிப்படையில் சம்பளம்) உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்)

**தொ.பே: 0774312176/0775561883**

(சி-5164)

---

தற்பொழுது உள்நாட்டில் கல்வியுள்ளோர்/அற்றோர் 18-50 ஆண்-பெண் இருபாலாருக்கும் உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு. இன்றே பதிவுக்கு முந்துங்கள் ஜேம்/கோடியல்/சோயா/பிளாஸ்டி/கோழி இறைச்சி/ தேயிலை/பிளாஸ்டிக் பை/பென்சி போன்ற தயாரிப்புக்கு உற்பத்தி உதவியாளர், லேபல் பொதியிடல், தரம்பிரித்தல் பிரிவுக்கு உடனடியாக தேவை. உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். சம்பளம் 18,000/-, 25,000/-, 32, 800/- மேல் வருகை அன்றே வேலை வாய்ப்பு
(நண்பர்கள் குழுக்கள் தம்பதியர் அனைவரும்)

(சி-5166) **0775561883, 0778430179**

---

## யாழ்ப்பாண விவசாயிக்களுக்கு நற்செய்தி

எமக்கு தரமான தக்காளி (100 கிலோ) மற்றும் கத்தரிக்காய் (50 கிலோ) தினமும் பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கொடுப்பனவு ஆர்டிபி வங்கி ஊடாக 24 மணித்தியாலத்திற்குள் செலுத்தப்படும்.

உங்களுக்கு ஆர்வம் இருப்பின், தயவு செய்து **077-7377813** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உரையாடவும்.

(4150)

---

## கடை வாடகைக்கு உண்டு

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள சின்னத்துரை கட்டிடத்திலுள்ள கடை. 40 அடி நீளம் 11 அடி அகலம்.

தொடர்புக்கு :
**0777207539**

(C-5135)

---

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(Gov. Reg.No: W/A 76795)

**Vivekananda Academy** ,0212220393

**221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.**

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795)

(C-5161)

---

**SCHOLARSHIPS UP TO £ 2000**
**WORLD CLASS FACILITIES**
**HIGH QUALITY TEACHING**
**EXCELLENT STUDENT SUPPORT**
**LONDON 30-45 MINUTES BY TRAIN**

Anglia Ruskin University
Cambridge & Chelmsford

**SPOT ADMISSION FOR FEBRUARY 2014 — MEET THE DELEGATE**

CHOOSE FROM A WIDE RANGE OF COURSES

| | |
|---|---|
| ACCA ⟷ | MBA |
| Nursing (with ONP) ⟷ | Hospital Administration (MBA) |
| Physiotherapy ⟷ | Business Management |
| Biotechnology ⟷ | Biomedical Sciences |
| Accounting and Finance ⟷ | International Finance |
| Information Technology ⟷ | Engineering |
| Media and Communication ⟷ | Marketing and Innovation |
| Network Security and Management ⟷ | International Entrepreneurship |
| Built Environment ⟷ | Fashion Design |

| | |
|---|---|
| Date: 23 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Thames International<br>136 B 1/1 High Level Road,<br>Nugegoda 10250, Sri Lanka<br>Tel No: 011 431 9027 / 0714 16 0178 | Date: 23 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: ICBT Study Abroad<br>R A De Mel Mawatha<br>(opp. British Council), Colombo<br>Tel No: 0773 442628 |
| Date: 24 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Loho Group Office<br>Lucky Plaza Building. 4/7, 4th Floor<br>St. Anthony's, Mawatha, Kollupitiya<br>Tel No: 0777 917929, 0773 498660 | Date: 24 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: Australian Busi. Edu. Centre<br>No 10 A, Rotunda Garden,<br>Colombo 03, Sri Lanka<br>Tel No: 0770 692940 / 0773 265931 |

Date: 25 October 2013 Time: 11.00 - 1.30 pm
Venue: Campus Direct
No: 102 A Horton Place, Colombo 7, Sri Lanka
Tel No: 077 824 6666 / 072 222 3522

www.anglia.ac.uk answers@anglia.ac.uk

---

## சேவை முகவர்

**காணிகள், வீடு விற்பனைக்கு**

கொக்குவில், பலாலி வீதியில் வீடுவளவு, ஊரெழு, மணற்தறை லேன், கெனடிலேன், வைமன் வீதி, நுணாவில் 21 பரப்பு புதிய தென்னங்காணி விற்பனைக்குண்டு. யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
திரு.வி.சுந்தரம் T.P: 077 481 9801

(4165)

---

## பிரத்தியேக கணினி வகுப்பு

*உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
*DTP(Photoshop CS5, CorelDraw X4, PageMaker) Ms office, Internet & E-mail, Web Design.
*சிறுவர்களிற்கான கற்கைநெறி-(ஆண்டு 1-6)
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும் **10வருட அனுபவம்**
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.

**TP:0779672038** **ஆசிரியர்:KRC**

---

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் எம்மிடம் நிரந்தர தொழில். மேசன்/செடலின்பாஸ்/ பெயின்டர்/டயில்பாஸ்/தச்சு கை உதவியாளர்கள் உடனடியாக தேவை. சம்பளம் 20,000/-, 45,000/- தினமும் கைச்செலவு, வாரச் சம்பளம் உண்டு. தங்குமிடம் இலவசம்.

**தொடர்பு: 0775561883**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.